www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

உள்ளே...

★ வளைகுடா பதற்றம்: யார் குற்றவாளி?

★ தி.க. வீரமணியின் பிழைப்புவாதம்!

மார்க்சிய – லெனினிய அரசியல் ஏடு
16 – 31 ஆகஸ்டு '90 5/19 விலை ரூ.2

# தொழிலாளர்களை ஒடுக்க புதிய சதி!




படிப்பகம்

www.padippakam.com



# சாதிவெறியர்களின் அக்கிரமம்

வன்னியர்களும், 'அரிசனங்'களும் அதிகம் வசிக்கும் தவுத்தாய் குளம் என்ற கிராமம் திருச்சியிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் கூலி ஏழைகளான 'அரிசனங்'கள் மீது வன்னியர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இங்கு டீக்கடையில் கூட 'அரிசனங்'களுக்கென்று தனி 'கிளாஸ்' வைத்திருக்கிறார்கள். இச்சாதிய அடக்குமுறை 3.8.90 அன்று உள்ளூர் சாதிவெறியர்களால் கலவரமாக மாறியது.

ஊர் பஞ்சாயத்து தலைவர் (வன்னியர்) கிருஷ்ணமூர்த்தியின் அண்ணன் மற்றும் அக்கா மகன்களுக்கும் அவர்கள் சாதியைச் சேர்ந்த சண்முகம் என்பவருக்கும் நெடுநாளாக பகை இருந்து வந்தது. 3.8.90 அன்று ஏரிக்கரையிலிருக்கும் சண்முகத்தை அடிக்கச் சென்றவர்கள் அங்கிருந்த இராஜேந்திரன், அண்ணாதுரை என்பவர்களை ('அரிசனங்'கள்) ''நீங்கள் தான் சண்முகத்தின் அடியாட்களா'' எனக் கேட்டு பலமாக தாக்கினார்கள். இதனால் 'அரிசன' சேரிப்பகுதி மக்கள் ஆத்திரமடைந்து ஒன்று கூடினர். நிலைமை விபரீதமாகி விடக்கூடாதென சேரிப்பகுதிப் பெரியவரான கருப்பையா மக்களைக் கட்டுப்படுத்தினார்.

ஆனால் அச்சமயத்தில் பஞ்சாயத்து தலைவர் கிருஷ்ணமூர்த்தி 10, 15 ஆட்களுடன் சேரியில் புகுந்து பெரியவர், பெண்கள் என்றில்லாமல் அனைவரையும் கம்பு மற்றும் சைக்கிள் செயினாலும் தாக்கியதில் பலருக்கு பலத்த காயமேற்பட்டது. பாப்பா, சின்னமுத்து என்பவரின் மனைவி, ஜெயராமன் போன்றவர்கள் படுகாயமடைந்தனர். ஜெயராமன் நடக்கமுடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டதால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கட்டிலில் வைத்து தூக்கிச் சென்றவர்களையும் கட்டிலை பிடுங்கியெறிந்து வெறித்தனமாகத் தாக்கியது வன்னியர் கும்பல்.

அரியலூர் போலீஸ் ஸ்டேசனுக்குச் சென்று புகார் செய்ய சேரிமக்கள் சென்றனர். ஆனால், அதற்கு முன்பே பஞ்சாயத்து தலைவர் தனது அண்ணன் ரெங்கநாதன் தலைமையில் சிலருக்கு 'பிளேடு' காயங்களை ஏற்படுத்தி மருத்துவமனையில் படுக்கவைத்து 'அரிசனங்'கள் தாக்கியதாக புகார் கொடுத்திருந்தார். போலீசும் வன்னியர்களுக்கு சாதகமாக அமையும்படி புகார் மனுவை பதிவு செய்து கொண்டது. மருத்துவமனையிலும் சிகிச்சையளிப்பதில் வன்னியர்கள் சிறப்பாக கவனிக்கப்பட்டதும் 'அரிசனங்'கள் புறக்கணிக்கப்பட்டதும் நடந்தது. தொகுதி எம்.எல்.ஏ. (ஆறுமுகம் - தி.மு.க.)வின் ஆதரவைக் கொண்டும், பணத்தைக் கொண்டும் இந்தவேலையைச் செய்து முடித்தார் பஞ்சாயத்து தலைவர். கடைசியில் எம்.எல்.ஏ. ஆறுமுகத்தை வைத்தே வன்னியர்களையும், 'அரிசனங்'களையும் கூட்டி வைத்து, சமாதான ஒப்பந்தம் நிறைவேற்றினார். 5.8.90 அன்று நடந்த சமாதான ஒப்பந்தத்தில் 'அரிசனங்'களும் வேறுவழியில்லாமல் கையெழுத்து போட்டனர்.

சாதிமதக் கலவரங்களுக்கு காரணமாக இருப்பவர்கள் அதை தூண்டிவிட்டு ஆதாயமடைபவர்கள் ஆதிக்கசக்திகளும், ஓட்டுப் பொறுக்கிகளும்தான் என்பதை 'அரிசனங்'களுக்கு மட்டுமல்ல; வன்னியர் மற்றும் பிற சாதி உழைப்பாளி மக்களுக்கும் இச்சம்பவம் அடையாளம் காட்டி உள்ளது.

தகவல்: பு.ஜ.வாசகர் வட்டம்,
அரியலூர்.

# புதிய ஜனநாயகத்தின் மீது வழக்கு!

1 - 28 பிப் 1990 - புதிய ஜனநாயகம் இதழில் ஜோதிபிரகாசம் என்பவரின் தலைமையிலான தமிழர் கழகம் என்ற அமைப்பைப் பற்றி ஒரு பெட்டி செய்தி வெளியிட்டிருந்தோம். அதில், ''தமிழ்த் தேசிய அமைப்புகளுக்குள் புகுந்து, பிளவுபடுத்தி, மோதவிட்டு, ரத்தம் குடிக்கும் நோக்கத்தில் டிராட்ஸ்கிய வாதிகளாலும், 'ரா' வாலும் ஜோதிப் பிரகாசம் தலைமையிலான ஒரு தமிழ்த் தேசிய இன விடுதலை அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது'' என்று எச்சரித்திருந்தோம்.

அச்செய்தியை ''அவதூறு'' என்றும் அதனால் நமக்கு ஏற்பட்ட மான இழப்பினை ஈடு கட்டும் வகையில் ரூபாய் ஒரு லட்சத்தை 15 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் என்று கேட்டு வக்கீல் நோட்டீசு விட்டிருந்தார், ஜோதிபிரகாசம். அதற்காக மன்னிப்புக்கோரி செய்தி வெளியிடாவிட்டால் குற்றவியல், உரிமையியல் வழக்குகள் தொடுப்பதாகவும் எச்சரித்து இருந்தார். அதற்கு நாம் 1 - 15 மார்ச் இதழில் பதிலளித்திருந்தோம்.

அந்த செய்தி வெளியிட்டதற்காக ''புதிய ஜனநாயகம் வருத்தமோ, மன்னிப்போ மறுப்போ தெரிவிக்கப் போவதில்லை; அவரது மான இழப்புக்கு நட்டஈடும் தரப் போவதில்லை'' என்று தெளிவாக கூறினோம்.

அதற்கு ஜோதி பிரகாசம் ஒரு நேரடிக் கடிதம் எழுதினார். அதில் அவரது அமைப்பைப் பற்றியான நமது கணிப்புகள், புகார்கள் சரியானவை என்பதை மறைமுகமாக ஒப்புக் கொண்டு வாக்குமூலம் தந்தார். அதன் கருக்கத்தையும் 1 - 15 ஏப்ரல் இதழில் நாம் வாசகர்களுக்கு தெரிவித்து இருந்தோம். அதற்கு 9.4.90ல் மீண்டும் ஒரு நேரடி கடிதம் எழுதினார்.

அதில் அவருடைய பதிலை புதிய ஜனநாயகத்தில் ''திரித்து'' வெளியிட்டு விட்டதாக புளுகினார். அரைகுறையாக வெளியிட்டதாகக் கூறினார். ''இந்நிலையில், நீதிமன்றம் சென்று நியாயம் கேட்பதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை'' என்று அப்பாவி போல் எழுதினார். அதன் பிறகு பெருநகர குற்றவியல் நீதிமன்றம், சைதாப்பேட்டை, சென்னை-15 லிருந்து புதிய ஜனநாயகத்திற்கு 9.7.90 'சம்மன்' வந்தது.

1. எஸ்.மதியழகன் ஆசிரியர், மற்றும் வெளியிடுபவர், 2. திரு.மாணிக்கவாசகம், கட்டுரையாளர் 3. திரு எம்.கே.சாமி அச்சிடுபவர், பிரேம் பிரஸ் உரிமையாளர் ஆகிய மூவர் மீதும், பிரிவு 499, 500, 501 மற்றும் 502 ஆகிய குற்றவியல் சட்டங்களின் கீழ் கிரிமினல் வழக்கு தொடுத்துள்ளார், ஜோதி பிரகாசம். இப்போது வழக்கு விசாரணையில் உள்ளது. புதிய ஜனநாயகம் சார்பில் மீண்டும் சொல்கிறோம். இதைக்கண்டு நாங்கள் அஞ்சிடவோ பின்வாங்கியோ மாட்டோம். ஜோதிப் பிராசம் விவகாரங்கள் அவரைப் போன்றவர்களை அம்பலப்படுத்துவதோடு நேர்மையான தமிழ்த் தேசிய அமைப்புகளை விழிப்புறவும் செய்யும் என்பதில் மகிழ்ச்சியே அடைவோம்! வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு, புதிய ஜனநாயகம்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

5-19

16 - 31 ஆகஸ்டு '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# இடஒதுக்கீடு: மீண்டும் மேல்சாதி, மேட்டுக்குடிச் சண்டை

மண்டல் கமிஷன் அறிக்கையை ஏற்று, சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய பிற்பட்ட சாதியினருக்கு இடஒதுக்கீடு செய்வதாக ஜனதாதள - தேசிய முன்னணி அரசாங்கம் அறிவித்துள்ளது. விதிவிலக்கின்றி எல்லா அரசியல் கட்சிகளும் இதை வரவேற்றுள்ளன. அம்பேத்கார் நூற்றாண்டு கொண்டாடும் சமூக நீதி ஆண்டில் எடுக்கப்படும் பெருஞ்சிறப்பு வாய்ந்த முடிவெனப் பெருமைப்பட்டுக் கொள்கிறார், பிரதமர். ஆனால் பல்வேறு சாக்குப் போக்குகள் சொல்லி இதுவரை இழுத்தடிக்கப்பட்டு வந்தது; ஜனதாதள அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுத்திய தேவிலால் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் கும்பல் திரட்டி விவசாயிகள் புறக்கணிப்பு, இடஒதுக்கீடு, போன்ற 'கவர்ச்சி' முழக்கங்களை எழுப்பி ஆதரவு திரட்டியது; அதற்கு எதிர் நடவடிக்கையாக தொடர்ந்து சில சலுகைகளை அரசு அறிவித்து வருவது; மண்டல் கமிஷன் அறிக்கையை அமுலாக்குவது, விவசாயக் கடன்கள் ரத்து செய்வது, 1990களை விவசாயிகளின் பத்தாண்டுகளாக்கி முன்னுரிமை தருவது - இவையெல்லாம் நாட்டுமக்கள் அறிவர்.

தி.க., தி.மு.க. மற்றும் பல சாதிச் சங்கங்களும், பிற்பட்ட சாதிப் பிரமுகர்களும் மண்டல் கமிஷன் அறிக்கை மீதான முடிவு தமது கோரிக்கைக்கு, சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றியெனக் கொண்டாடுகின்றனர்; தேசிய முன்னணி அரசுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கின்றனர். ஆனால் இடஒதுக்கீடு எதிர்ப்பு - மேல்சாதி - கலவரங்கள் பீகாரைக் குலுக்குகின்றன. அரசுக் கட்டிடங்கள், ரயில் நிலையங்கள், போக்குவரத்து சாதனங்கள் கொளுத்தப்படுகின்றன. தடியடி, துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன. மேற்கு வங்கம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைத் தொட்டுள்ள இக்கலவரங்கள் வடநாடு முழுவதும், ஆந்திரா, கர்நாடகாவுக்கும் பரவும்; அரசு எதிர்ப்புக் கலவரங்களாக இருந்து சாதிக் கலவரங்களாக வெடிக்கும் - அபாயம் நிலவுகிறது.

பார்ப்பன - பனியா மற்றும் பிற மேல்சாதி ஆதிக்கத்தில் உள்ள இந்தியப் பத்திரிக்கைகள் அனைத்தும் இடஒதுக்கீடு முடிவுக்கு எதிராக நெருப்பைக் கொட்டுகின்றன. இடஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்டுள்ள பாரதீய ஜனதா, அதை அமுலாக்கும் ஜனதாதள அரசு ஆகியவற்றின் ஊதுகுழலான இந்தியன் எக்ஸ்பிரஸ் கோயங்கா, அருண்ஷோரி கும்பல் இன்னும் ஒருபடி மேலே போயுள்ளது. "மத்திய அரசின் இந்த பொறுப்பற்ற சந்தர்ப்பவாத, அழிவுத்தன்மையுள்ள முடிவானது தேசிய நலன்களுக்கே ஆபத்தானது. இப்போது பரவிவரும் இடஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சி தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கானது. தேசத்தைப் பேரழிவிலிருந்து காக்க வேண்டுமானால் இந்தக் கிளர்ச்சியை மாணவர்களும் மற்றவர்களும் மேலும் ஆழமாக்கிப் பரப்பிட வேண்டும்" என்று ஆத்திரத்தோடு கூச்சல் போடுகிறது.

மண்டல் அறிக்கையின் ஒருபகுதி மீதுதான் இப்போது முடிவு செய்துள்ளனர். கல்வி வசதிக்கான இடஒதுக்கீடு பற்றி முடிவாகவில்லை. எவையெவை பிற்பட்ட சாதிகள் என்பதற்கான மாநில அரசுகளின் பட்டியலும், மண்டல் அறிக்கைப் பட்டியலும் வேறுவேறானவையாக உள்ளன. இப்போதைக்கு இரண்டிலும் பொதுவாக உள்ள சாதிகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு செய்யப்படும். மண்டல் அறிக்கையின்படி 3,743 சாதிகள் பிற்பட்டவை. ஏற்கனவே மாநில அரசுகள் அறிவித்துள்ள சாதிப் பட்டியல்களின்படி 70 — 90% மக்கள் இடஒதுக்கீட்டிற்கான தகுதியுடையவர் என்றாகி இடஒதுக்கீடு முறையையே செல்லுபடியாகாமல் செய்து விட்டனர். இனி இடஒதுக்கீட்டை எதிர்த்து மட்டுமல்ல; அந்தப் பட்டியலில் சேர்க்கும்படி பல மேல் சாதியினர் கோரிப் போராடுவர். ஓட்டுப்பொறுக்குவதற்காக இந்தப் பட்டியலும் நீளும். அதோடு இடஒதுக்கீட்டை அதிகரிக்கும்படியும், மக்கள் தொகை அடிப்படையில் தனித்தனிச் சாதிகளுக்கு இடஒதுக்கீடு செய்யும்படியும் கோரிப் போராடுவர். இவற்றுக்காக சாதிச் சங்கங்களும், கலவரங்களும் பெருகும். இதைத்தான் 40 ஆண்டுகளாகப் பார்த்தும் வருகிறோம்.

சமூக உரிமை, கல்வி உரிமை, சொத்துரிமை மறுக்கப்பட்டு தீண்டாமை போன்ற காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறை, சுரண்டல் சமுதாய அமைப்பினால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடக்கி வைக்கப்பட்டிருந்தவர்கள், "சூத்திர மற்றும் சண்டாள" வர்ணங்களின் வழிவந்த தாழ்த்தப்பட்ட பழங்குடி சாதிகள் மட்டும்தான். சாதி என்கிற முறையில் தனிச் சிறப்பான முக்கியத்துவம் பெற்று முன்னேற்றப்பட வேண்டிய உரிமை உடையவர்கள் இவர்கள் மட்டும் தான். தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு எதிரான எல்லா சமூக அநீதிகளுக்கும் காரணமாயிருந்து ஆதாயம் அடைந்தவர்கள் பார்ப்பனர்கள் மட்டுமல்ல; இப்போது சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பிற்படுத்தப்பட்டவை என இடஒதுக்கீடு உரிமை கோரும் சத்திரிய, வைசிய வர்ண வழிவந்த சாதிகளும் தான் அவ்வாறு செய்தன. இன்னமும் சமூக அநீதிகள் தொடரவும், அதனால் ஆதாயம் அடைபவர்களும் இந்தச் சாதிகள்தான். இப்போதும் உழைக்கும் மக்களின் விடுதலைக்கான போராட்டங்களின் எதிரிகளாக அச்சாதிகளின் நிலப்பிரபுக்கள் இருப்பதோடு, சாதிய ரீதியில் மற்றவர்களையும் திரட்டி அவற்றை ஒடுக்குகின்றனர்.

இவ்வாறு சமூக ரீதியிலும், கல்வி ரீதியிலும் இன்னொரு பிரிவை அடக்கி ஒடுக்கிவரும் சாதிகளே தமக்கும் சமூக நீதி தரவேண்டும், தமக்கும் இடஒதுக்கீடு பெறுவதற்கான உரிமை உண்டெனக் கோருகின்றனர். ஆனால் குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்கள் என்கிற சாதித் தகுதிக்காக மட்டும் தனிச் சிறப்பான முக்கியத்துவம் பெற்று முன்னேற்றப்பட வேண்டிய உரிமை, பார்ப்பனர்களைப் போலவே, சத்திரிய, வைசிய வழிவந்த சாதிகள் எதற்குமே கிடையாது. மேலும் எந்த அரசு எந்திரத்தை அடித்து நொறுக்கித் தூக்கி எறிந்து விட்டு உழைக்கும் மக்கள் அதிகாரத்தை நிறுவுவதன் மூலம் சமூக நீதியை நிலைநாட்ட முடியுமோ முக்கியமாக அதிலே பங்கேற்று எதிரிக்குச் சேவை செய்வதற்காகத்தான் இந்தச் சண்டை நடக்கிறது. ஆகவே, பார்ப்பன, சத்திரிய, வைசிய வழிவந்த சாதிகளே இருபிரிவாக நின்று இடஒதுக்கீட்டை ஆதரித்தும் எதிர்த்தும் நடத்தும் இந்தச் சண்டையில் எதையும் ஆதரிக்க முடியாது; இதனால் சமூக நீதியும் கிட்டாது. ●

படிப்பகம்

www.padippakam.com

# தேவிலால் நீக்கம் – தீருமா நெருக்கடி?

சிறுபான்மை தேசிய முன்னணி ஆட்சி மற்றும் அதன் நாடாளுமன்ற கட்சிகள் ஏகோபித்த முறையில் தம்மை ஆதரிப்பதாக பிரமையை உருவாக்குவதில் தற்காலிகமாக வெற்றி பெற்றிருக்கிறார், பிரதமர் வி.பி.சிங். தேவிலாலின் அதிகாரத்திற்கான மோதலில் வி.பி.சிங்கின் பிரதமர் பதவியை பாதுகாக்கும் அடியாளாக பாரதீய ஜனதாக் கட்சி பகிரங்கமாக செயல்பட்டிருக்கிறது.

'வி.பி.சிங்கின் தலைமையை மாற்றினால் தே.மு. அரசுக்கு ஆதரவு தருவதை மறுபரிசீலனை செய்வோம்' என்று தேவிலால் கும்பலை பாரதீய ஜனதா மிரட்டி அடக்கியது. இதன் மூலம் தான் அங்கம் வகிக்கும் ஜனதாதள நாடாளுமன்ற கட்சி மற்றும் அதன் 3 மாநில முதல்வர்கள் ஆதரவை பேரம் - மிரட்டல் மூலம் பெற்று தன்னுடைய பலத்தை வி.பி.சிங் செயற்கையாக அதிகரித்துக் கொண்டார். 'போர்ஜரி' பேர்வழி, கொலைகாரன், கிரிமினல் அரசியலின் கதாநாயகனான தன்னுடைய அதிகாரப் பங்காளி தேவிலாலிடமிருந்து சதி, சூழ்ச்சி, அடிவெட்டு, அதிரடி அரசியல் மூலம் அதிகாரத்தை பிடுங்கிக் கொண்டார்.

தே.மு. அரசின் மந்திரி சபையிலிருந்து தேவிலால் வெளியேற்றப்பட்டது பிரதமர் வி.பி.சிங்கின் அரசியல் ஒழுக்க நெறிக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்று பா.ஜ.க.வும் போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளும் ஒன்றாக கூட்டுப்பாடல் இசைக்கின்றன. பா.ஜ.க. ஆதரவு இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் சங்கிலிதொடர் பார்ப்பனப் பத்திரிக்கைகள் முதல் 'சூத்திரர்' வீரமணியின் விடுதலை பத்திரிக்கை வரை வி.பி.சிங்கை வெற்றி வீரராக்கி வலம் வருகின்றன.

தேவிலாலின் செல்ல மகன் - கிரிமினல் அரசியல் வாரிசு - சௌதாலாவை அரியானா முதல்வர் பதவியிலிருந்து இரண்டாவது முறையாக அருண்நேரு - ஆரிப்முகமதுகான் போன்றோர் தலைகுப்புற கவிழ்த்தனர். வி.பி.சிங்கின் வலதுகரமான இவர்களை மத்திய மந்திரி சபையிலிருந்து வெளியேற்றி பழிவாங்கும் வெறியில் நிலைதவறி மண்ணைக் கவ்வினார், தேவிலால்.

வர்த்தக அமைச்சர் அருண்நேரு பாஸ்பாரிக் அமிலம், டை அமோனியம் பாஸ்பேட் இறக்குமதியில் - பொலிஸாரியோ என்ற இந்திய ஏஜென்சி மூலம் பேரத்தில் லட்சக்கணக்கான ரூபாய்கள் பெற்றவர், என்றார். விமானப் போக்குவரத்து மற்றும் விசைத்துறை அமைச்சர் ஆரிப் முகமதுகான் உத்திரப் பிரதேசத்தின் புறநகர் ஒன்றில் 55 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை சமீபத்தில் வாங்கினார், என்றார். இவர் தனது மின் அமைச்சகத்திற்கு மின்சார டர்பைன்கள் கொள்முதல் விஷயத்தில் பிரௌன் பொவேரி நிறுவனத்தின் மூலம் பல லட்சங்கள் கமிஷனாகப் பெற்றார் என்றும் குற்றம் சாட்டினார் தேவிலால்.

பிரதமர் வி.பி.சிங் இவ்விரண்டு ஊழல்களுக்கு ஆதாரங்களைக் கோரினார். சவடால் அடித்த தேவிலால் பிறகு பல்டி அடித்தார். அந்த அமைச்சர்கள் மீது புகார்களோ, குற்றச்சாட்டுகளோ தான் கூறவில்லை. காதில் பட்டதையே பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன் என்று உளறினார்.

அடுத்து, வி.பி.சிங்கை சம்பந்தப்படுத்தி அப்பட்டமாக ஒரு 'போர்ஜரி' கடிதத்தை தயாரித்தார், தேவிலால். போஃபார்ஸ் பீரங்கி பேரத்தில் அருண்நேரு சம்பந்தப்பட்டிருப்பதை குறிப்பிட்டு '87 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ந் தேதி ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு வி.பி.சிங் எழுதியதாக ஒரு மோசடிக் கடிதம் தயாரித்தார். அதன் நகல்களை ஜனாதிபதி, வி.பி.சிங் இருவருக்கும் அனுப்பி அவ்வாறான நபரை எப்படி மத்திய மந்திரி சபையில் வைத்திருக்கலாம் என்று கேள்வி கேட்டார்.

அக்கடிதம் வேறொரு 'லெட்டர் பேடி'லிருந்து வெட்டி ஒட்டிய 'போர்ஜரி' கடிதம் என்று சி.பி.ஐ. நிரூபித்தது. வி.பி.சிங்கும் தான் அவ்வாறு ஒரு கடிதம் எழுதியதில்லை என்று உறுதி செய்தார். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை 'போர்ஜரி' நகல் கடிதத்திற்கு அத்தாட்சி வழங்கிய பெங்களூர் சாந்தா என்ற வக்கீல் சகல மோசடி கடிதங்களுக்கும் அத்தாட்சி வழங்கும் நபர் என்பதை ஆதாராங்களுடன் நிரூபித்தது.

அதே நேரத்தில், 'இல்லஸ்ட்ரேட் வீக்லி' ஏட்டிற்கு தேவிலால் அளித்த பேட்டி வெளிவந்தது. அருண்நேருவை யானைக் குட்டி, தடிப்பயல் என்றும், வி.பி.சிங்கை முதுகெலும்பற்றவர் என்றும் அதில் வர்ணித்திருந்தார். வி.பி.சிங்கின் ஜன்மோர்ச்சா கும்பலில் (ராஜீவிடமிருந்து பிரிந்து வந்து வி.பி.சிங் ஆரம்பித்த் கட்சி) 12 நபர்கள் மட்டுமே நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும், அதன் சார்பாக 15 பேர் மத்திய மந்திரிகளாகியிருப்பதை குத்தி காட்டியிருந்தார். முடிவுகள் எடுப்பதில் வி.பி.சிங் முதுகெலும்பற்று இருப்பதால், வீணான சுமைகளை (தேவையற்ற நபர்களை) தே.மு. அரசாங்கம் சுமக்க வேண்டியிருக்கிறது என்றார். மக்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள் எல்லாம் மந்திரிகளாகி விட்டனர் என்று இதன்மூலம் சாடியிருந்தார்.

நேரத்தை எதிர்பார்த்து காத்திருந்த அருண்நேரு தங்கள் மீது திட்டமிட்டு களங்கம் சுமத்திய, புளுகிய, 'போர்ஜரி' கடிதம் தயாரித்த தேவிலாலை உடனடியாக பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றார். தேவிலால் ஆப்பசைத்த குரங்காக விழித்தார். இதற்காக கூட்டப்பட்ட அரசியல் விவகார உயர்மட்ட குழுவில் தம்செயலுக்கு மன்னிப்பு கோரினார். ஆனால் அதை எழுத்துப் பூர்வமாக தர மறுத்தார்.

இதற்குள் புயல் வேகத்தில் தேவிலால் எதிர்ப்பு கும்பல் ரகசிய கூட்டங்களை நடத்தி பதவி ஆசைகள் காட்டி புதுப் பேரங்கள் மூலம் தனது பலத்தை பெருக்கிக் கொண்டது. விருந்துக்கு அழைப்பது என்ற பெயரில் வி.பி.சிங், பா.ஜ.க. மற்றும் போலி கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களை கூட்டி காதை கடித்தார்.

உ.பி.முதல்வர் முலாயம்சிங் யாதவ், குஜராத் முதல்வர் சிமன்பாய் பட்டேல் தவிர மற்றவர்கள் தேவிலாலை வெளியேற்றும் வி.பி.சிங் - பா.ஜ.க. கூட்டு முடிவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

மறுபுறம், தேவிலால் - சந்திரசேகர் கும்பல் வி.பி.சிங் அணியிலிருந்து 40 எம்.பி.க்களை இழுத்து காங்கிரசு, அ.தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்து எப்படியும் தே.மு. அரசை கவிழ்த்துவிட கூடிக்கூடி திட்டமிட்டு சோர்ந்து போனது. இக்கும்பலுக்கு பின்னால், சந்திராசாமி, தே.மு. ஆட்சியால் பழிவாங்கப்பட்ட தரகு முதலாளி அம்பாணி, இந்துஜா, செயின்ட்கிட்ஸ் போர்ஜரி புகழ் சுப்பிரமணிய சாமி ஆகியோர் அணிவகுத்தனர். வி.பி.சிங்கின் பின்னால், தரகு முதலாளி கோயங்காவும், சில அமெரிக்க ஆதரவு ஏகாதிபத்திய நிறுவனங்களும், மதவெறி பா.ஜ.க.வும் கைக்கோர்த்து நின்றன.

கடைசியில் இரவோடு இரவாக தேவிலால், மந்திரிசபையிலிருந்து தூக்கியெறியப்பட்டார். அதிர்ச்சியடைந்த தேவிலால் - சந்திரசேகர் கும்பல் அடிவாங்கிய வெறியோடு பாயாமல், அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அமைதியாக சதித்திட்டம் தீட்டுகிறது.

இனிப்பான அதிர்ச்சியுடன் வெற்றியடைந்த வி.பி.சிங், அருண்நேரு, அஜித்சிங் கும்பல் வெற்றியை தக்க வைத்துக் கொள்வதிலும், அடுத்தக்கட்ட அடியெடுத்து வைப்பதிலும் முரண்பட்டு நிற்கிறது. கையோடு உ.பி. குஜராத், அரியானா மாநில முதல்வர்களை நீக்கி தேவிலாலுக்கு உடனடியாக இறுதி அடி கொடுக்க வேண்டும் என்கிறது அருண்நேரு, அஜித்சிங் கும்பல். இதற்காக அந்தந்த மாநிலங்களில், எம்.எல்.ஏ.க்களை விலைபேசும் குதிரை வியாபாரத்தில் குதித்திருக்கிறது.

ஆனால் வி.பி.சிங், பா.ஜ.க.வுடன் உறவு வைத்துக் கொண்டே, அதை முழுவதுமாக நம்பாமல், போலிக் கம்யூனிஸ்டுகளையும் 'இடது'சாரி கும்பலையும் அதிகமாக சார்ந்து முற்போக்கு வேடம் கட்டி அடுத்த அடிக்கு நகருகிறார். இந்தி பேசும் மாநிலங்களில் பெரும்பான்மையாக இருக்கும் தனது ஜாட் சாதி நிலப்பிரபுக்கள், பணக்கார, நடுத்தர விவசாயிகள் ஆதரவை சேர்க்கிறார், தேவிலால். அதை மறைத்து கிராமத்து பாமரர்களை தான் பிரதிநிதித்துவப் படுத்துவதால் நீக்கப்பட்டதாக ஆராவாரம் செய்யும் தேவிலாலை அதே வழியில் சந்திக்கிறார் வி.பி.சிங். இவ்வளவு நாள் காலிடுக்கில் செருகியிருந்த மண்டல் கமிஷன் அறிக்கையை அவசரமாக அமுல்படுத்துகிறார். பிற்படுத்தப்பட்ட சாமான்ய மக்களுக்கு அரசு அதிகாரத்தில் 40 விழுக்காடு ஒதுக்கப் போவதாக முழங்குகிறார். இதன்மூலம் பெரும்பான்மை ஜாட் சாதியினருக்கு எதிராக, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவை வி.பி.சிங் திரட்டுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

மறுபுறம் சிறுபான்மை மதப் பாதுகாவலனாக காட்டிக் கொள்ள, சுதந்திரதின உரையில் முகமதுநபி பிறந்த நாளுக்கு தேசிய விடுமுறை விடப்படும் என்றார். பதவி சுகங்களையும், அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்ளவும், அதிகாரத்தை பிடிக்கவும் முண்டியடித்து மலிவான உத்தியையும் பிரச்சாரத்தையும் ஆளும் கும்பல்கள் கையாளுகின்றனர். அதை மறைக்க ஆளுக்கு ஆள் இப்படி லட்சிய வேஷம் பூசிக் கொள்கின்றனர்.

○ ● ○

வி.பி.சிங் கும்பல் ஆதரவு ஆளும் வர்க்க அறிவார்ந்த பிரதிநிதிகள், இனிமேலும் தே.மு. ஆட்சியில் நெருக்கடி ஏதும் இல்லை என்று மக்களை நம்பவைக்க முயற்சிக்கின்றனர். அதுமட்டுமல்ல; வி.பி.சிங் அரசு எப்படிச் செல்ல வேண்டும், என்ன செய்ய வேண்டும், யாரைக் கண்டிக்க வேண்டும், யாரை நம்ப வேண்டும் என்று அவர்கள் திமிர்த்தனத்துடன் வழிகாட்டுகிறார்கள்.

இதில் பா.ஜ.க.வின் தீவிர ஆதரவாளரும் பார்ப்பனரும், இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியருமான அருண்ஷோரி, வி.பி.சிங் அரசின் தலைமை ராஜகுருவாக தானே முடிசூட்டிக் கொண்டுள்ளார். தே.மு. ஆட்சியை அடுத்தடுத்து உலுக்கிய நெருக்கடிக்கும், கீழ்த்தரமான குடுமிபிடி பதவி சண்டைக்கும், பஞ்சாப், காஷ்மீர் போன்ற மையமான பிரச்சனைகளில் நடந்த குளறுபடிகளுக்கும் காரணம், தேவிலாலும் அவரது கும்பலும் தான் என்று கூசாமல் புளுகுகிறார். இதன் மூலம் இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கையாலாகாத் தனத்தை - கிரிமினல்கள் தான் அதை ஆட்டுவிக்கின்றனர் என்பதைத் தம்மையும் அறியாமல் ஒப்புக் கொள்கிறார்.

இன்னொரு அறிவார்ந்த பிரதிநிதியான, 'இல்லஸ்ட்ரேட் வீக்லி' ஆசிரியர் பிரதீஷ் நந்தி, ''தே.மு. ஆட்சியில் தலைவிரித்தாடும் சதி, சூழ்ச்சி, அடிதடி, மேகம்




கொலைகள், பதவி போட்டி, தேர்தல் வன்முறைகள் - இவையெல்லாம் ஜனநாயகத்திற்கு நாம் கொடுக்கும் விலைகள். ஜனநாயகம் மரணமடைந்து விடாமல் ஜீவித்து இருக்க வேண்டுமென்றால், இவையெல்லாவற்றையும் நாம் சகித்துக் கொண்டுதான் ஆக வேண்டும். இன்னும் நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சியை கூட இது பலியாக்க கோரும் - இல்லையானால், ராஜீவ் அரசு போன்று ஜனநாயகத்தின் கையை முறுக்கி மடக்கினால் தான் ஸ்திரமான அரசையும் முன்னேற்றத்தை காணமுடியும்'' என்று தத்துவ விளக்கம் அளிக்கிறார். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் முகவிலாசத்தை இதைவிட வேறு ஒருவர் எப்படி அழகாக விளக்க முடியும்!

'இந்தியா டுடே'யின் அருண்பூரி போன்ற அறிவாளிகளோ, யோக்கியவானாக பாதி உண்மையை ஒத்துக் கொள்கிறார்கள். இது புளுகுவதை விட மோசமானது என்பதை சொல்லத் தேவையில்லை. ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட, காலாவதியாகி விட்ட பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறைதான், இந்த அரசியல் அசிங்கங்களுக்கு எல்லாம் காரணம் என்று கசப்போடு உண்மையை ஒத்துக் கொள்கிறார் பூரி. ஆனால், அதற்கு மாற்றாக அயோக்கியதனமான முறையில், அமெரிக்க மாடல் இருகட்சி முதலாளித்துவ ஜனநாயகத்தை சிபாரிசு செய்கிறார்கள். அந்த ஜனநாயக மகிமையில்தான், உலகத்திலேயே மிகப் பெரிய வாட்டர்கேட் ஊழல் மலர்ந்தது என்பதை வசதியாக மறைக்கிறார்

மேற்கண்ட எல்லா தீர்வுகளையும் உறிஞ்சுமளவு சர்வரோக கைகண்ட நிவாரணியை வழக்கம்போல் சிபாரிசு செய்கிறார்கள், பொறுக்கி கிரிமினல் - போர்ஜரி - அரசியல் கதாநாயகர்கள்! ஒவ்வொரு அரசியல் நெருக்கடியின் போதும், அதன் உச்சக் கட்டத்தில், அந்த கிரிமினல் - பொறுக்கி - போர்ஜரி கும்பலிடமிருந்து ஒரு கதாநாயகனைத் தேர்ந்தெடுத்து ஒளிவட்டம் அமைத்து வழிபட்டு ஆரவாரம் செய்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அவனையே வில்லனாக்கி தாக்குகிறார்கள். மீண்டும் இந்த விஷச்சூழலை உருவாக்குகிறார்கள்.

● குணசேகரன்.

## குடம் தண்ணீர் 50 காசு!

# கழக ஆட்சி சாதனை! மக்கள் வேதனை!

கோவை சரவணம்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த சிவானந்தபுரம் குடியிருப்பு பகுதியில் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. சாலை வசதி, தண்ணீர் வசதி, தெரு விளக்கு நூலக வசதி முதலான அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இருப்பது கிராமப் பகுதிகள் மட்டுமல்ல; நகர்ப்புறங்களிலும் இதே நிலைதான் நிலவுகிறது என்பதற்கு இக்குடியிருப்புப் பகுதி மேலும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தண்ணீருக்காக பஞ்சாயத்துக் குழாயில் காத்துக் கிடந்தால் வாரத்திற்கு 3 அல்லது 4 குடம் தண்ணீரே கிடைக்கிறது. குடத்திற்கு 50 காசு கொடுத்தும் தனியார் தண்ணீர் வண்டி எப்பொழுது வருமென காத்துக்கிடக்க வேண்டிய நிலை. 'இரண்டு நாளுக்கு ஒருமுறை ஒரு ரூபாய் செலவழித்தால் தான் இரண்டு குடம் தண்ணீர் வாங்கிக் குளிக்க முடிகிறது' என்று வேதனையோடு கூறுகிறார் ஒரு பட்டறைத் தொழிலாளி.

இதுவல்லாமல் ஏனைய சாலை வசதி - மின்வசதி - நூலகம் - சவ வண்டி - குப்பைத் தொட்டி - சாக்கடை - கழிப்பிட வசதி முதலான எதுவும் இப்பகுதியில் இல்லை. சரவணம்பட்டி பஞ்சாயத்து தலைவர் எஸ்.பி.முத்துசாமி கவுண்டர் ஓட்டு வாங்கிப் போனதோடு சரி; இப்பகுதி பக்கமே தலைக்காட்டவில்லை.

தங்கள் பகுதி பிரச்சினைகளில் எந்த கட்சியும் அக்கறை செலுத்தாததால் பகுதி மக்கள் தாங்களாகவே 'சிவானந்தபுரம் குடியிருப்போர் பொது நல சங்கம்' எனும் அமைப்பை உருவாக்கி போராடி வருகின்றனர். இச்சங்கம் போராடியதாலேயே ஒரு 'போர் வெல்' குழாயை பஞ்சாயத்து போட்டுக் கொடுத்தது. மேலும் பஞ்சாயத்திடம் பல முறை முறையிட்டும் மூடப்படாமல் இருக்கும் இப்பகுதியிலுள்ள பாழ்கிணறுகளை தாங்களே மூடுவதற்குரிய முயற்சியை செய்து வருகிறார்கள். ஆடு - மாடு - கோழி என்றில்லாமல் ஒரு பெண் உட்பட தவறி விழுந்து இறந்தும் பாழ்கிணறுகளை மூடுவதற்கு பஞ்சாயத்து சிறிதும் முயற்சி எடுக்கவில்லை.

இனியும் இப்பகுதி பிரச்சினைகளில் தலையிடாமல் இருந்தால் பிழைப்பு நடத்த முடியாது என்றுணர்ந்த ஓட்டுக் கட்சிகள் வேறு வழியில்லாமல் தலையிட்டன. கடந்த ஜூன் மாதம் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து மக்களைத் திரட்டி சாலை மறியல் போராட்டம் நடத்தி ஆதாயமடைந்தனர்.

கோவை மக்கள் கலை இலக்கிய கழகம், சிவானந்தபுரம் பகுதிவாழ் மக்களின் அடிப்படை வசதிக்கான போராட்டத்தை வரவேற்று ஆதரவு தந்தது. அடிப்படை பிரச்சினைகளுக்கு காரணமாக உள்ள சமூக அடிப்படையையும் அதை மாற்ற வேண்டிய தன் நடவடிக்கைகளை பற்றியும், ஓட்டுக்கட்சிகளின் அரசியல் ஆதாய நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி அவற்றிற்கு எதிராக விழிப்போடு இருக்க வேண்டியதை வலியுறுத்தியும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

தகவல்:- ம.க.இ.க., கோவை.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில் 'ரா'வின் சூழ்ச்சிகள்

## புதிய தகவல்கள்

வடக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களை எல்லாம் வவுனியாவுக்கு குடிபெயர வைத்து, பின்னர் புலிகளை வேட்டையாடப் போவதாக அறிவிக்கிறார் ரஞ்சன் விஜயரத்னா. வெளிப்படையாக சிங்கள ராணுவம் இனப்படுகொலையை நடத்திக் கொண்டிருக்கிறது. இருப்பினும் 'அமைதிப் படை' யின் அக்கிரமங்களை புலிகளும், ஈழமக்களும் எதிர்த்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக தற்போது நடைபெறும் இனப்படுகொலையை கண்டித்து அறிக்கை விடுவதற்குக் கூட மறுக்கிறது, இந்திய அரசு. இலங்கைப் போராளிகளுக்கு ஆயுதமும் பயிற்சியும் அளித்ததும், ராணுவத்தை அனுப்பியதும், ஒப்பந்தம் போட்டதும் தனது தெற்காசிய பிராந்திய ஆதிக்க நோக்கத்திற்காகத் தானே யன்றி போராடும் தமிழினத்தின் மீது உள்ள அனுதாபத்தினால் அல்ல என்பதை இந்திய அரசு நிருபித்து வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் புலிகள் இயக்கத் தலைவர்கள் கிட்டுவும், பாலசிங்கமும் இந்தியா ராஜதந்திர ரீதியாகத் தலையிட வேண்டும் என்றும், இலங்கை அரசு விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இலங்கையின் நடப்புகள் இந்தியாவுக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும் பேசியுள்ளனர். இலங்கை விவகாரத்தில் மற்ற நாடுகளுக்கு இல்லாத உரிமை இந்தியாவுக்கு உண்டென்றும் ஒருவேளை இந்தியா அவ்வாறு தலையிடவில்லையெனில் மற்ற நாடுகள் (பாகிஸ்தான்) தலையிடக்கூடும் என்றும் 'எச்சரிக்கை' செய்கிறார் கிட்டு.

இதை புலிகளின் ராஜ தந்திரம் என்று மெச்சிக் கொள்வதற்கு தமிழகத்தில் பலர் இருக்கலாம். ஆனால் இந்திய இலங்கை ஒப்பந்தம் திணிக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய பிரபாகரன் இது தமிழர்களைக் காப்பதற்காக அல்ல; இந்தியாவின் விஸ்திரிப்பு நோக்கத்திற்காக போடப்பட்ட ஒப்பந்தம் என்று மறைமுகமாகச் சாடினார். அதன்பின் மாத்தையா, யோகி ஆகிய அனைவரும் வெளிப்படையாக இந்திய அரசின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்தை அம்பலமாக்கினார்; எதிர்த்தனர்.

இப்போது இந்தியாவின் பிராந்திய ஆதிக்க உரிமையை அவர்கள் இந்திய அரசுக்கு நினைவுபடுத்துகின்றனர். '83 முதல் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு இந்தியா அளித்து வந்த 'தார்மீக ஆதரவின்' உள் நோக்கங்களை நாம் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்திருக்கிறோம். அவற்றை உறுதி செய்யும் விதத்தில் சமீபத்தில் ஒரு நூல் வெளிவந்துள்ளது.

'இந்தியாவின் இலங்கைத் தோல்வி' (India's Srilanka Fiasco) என்ற இந்நூலை எழுதியவர் ராஜேஷ் கடியன் என்ற அமெரிக்காவில் குடியேறிய இந்திய மருத்துவர். ஏற்கனவே இந்திய ராணுவம் பற்றி ஒரு நூலை எழுதியுள்ள இவர், இந்திய ஆளும் வர்க்கத்தின் பிராந்திய ஆதிக்கத்தை ஆதரிப்பவர். தன்னுடைய கண்ணோட்டத்திலிருந்து ராஜதந்திர ரீதியாகவும், உளவுத்துறை வாயிலாகவும், ராணுவ ரீதியாகவும் இலங்கை விவகாரத்தில் இந்தியா செய்த தலையீடுகளை இவர் தொகுக்கிறார், குறைபாடுகளை விமர்சிக்கிறார்.

எனினும், இலங்கைத் தமிழர்களை பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்ட இந்திய அரசின் முகத்திரையைக் கிழிக்க உதவும் என்பதாலும், இந்தியாவின் 'அப்பாவித்தனத்தை'ச் சாடும் சோ, தினமலர், எக்ஸ்பிரஸ் போன்ற பார்ப்பன ஏடுகளுக்கும் பதிலடி கொடுக்கும் என்பதாலும், இறுதியாக ராஜதந்திரம் என்ற பெயரிலான புலிகளின் சந்தர்ப்பவாதத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் என்பதாலும் இந்நூலின் சில பகுதிகளை மட்டும் சுருக்கி மொழியாக்கம் செய்து தருகிறோம்:

★ தமிழ்ப் போராளிகளின் பயிற்சித் தளங்கள் இந்தியாவில் (இருக்கின்றன என்பது) 1984 வாக்கில் பகிரங்க ரகசியமாகிவிட்டது. ஆரவமற்ற, காவலற்ற ராமநாதபுரம் கடற்கரைப் பகுதி பிரதான பயிற்சிக்களமாக இருந்தது. பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த 'ரா' (RAW - ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு மையம்) எனும் உளவு நிறுவனம் எல்லாப் போராளி அமைப்புகளையும் தனது மேற்பார்வையின் கீழ் இயக்கியது.

ரகசிய, உளவு வேலைகளைச் செய்வதற்கு பிரதமர் அலுவலகத்தின் கீழ் வேறு பல நிறுவனங்களும் இருக்கின்றன. எடுத்துக் காட்டாக, விமானவியல் ஆய்வு மையம், (Aviation Reasearch Centre), மின்னணுவியல் தொழில்நுட்பப் பிரிவு (Electronic Technical Section) ஆகியவை ராணுவ ஒலிபரப்புகளை ஒட்டுக் கேட்பதற்காகவும், எதிரி விமானங்களை கண்காணிப்பதற்காகவும், ரகசியக் குறியீட்டுச் செய்திகளை 'மொழி பெயர்ப்பு' செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டவை.

சிறப்புச் சேவைப் பணியகம், (Special Services Bureau) சிறப்புப் பாதுகாப்புப் படை (Special Security Force) ஆகியவையும் பிரதமர் அலுவலகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பவை; 'ரா'வின் கட்டுப்பாட்டில் இயங்குபவை. சிறப்புப் பாதுகாப்புப்படை 1962 இந்திய-சீன யுத்தத்திற்குப்பின் உருவாக்கப்பட்டது; எல்லைப் பகுதியை எதிரி ஆக்கிரமித்து விட்டால் எதிரியை எதிர்த்துப்போராட எல்லைப் பகுதி மக்களை பயிற்றுவிப்பதே இதன் நோக்கம். போர்க்களத்தில் ரகசிய வேலைகளைச் செய்வதற்கு உருவாக்கப்பட்டது தான் சிறப்புப் பாதுகாப்புப் படை. இந்த அமைப்புகள் அனைத்தும் 1970களின் இறுதியிலிருந்தே இலங்கை விவகாரங்களைக் கவனிக்கத் தொடங்கிவிட்டன.

★ 'ரா' மற்றும் அதன் துணை உளவு நிறுவனங்களின் ஆரம்பகால நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வெளியீடொன்றே பின்வருமாறு விளக்குகிறது:

''தமிழ்ப் போராளிகளுக்கு ராணுவப் பயிற்சியளிக்கும் பணியை மறைந்த பிரதமர் இந்திராகாந்தி 'ரா'விடம் ஒப்படைத்தார். தமிழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த 'ரா' அதிகாரிகளான திரு. சாமி, திரு. ரவி மேனன் ஆகியோர் தங்களது நண்பரான சந்திரகாசனைத் (இலங்கை தமிழர் தலைவர் செல்வநாயகத்தின் மகன்) தொடர்பு கொண்டனர். தமிழ் இளைஞர்களுக்கு இந்திய அரசு ராணுவப் பயிற்சி கொடுக்க இருப்பதாகவும், எந்தெந்தக் குழுக்களுக்கு பயிற்சி தரலாமென்று சிபாரிசு செய்யுமாறும் செப்டம்பர் '83 இல் அவர்கள் சந்திரகாசனிடம் கோரினர்.

சிறீ சபாரத்தினத்தின் தலைமையிலான 'டெலோ'வை வளர்க்கலாம் என்று சந்திரகாசன் முடிவு செய்தார். அப்பொழுது டெலோ ஒரு அமைப்பாகவே இல்லை. ஆறு பேர் அடங்கிய சிறு குழுவாகவே இருந்தது. அவர்களும் தமிழ் நாட்டில்தான் இருந்தனர். டெலோவுக்கு எந்தவிதமான அரசியல் சித்தாந்தக் கண்ணோட்டமும் இல்லாமல் இருந்தபடியால், தங்களுடைய சதித் திட்டங்களுக்கு ஏற்ப அவர்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் 'ரா' ஆயுதப் பயிற்சிக்கு டெலோவைத் தெரிவு செய்தது.

'83 ஜூலை படுகொலை ஈழத் தமிழர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது; சிந்தனையில் சுதந்திரத் தீயை மூட்டியது. இந்த புரட்சிகரமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு டெலோ, உறுப்பினர்களைச் சேர்க்கத் தொடங்கியது. எந்தவிதமான விதிகளோ, ஒழுக்க நெறிமுறைகளோ இல்லாமல் கும்பல் சேர்க்கப்பட்டது. தமிழ் ஈழம் எனும் லட்சியத்தில் எவ்விதப் பிடிப்புமற்ற விரும்பத்தகாத, சமூகவிரோத சக்திகள் ஏராளமானோர் சேர்ந்தனர். இதற்கிடையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் மற்றும் ஈரோஸ் குழுவினரும் சந்திரகாசனைச் சந்தித்து ராணுவப் பயிற்சியில் தங்களையும் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினர். அவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பயிற்சி தருவதாகக் கூறி இந்திய அரசு நம்மை (புலிகள்) அணுகிய போது நாம் ஏற்றுக் கொண்டோம்...

தமிழகத்திற்கான 'ரா'வின் பொறுப்பதிகாரி திரு. உன்னிகிருஷ்ணன் தான் பல்வேறு தமிழ்ப் போராளிக் குழுவினரின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பிலும் இருந்தார். ஆனால் போராளிகளுக்குத் தரப்படும் பயிற்சியின் தன்மை, அவர்களுக்குத் தரப்படும் ஆயுதங்கள் பற்றிய விவரம்



படிப்பகம்

www.padippakam.com

போன்ற மிக முக்கியமான தகவல்களை இலங்கை அரசுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார் உன்னிகிருஷ்ணன். ஒவ்வொரு குழுவின் வலிமை, அவர்களது போர்த் தந்திரத் திட்டங்கள் ஆகியவையும் கூட இலங்கை அரசுக்கு சிறிது சிறிதாகத் தரப்பட்டன. சில மாதங்களுக்கு முன்னர்தான் உன்னிகிருஷ்ணன் ஒரு சி.ஐ.ஏ. ஏஜெண்ட் என்பதை இந்திய அரசு கண்டுபிடித்து விசாரணையின்றி ஆயுள் தண்டனை வழங்கியுள்ளது''

★ டெலோவுக்கு 'ரா' முதல் முக்கியத்துவம் கொடுத்து பயிற்றுவித்தது தற்செயலாக நிகழ்ந்ததல்ல என்பதை அமெரிக்க டைம் வார ஏடு உறுதி செய்கிறது:

''உளவு மற்றும் சீர்குலைவு வேலைகளில் பயிற்றுவிப்பதற்காக டெலோ ஆட்களை இந்தியாவிற்குக் கொண்டு வந்தது இந்திய அரசு. 'அரசியல் தெளிவற்ற நபர்களும், கிரிமினல் பேர்வழிகளும் டெலோவில் நிரம்பியிருந்தனர். எந்தவிதமான சித்தாந்தமும் இலக்கும் இல்லாத டெலோதான் 'ரா'விற்கு பொருத்தமான கூலிப்படை' என்றார் இலங்கை விவகாரங்களில் நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்த ஒரு இந்திய அரசு அதிகாரி.'' (டைம், ஏப்ரல்-3, 1989)

மண்டபம், கும்பகோணம் மற்றும் மகாலிப் பட்டினம் கடற்கரை அருகில் - என மூன்று பெரிய முகாம்களில் இக்கூலிப்படை பயிற்றுவிக்கப்பட்டது. சென்னை சர்வதேச விமான நிலையத்தருகே பரங்கி மலையிலும், அண்ணாநகரிலும் சிறிய முகாம்கள் அமைக்கப்பட்டு பயிற்சி தரப்பட்டது.

இதே நேரத்தில் எல்.டி.டி.ஈ., ஈரோஸ், பிளாட் போன்ற மற்ற குழுக்களும் வளரத் தொடங்கின.

குறிப்பிட்ட அளவு தேர்ச்சி அடைந்தவுடன் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள உயர்தர ராணுவப் பயிற்சி நிலையங்களுக்கு கொரில்லா போராளிகள் அனுப்பப்பட்டனர். எடுத்துக்காட்டாக, உத்தரப் பிரதேசத்தில் இமயமலை அடிவாரத்தில் உள்ள சக்ரதா முகாமுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சில போராளிகள் அனுப்பப்பட்டனர். மிகவும் ரகசியமாக இருக்க வேண்டும் என்பதற்காக இம்முகாமிலேயே உள்ள ''நிறுவனம்-22'' இல் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. திபெத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தும் நோக்கத்தில் அமைக்கப்பட்டதுதான் ''நிறுவனம்-22'' என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதிகாரர்களை (Subversives) உருவாக்குவதற்காக வென்றே சிறப்பாக அமைக்கப்பட்ட நிறுவனம் இது என்பதால், தமிழ்ப் போராளிகளைப் பயிற்றுவிக்கவும் இது பொருத்தமான இடமாக இருந்தது.

அதே போல மத்திய இந்தியாவில் உள்ள துணை ராணுவப் பயிற்சிக் கூடங்களில் இவர்களுக்குக் காலாட்படை பயிற்சியும் தரப்பட்டது. இன்னும் பீரங்கி, எந்திரத் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கி, ராக்கெட் எறி குண்டுகள், கண்ணி வெடிகள், தகவல் தொடர்பு, வரைபடம் பயிற்சி, கொரில்லா யுத்த முறைகள், போர்க்களத் தந்திரங்கள் ஆகிய அனைத்திலும் இவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.



'ரா'வினால் கைகழுவப்பட்ட கைக்கூலிகள் - ஒரிசா அகதி முகாம்

பயிற்சி பெற்றவர்களில் 600 பேர் 'டெலோ'வைச் சேர்ந்தவர்கள். காரணம் முன்னர் குறிப்பிட்டது தான். இவர்களுக்கு மட்டும் ஓராண்டு பயிற்சி. மற்ற குழுவினர் 50 முதல் 100 பேர் வரைதான் பயிற்றுவிக்கப் பட்டனர். அவர்களுடைய பயிற்சிக்காலம் நான்கு முதல் ஆறு மாதங்கள். இவ்வாறு பயிற்றுவிக்கப் பட்டவர்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரண்டு முக்கியத் தலைவர்களும் அடக்கம். ஏற்கனவே பாலஸ்தீன விடுதலை அமைப்பின் பயிற்சி பெற்றிருந்த கிட்டுவும், மாத்தையாவும் அதற்கு அடுத்த கட்ட பயிற்சிகளை போபாலிலும் இந்தூரிலும் பெற்றனர்.

★ 1985 வாக்கில் விடுதலைப் புலிகள் ராணுவப் பயிற்சிக்கு இந்திய அரசை மட்டும் சார்ந்திராமல் போனதற்கும் காரணம் உண்டு. உலகெங்கும் பல்வேறு நாடுகளில் குடியேறிய தமிழர்களிடமிருந்தும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரிடமிருந்தும் டெலோ, பிளாட் போன்ற இயக்கங்கள் நிதியுதவி பெற்று வந்ததை நிறுத்தி அவையனைத்தையும் விடுதலைப் புலிகள் தங்களுக்குக் கிடைக்குமாறு செய்துக் கொண்டனர்..

சாராய உரிமம் வழங்கும் அதிகாரத்தின் மூலம் எம்.ஜி.ஆரிடம் தாராளமான பணம் குவிந்ததாகச் சொல்லப்படுகிறது. அவரது பணப்பெட்டி நிரம்பி வழிந்தது. மதராஸ் ரெஜிமெண்டின் காலாட்படைப் பிரிவு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் மகாதேவன் எம்.ஜி.ஆரின் அதிகாரபூர்வ ராணுவ ஆலோசகரைப் போலச் செயல்பட்டார்.

தென்ஆற்காடு, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ராணுவ சிப்பாய்களை தங்கள் பயிற்சியாளர்களாக விடுதலைப் புலிகள் சம்பளம் கொடுத்து அமர்த்திக் கொண்டனர். இவ்வாறு அமர்த்திக் கொள்ளப்பட்ட பயிற்சியாளர்கள் மதறாஸ் ரெஜிமெண்ட் மற்றும் மதறாஸ் எஞ்சினியரிங் குழுவைச் சேர்ந்த சிப்பாய்கள். இவையன்றி இலங்கையிலேயும் புலிகள் பயிற்சி எடுத்தனர்.

1985இலேயே சென்னை கடத்தல் பொருள் சந்தையான சைனா பஜாரிலும் போராளிகளின் செல்வாக்கு வெளிப்படத் தொடங்கியது. கடத்தல் பொருட்களும் அவற்றின் ரகங்களும் அதிகரித்தன. கடத்தல் பொருள் விற்பனையில் போராளிகளிடையே ஏற்பட்ட போட்டியினால் வெளிநாட்டு மின்னணுச் சாதனங்களின் விலைகள் வீழ்ந்தன... போதைமருந்து கடத்தலும் வளர்ந்தது. துவக்க காலத்தில் இதில் அதிகமாக ஈடுபட்டவர்கள் பிளாட் அமைப்பினர் தான்.

பிறகு தமிழக போலீசின் 'க்யூ' [Q] பிரிவு உளவுத்துறை, போராளிகளை வேவு பார்க்கத் தொடங்கியது. நக்சல்பாரிகளின் பயங்கரத்தைக் கட்டுப்படுத்த உருவாக்கப் பட்ட இந்த 'க்யூ' பிரிவு இப்போது இறக்குமதி செய்யப்பட்ட இந்த போராளிகளை கட்டுப்படுத்தும் வேலையில் இறங்கியது. ரகசியமான துரிதமான, கடுமையான நடவடிக்கை மூலம் இந்த உளவுப்பிரிவு அவர்களைத் தங்களது தொடர்பிலும், கட்டுப்பாட்டிலும் வைத்துக் கொண்டது. செப்டம்பர் '88இல் எல்.டி.டி.ஈ. உறுப்பினர்களை சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வெளியேற்றுவதில் 'க்யூ' பிரிவு பெரும் பங்காற்றியது.

★ பெரும்பான்மையான போராளிகளின் ஆயுதப் பயிற்சியை ஒழுங்கு செய்த போதும், போராளிகளை மேற்பார்வையிடுவதிலும் நிர்வகிப்பதிலும் 'ரா' மெத்தனமாக இருந்து விட்டது. ஆயுதப் பயிற்சி அளிக்கப் பட்ட பல போராளிகளை புகைப்படமெடுக்கவும், அவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து வைக்கவும் தவறிவிட்டது.

அதே போல இந்தியாவின் எதிர் உளவும் [Counter - Intelligence] மிக மோசமாக இருந்தது. ''என்னுடைய எசமான் சிங்கள அரசுக்கும் சேவை செய்கிறார்'' என்று 'ரா' அதிகாரி உன்னிகிருஷ்ணனின் கார் டிரைவர் இலங்கை அரசு அதிகாரி ஒருவரிடம் (இவர் தமிழர்) கூறினாராம். இது நடந்



படிப்பகம்

www.padippakam.com

தது உன்னிகிருஷ்ணன் சி.ஐ.ஏ. ஏஜெண்டு என்று கண்டுபிடிக்கப்படுவதற்கு ஒரு ஆண்டு முன்பு என்பது குறிப்பிடத்தக்கது... ஆனால் இத்தனைக்குப் பிறகும் டெலோவை ஒழித்துக் கட்டிய எல்.டி.டி.ஈ. — டெலோ மோதலை தோற்றுவிப்பதில் உன்னிகிருஷ்ணனின் பாத்திரம் என்ன என்பதை 'ரா' பரிசீலிக்கவில்லை.

★ இலங்கையில்: இந்திய உளவாளிகள் சிலர் இருந்தனர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலை போன்ற தமிழர் அதிகம் வாழும் நகரங்களுக்கு மத்திய ரிசர்வ் போலீஸ் படையைச் சேர்ந்த போலீசார் சிலர் உளவாளிகளாக அனுப்பப்பட்டனர். இவர்களை எல்லா போராளிக் குழுக்களும் தெரிந்து வைத்திருந்தனர். சொல்லப் போனால் இவர்களது உணவு, தங்குமிடம், பாதுகாப்பு மற்றும் பிற தேவைகளை அந்தந்த ஊர்களில் இருந்த செல்வாக்கு மிக்க குழுதான் கவனித்துக் கொண்டது. நம்பத்தக்க செய்திகள் எதையும் இவர்கள் சுய முயற்சியின் மூலம் திரட்டவில்லை. மாறாக இந்திய பத்திரிகையாளர்கள் தங்கள் புல



தோற்றுப் போன சதித்திட்டம்: 'அமைதிப்படை' வரவு

னாய்வு மூலம் திரட்டிய ரகசியச் செய்திகளை கேட்டு வாங்கினர். இவர்கள் வெறும் போலீஸ்காரர்கள் தான் என்பதால் போராளிகளின் - குறிப்பாக பயிற்சியும், செயலூக்கமும் நிறைந்த புலிகளின் - ராணுவ வல்லமையை மதிப்பிடத் தெரியவில்லை.

ஜூலை '86 இறுதியில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகும் போது இதுதான் நிலைமை.

ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு வெகு நாள் முன்னரே ஏப்ரல் '87இலேயே இலங்கையில் தலையிடுவதென இந்திய மத்திய அமைச்சகம் முடிவு செய்துவிட்டது. இதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகுதான் ராணுவம் இந்த முடிவில் ஈடுபடுத்தப்பட்டது.

வெளியுறவுத்துறை ராஜாங்க அமைச்சர் நட்வர்சிங் தலைமையில் ஒரு அதிகாரபூர்வமற்ற, தற்காலிகமான கருக்குழு [Core Group] டெல்லியில் உருவாக்கப்பட்டது. முப்படைத் தளபதிகள், மத்திய அமைச்சகச் செயலாளர், பாதுகாப்புத் துறைச் செயலாளர், வெளியுறவுத் துறை செயலாளர், பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த சிலர், உளவுத் துறை [Intelligence Bureau] மற்றும் 'ரா' நபர்கள் இதில் அடங்குவர்.

இந்தக் குழு அநேகமாக அன்றாடம் கூடியது. முப்படைத் தளபதிக்குப் பதில் துணைத் தளபதி பல கூட்டங்களில் கலந்து கொண்டார். பிற அமைச்சர்களும், அதிகாரிகளும் தேவைக்கேற்ப அழைக்கப்பட்டனர். இந்தக் கருக்குழு சில மாற்றங்களுடன் பிறகு அதிகார பூர்வமானதாக்கப்பட்டது.

இக்கருக்குழுவின் முடிவுகளை விரிவாகத் திட்டமிடும்படி பல்வேறு இயக்கங்களும் பணிக்கப்பட்டன. ராணுவத்திற்கான பணி என்ன என்று முடிவு மாறிக் கொண்டேயிருந்ததால் ஜூன் மாதம் முழுவதும் ஒரே பரபரப்பிலும் போதாக்குறைக்கு தரைப்படையின் கட்டுப்பாட்டில் இயங்க மாட்டோமென விமானப்படையும், கடற்படையும் மறுத்தன. ஜூன் 17ம் தேதி வாக்கில் இரண்டு தெளிவான வாய்ப்புகளைக் கணக்கில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன.

1) இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே இந்திய ராணுவத்தை நிறுத்துவது.

2) ஆலோசனை செய்யப்பட்டு வந்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஜெயவர்த்தனே ஏற்றுக் கொண்டு அதன் விளைவாக உள்நாட்டில் எதிர்ப்பும், ஆட்சிக்கவிழ்ப்பு அபாயமும் தோன்றினால் அவற்றிலிருந்து ஜெயவர்த்தனேவைப் பாதுகாப்பது.

முப்படைகளையும் . பயன்படுத்தி கொழும்பு நகரின் கேந்திர முக்கியத்துவமும் வாய்ந்த இடங்களையும், இந்திய ஹைகமிஷன் அலுவலகத்தையும் பாதுகாப்பது. இலங்கை அமைச்சர் மற்றும் இலங்கை முப்படைத் தலைமை தளபதி ஆகியோரைக் கைது செய்வது - விமானப்படை, கடற்படைத் தளபதி ஆகியோரைக் கைது செய்யாமல் அவர்களை இந்திய போர்க்கப்பல் ஒன்றிற்குக் கொண்டுவந்து தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் ஒப்பந்தம் ஒன்றில் அவர்களைக் கையெழுத்திடச் செய்வது.

— இப்படியொரு திட்டமும் இருந்ததாக இலங்கை அரசின் மூத்த தமிழ் அதிகாரிகள் கூறுகின்றனர்.

(தொடரும்)



பம்பாய் நகரின் மையப் பகுதியில் உள்ள அந்த மருத்துவமனையில் காலை 11 மணிக்கு புறநோயாளிகள் பகுதியில் ஏக நெரிசல். சுமார் 200க்கும் மேற்பட்ட நோயாளிகள் வரிசையில் காத்துக் கிடக்கிறார்கள். மருத்துவமனையின் அமைதியைக் கிழிக்கிறது துப்பாக்கி வேட்டுச் சத்தம். என்னவென்று ஓடிச்சென்று பார்ப்பதற்குள் கொலையாளிகள் இருவர் படியிறங்கி ஓடி மறைகின்றனர். மருத்துவமனை வராந்தாவில் 25 வயது இளைஞனின் பிணம் - நெற்றியில் வரிசையாக துளைத்துச் சென்றிருக்கும் 3 துப்பாக்கித் தோட்டாக்கள்.

அதே நாளில் பம்பாய் - தாதர் பகுதி. காலை 12.45 மணி. தாதர் தொலைபேசியகத்தின் வாயிலில் உள்ள பெட்டிக் கடையொன்றில் சிகரெட் வாங்கிக் கொண்டிருக்கும் இளைஞனின் தோள் மீது கைபோட்டு அணைத்தபடியே அழைத்துச் செல்கிறான் ஒருவன். இருவரும் அருகில் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிடம் ஒன்றினுள் நுழைகிறார்கள். சில நொடிகளில் வரிசையாகத் துப்பாக்கி வேட்டுச்சத்தம் - சிகரெட் வாங்கச் சென்ற இளைஞன் இரத்த வெள்ளத்தில் கிடக்கிறான்.

இவை இந்தி சினிமாக் காட்சிகள் அல்ல; ஜூன் 11ம் தேதியன்று நடைபெற்ற சம்பவங்கள்.

மத்திய பம்பாயில் உள்ள நாயர் மருத்துவமனையில் பட்டப் பகலில் கொல்லப்பட்ட 35 வயது இளைஞன் கனி அரசாங்க நாணயச்சாலை ஊழியன். 'பி.ஐ.டி. சால்' எனும் சேரிப்பகுதியைச் சேர்ந்த ஹேமந்த் ஹதே என்ற ரவுடியின் தலைமையிலான கும்பலைச் சேர்ந்தவன். ஏற்கனவே பல கொலை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளியே வந்திருப்பவன். வேறு சில கொலைகளுக்காக போலீசால் 'தேடப்பட்டு' வருபவன். 'பி.ஐ.டி. சால்' பேட்டையைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயலும் காசிநாத் லாத் என்ற இன்னொரு ரவுடியின் ஆட்கள் தான் இந்தக் கொலையைச் செய்தவர்கள்.

தாதர் பகுதியில் கொலை செய்யப்பட்ட பாட்டீல் என்ற 25 வயது இளைஞன் பம்பாயின் பிரபல குண்டர் படைத் தலைவன் அமர் நாயக்கிற்கு நெருக்கமானவன். இவனுடைய கொலைக்கும் காரணம் மாஃபியாக் குண்டர் படைகளிடையேயான 'பேட்டை ஆதிக்கப்' போட்டிதான்.

● ○ ●

பம்பாயின் மேட்டுக்குடிப் பகுதியான ஜூஹூ கடற்கரைப் பகுதிக்குச் சென்றுவிட்டு ஜூன்-26-ம் தேதி இரவு ஆட்டோவில் திரும்பிக் கொண்டிருந்த கணவன் -



படிப்பகம்

www.padippakam.com

## பம்பாய் பயங்கரவாத சட்டம்

# தொழிலாளர்களை ஒடுக்க புதிய சதி

மனைவியை இன்னொரு ஆட்டோ வழிமறிக்கிறது; மனைவியை மட்டும் இழுத்து தங்கள் ஆட்டோவில் ஏற்றிச் சென்று கற்பழிக்கிறது ஒரு கும்பல்.

● ஜூன் 25-ம் தேதி காலை நேரத்தில் ஜனசந்தடி மிக்க இந்திராநகர் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு பெண்ணை வழிமறித்து காரில் ஏற்றிச் சென்று கற்பழிக்கிறது இன்னொரு கும்பல்.

● பம்பாயின் 'மலாட்' குடிசைப் பகுதியில் இரவு நேரத்தில் ஒரு வீட்டின் கதவைத் தட்டுகின்றனர் மூன்று இளைஞர்கள். கதவைத் திறந்த பெண்ணை வீட்டிற்குள் தள்ளிச் சென்று மூவரும் கற்பழிக்கின்றனர். வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த கணவனை இழுத்து வெளியே வீசுகின்றனர்.

● காரை ரிப்பேர் செய்வதற்காக பட்டறை வாசலில் கொண்டு வந்து நிறுத்தினார் கண்டேலால். திடீரென்று கையில் துப்பாக்கியுடன் தோன்றிய இளைஞர்கள் வானத்தை நோக்கிச் சுட்டனர். கையிலிருந்த ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளையும் ரொக்கத்தையும் கொடுத்துவிட்டு ஓடினார் கணடேலால்.


● நகைக்கடையில் நுழைந்த துப்பாக்கி ஏந்திய குண்டர்கள் 37,000 ரூபாய் வைரத்துடன் தப்பினர்

● ○ ●

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் 'பானைச் சோறுக்கு ஒரு சோறு' தான். கற்பழிப்புகளும், துப்பாக்கிமுனைக் கொள்ளைகளும், பேட்டை ஆதிக்கத்திற்காகவும் பழி வாங்குவதற்காகவும் மாஃபியா கும்பல்கள் பட்டப்பகலில் நடுவீதியில் நடத்தும் துப்பாக்கிச் சண்டைகளும் கடந்த சில ஆண்டுகளில் பீதியூட்டுமளவு பம்பாயில் அதிகரித்து விட்டன.

விகாரமான தழும்புகள் நிறைந்த முகமும், கரகரப்பான அருவெறுப்பூட்டும் குரலும், சந்தேகப்படும் படியான நடத்தையும் உள்ளவர்கள்தான் கிரிமினல் பேர்வழிகள் என்ற சினிமா இலக்கணத்தை பம்பாய் பொய்யாக்கி வருகிறது. சட்டத்திற்குப் பயந்த கவுரவமான பிரஜைகளைப் போலத் தோற்றமளிப்பவர்களில் பலர் கிரிமினல் உலகத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரிய வரும்போது பாதுகாப்பான வாழ்க்கை பற்றிய மாயை கலைந்து வருகிறது.

மருத்துவமனையில் போட்டி மாஃபியா கும்பலால் கொல்லப்பட்ட கேடி கேனி.



போதை மருந்து விற்றதற்காக ஒரு டாக்டரும், ஹெராயின் எனும் போதைப் பொருளைச் சுத்தம் செய்யும் ரகசிய ஆலை வைத்து நடத்தியதற்காக ஒரு பால் வியாபாரியும், கள்ளச்சாராயம் காய்ச்சி அதையே ராணுவத்துக்கும் சப்ளை செய்ததற்காக ஒரு ராணுவ அதிகாரியும் கைது செய்யப்படுகின்றனர். சிவில் வாழ்க்கையை கிரிமினல்கள் வெளிப்படையாகத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர்.

பம்பாய், பூனா மாவட்டங்களை பயங்கரவாதத் தடைச்சட்டப் பகுதிகளாக அறிவித்து, போலீசுக்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்குவதன் மூலம் இந்நிலைமையை சீர்திருத்திவிடப் போவதாக அறிவித்திருக்கிறது சரத்பவார் அரசு.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் எவரையும் விசாரணை என்ற பெயரில் 90 நாட்களுக்கு போலீஸ் காவலில் வைத்திருக்கலாம்; குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமலேயே ஒரு ஆண்டு சிறையில் வைக்கலாம். கோர்ட் விசாரணையும் பகிரங்கமானதல்ல; விசேட நீதி மன்றங்களில் ரகசியமாகவே நடத்தப்படும். இந்த நீதி மன்றங்களில் தண்டிக்கப்படும் எவரும் மேல்முறையீடு செய்ய வேண்டுமெனில் உச்சநீதி மன்றத்திற்கு மட்டுமே செல்ல முடியும். அதற்குக் கீழுள்ள நீதிமன்றங்களுக்கு மேல் முறையீட்டை விசாரிக்கும் அதிகாரம் கிடையாது. சுருங்கச் சொன்னால் தான் விரும்பும் எவரையும் 7 ஆண்டுகள் வரை கேட்பாரின்றி சிறைவைக்கும் அதிகாரத்தைப் போலீசுக்கு வழங்குகிறது இச்சட்டம்.

ஏற்கனவே இருக்கின்ற இந்தியக் குற்றவியல் சட்டத்தின் ஓட்டைகளில் நுழைந்து குற்றவாளிகள் தப்பி விடுகிறார்கள் என்று காரணம் சொல்லி, பிக்பாக்கெட்டுகள் முதல் போதை மருந்து கடத்தல்காராகள் வரை அனைவரையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது பம்பாய் போலீசு. இதிலிருந்தும் அவர்கள் தப்பிவிடுகிறார்கள் என்பதால் தற்போது பயங்கரவாதத் தடை சட்டம். மொத்தத்தில், பொருத்தமான சட்டங்கள் இல்லாத காரணத்தினால்தான் கிரிமினல்களைக் கட்டுப்படுத்த இயலவில்லை என்கின்றனர் மகாராஷ்டிர போலீசும், அரசும்.

உண்மை நிலை இதுவல்ல என்பதை நாம் சொல்வது மட்டுமல்ல; முதலாளித்துவப் பத்திரிக்கைகளே கூட போலீசு கற்பிக்கும் நியாயத்தை ஏற்க மறுக்கின்றன.

பிக்பாக்கெட்டுகள், பெண்தரகர்கள், கஞ்சா விற்பவர்கள், பிச்சைக்காரர்கள் மற்றும் சிறு குற்றவாளிகள் - என கீழ் மட்டத்திலிருந்து தொடங்கி மட்கா சூதாட்டம், கள்ளச்சாராய தயாரிப்பு, விநியோகம், விபச்சார விடுதிகள், வீடியோ சூதாட்டம், கட்டாய மாமூல் வசூல், நில ஆக்கிரமிப்பு வரை வரிசையான படிநிலைகளில் அதிகாரவர்க்கத்தைப் போலவே ஒழுங்கமைக்கப் பட்டி



படிப்பகம்

www.padippakam.com

ருக்கும் ரகசிய உலகம் அதன் ஒவ்வொரு படி நிலையிலும் போலீசோடும், ஓட்டுச்சீட்டு அரசியல் வாதிகளோடும், கறுப்புப் பண முதலைகளோடும், தொழிலதிபர்களோடும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. முதலாளித்துவப் பத்திரிக்கைகளின் கணிப்பின்படியே மாதம் 100 கோடி ரூபாய் வருமானம் தரக்கூடிய இந்த ரகசிய உலகத்தைக் கட்டுப்படுத்துவதில் தோன்றும் போட்டிகள் மாஃபியா கும்பல்களுக்கிடையேயான பகரங்கமான துப்பாக்கிச் சண்டையாக வெடிக்கின்றன.

1960களில் பம்பாய் ரவுடிக் கும்பல்களின் பிறப்பிடமாக கள்ளச்சாராய உற்பத்தியும் வினியோகமும் இருந்தது. 1970களில் நகரில் உள்ள உடுப்பி உணவு விடுதிகள் 'பார்' (Bar)களைத் தொடங்கின; கூடவே நிர்வாண நடன அரங்கங்கள் உருவாகின; அதைத் தொடர்ந்து விபச்சாரம். இவையனைத்திற்கும் 'பாதுகாப்பு' கொடுப்பதற்கு வட்டார அளவில் குண்டர் படைகள் தோன்றின.

70களிலும் 80களிலும் தங்கத்தின் விலை உயர்வு காரணமாக தங்கக் கடத்தலின் தேசிய, சர்வதேசிய மையங்களில் ஒன்றாக பம்பாய் மாறியது; ரியல் எஸ்டேட் வியாபாரம் இவையனைத்தையும் விட பல்லாயிரம் மடங்கு லாபகரமான தொழிலாக 80களில் வளர்ந்தது. சேரிப்பகுதி மக்களை அடித்து விரட்டுவது, மையமான பகுதிகளில் இருக்கும் சிறிய மனை, கட்டிட உரிமையாளர்களை அதை விற்பதற்கு நிர்ப்பந்திப்பது, கட்டிடங்களில் குடியிருப்போரைக் காலி செய்ய வைப்பது ஆகிய அனைத்துக்கும் ரவுடிக் கும்பல்கள் தேவைப்பட்டன.

இந்த வருடம் தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து வைரக் கடத்தல் தொடங்கி விட்டது. இதே நேரத்தில் நுகர்பொருள் பொருளாதாரத்துடன் வளர்ந்து பூதகாரமாகப் பெருகிவிட்ட 'பைனான்ஸ்' எனும் வட்டித் தொழில் மேலும் ஆயிரக் கணக்கான அடியாட்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியது. கடன் வசூல் செய்வதும் ரகசிய உலகப் பேர்வழிகளின் பணியாயிற்று.

சிவில் வாழ்கையை நிர்வகிக்கும் பொறுப்பு கிரிமினல்களின் கையில் வெளிப்படையாகச் சென்றடைந்தவுடன் அன்றைய போலீஸ் கமிஷனர் ரிபெய்ரோ அதிரடி நடவடிக்கை எடுப்பதாகச் சவால் விட்டார்.

ஆனால் போலீஸ் கான்ஸ்டபிள்கள் முதல் அதிகாரிகள் வரை அனைத்து மட்டங்களிலும் உள்ள போலீஸ் துறையினர் பல்வேறு மாஃபியா கும்பல்களின் ஆதரவாளர்களாகவோ, உறுப்பினர்களாகவோ இருப்பது அம்பலமானதுதான் இதில் கண்ட பலன். எதிர்க் கும்பல்களால் கொலை செய்யப்படுவோமென்று அஞ்சி போலீசில் சரணடைந்தவர்களை தாங்கள் வேட்டையாடிப் பிடித்ததாக போலீசு கணக்கு காட்டியது. போலீசின் ''மாஃபியா ஒழிப்பு'' நடவடிக்கைக்கு உதவும் பொருட்டு முக்கியமான ரகசிய உலகப் புள்ளிகள் என்ற பெயரில் சில நபர்களை மாஃபியா கும்பல் தலைவர்களே அனுப்பி வைத்தனர். கோஷ்டி மோதல் கொலைகள் கோர்ட் அறையிலும், போலீஸ் நிலையத்திலும் நடக்குமளவு சீர்கெட்டுப் போன நிலைமையை தடுத்து நிறுத்த போலீசால் இயலவில்லை; மாறாக துபாயில் இருந்து கொண்டு பம்பாய் ரகசிய உலகத்தை ஆளும் தாவூத் இப்ராகீமுக்கும், பம்பாயில் உள்ள கரீம்லாலாவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாஃபியா கும்பல்கள் தமக்குள் ஒரு 'ஒழுங்கை' மீண்டும் நிறுவிக் கொண்டனர்.



## மஃபியாக்கள் கையில் நவீன ஆயுதங்கள்

சென்ற ஏப்ரல் மாதம் ஒரு நாள் நள்ளிரவின் மாஃபியா கும்பலொன்றின் மறைவிடத்தைச் சோதனை செய்த பம்பாய் போலீசு 25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அதிநவீன ஆயுதங்களைக் கைப்பற்றியது. 12 கைத்துப்பாக்கிகள், துப்பாக்கியில் பொருத்துவதற்கான 11 தொலை நோக்கிகள், துப்பாக்கி ஒளித்து வைக்கப்பட்ட 9 கைத்தடிகள், இவையெல்லாம் இதில் அடக்கம். மாஃபியா கும்பல்களிடம் ஏ.கே.47 துப்பாக்கிகள் மலிந்து விட்டதால் அவர்களை ஒடுக்குவதற்காக பம்பாய் போலீசுக்கும் ஏ.கே.47 துப்பாக்கிகளை சப்ளை செய்யவிருக்கிறது பவார் அரசு. போலீசுக்கு ஒரு விலை வைத்திருக்கும் கிரிமினல்கள் போலிசின் கையிலுள்ள துப்பாக்கிக்கும் ஒரு விலை வைத்து வாங்கி விட்டுப் போகிறார்கள்!

சுமார் 8 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் மாஃபியா ஒழிப்பு சவடாலடிக்கத் தொடங்கியுள்ளார் சரத்பவார். பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு பஞ்சாபுக்காக மட்டும் என்று சொல்லிக்கொண்டு, கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் இப்போது கிரிமினல்களை ஒடுக்குவதற்காக என்ற பெயரில் பம்பாய்க்கு வந்திருக்கிறது. நாடு முழுவதும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள 20,000 பேரில் ஆகப் பெரும்பான்மையானவர்கள் எந்தவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்களல்ல; மாறாக சட்டபூர்வமான முறைகளில் தங்கள் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடியவர்கள்; பலர் ஏதுமறியாத அப்பாவி மக்கள்.

போதிய அதிகாரங்கள் இல்லாமல் தங்கள் கைகள் கட்டப்பட்டிருப்பதாக அவ்வப்போது போலீசும் அதிகாரவர்க்கமும் சலித்துக் கொள்வதும், அதிகாரத்தில் உள்ள ஓட்டுப் பொறுக்கிகள் அதற்கு ஒத்துப் பாடுவதும், உடனே புதிதாக ஆள்தூக்கிச் சட்டங்களை அறிமுகப்படுத்துவதும் வாடிக்கையாகிவிட்டது.

ஹாஜி மஸ்தான், யாகியா, கரீம்லாலா, வரதராஜ முதலியார், தாவூத் இப்ராகீம் போன்ற ரகசிய உலகப் பேர்வழிகளுக்கும் ஓட்டுச்சீட்டு கட்சிகள் மற்றும் தொழிலதிபர்களுக்கும் போலீசுக்கும் உள்ள உறவு ஏற்கனவே அம்பலமானதுதான். கிரிமினல்களின் சம்பளப் பட்டியலில் நிரந்தர இடம் பிடித்திருக்கும் போலீசு ஏதோ முகம் தெரியாத எதிரியைத் தேடுவதுபோலப் பாசாங்கு செய்கிறது.

பம்பாய் மட்டுமல்ல; சென்னை, டெல்லி, கல்கத்தா போன்ற அனைத்து பெருநகரங்களும் சந்திக்கும் பிரச்சினை இது. மார்க்சிஸ்டுகள் மார்தட்டிக் கொள்ளும் கல்கத்தாவில் சமீபத்தில் தொடர்ச்சியாக நடைபெற்ற கும்பல் கற்பழிப்புகளும், மாநகராட்சித் தேர்தல் வன்முறைகளும் மாஃபியா கும்பல்களுக்கும் 'மார்க்சிஸ்டுகளுக்கும்' நிலவும் கூட்டை அம்பலப்படுத்தியுள்ளன.

நகர்ப்புறத் தரகு முதலாளிகளாலும், வியாபாரிகளாலும் உருவாக்கப்படும் கறுப்புப் பணம், அந்தக் கறுப்புப் பணத்தை முதலீடு செய்வதற்கான ரகசியத் தொழில்கள், இவற்றில் கூட்டு சேரும் ஓட்டுப் பொறுக்கிகள், இவற்றுக்கு பாதுகாப்பு தர போலீசு - என்ற சட்டபூர்வமாக நகரங்களைத் தன் பிடியில் வைத்திருக்கும் கிரிமினல்கள் தங்களால் உருவாக்கப்பட்ட 'சட்டவிரோத' கிரிமினல்களை ஒழிக்கப் போவதாக நாடகமாடுகிறார்கள். கண்துடைப்பிற்காக செய்யப்படும் ஒருசில கைதுகள் தவிர சரத்பவாரின் பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரதானமாக போராடும் தொழிலாளி வர்க்கத்தின் மீதும், ஜனநாயக சக்திகளின் மீதுமே பாயும். இது நிரூபிக்கப்பட்டும் விட்டது.

பம்பாயை ஒட்டிய அவுரங்காபாத் பகுதியில் உள்ள 'யுனிவர்சல் லக்கேஜ்' என்னும் நிறுவனம் கதவடைப்பு செய்யப்பட்டதை எதிர்த்துப் போராடும் தொழிலாளிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட தொழிலாளி ஒருவர் போலீஸ் காவலில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டிருக்கிறார். பவாரின் பயங்கரவாதத் தடைச்சட்டம் கிரிமினல்களைப் பிடிப்பதற்குப் பதில் முதல் களப் பலியாக ஒரு தொழிலாளியின் ரத்தம் குடித்திருக்கிறது.

இது பம்பாய், பூனா பகுதிகளின் பிரச்சினை மட்டுமல்ல; எல்லா நகரங்களும் எதிர் நோக்கும் பிரச்சினை, நவீனமயமாக்குதலுக்கும், இறக்குமதித் தொழில் நுட்பத்திற்கும் வி.பி.சிங் அரசு அளித்திருக்கும் பூரண அனுமதி கதவடைப்புகளையும், ஆட்குறைப்பு நடவடிக்கைகளையும் அதிகரிக்கும். இதன் விளைவாகக் கொதித்தெழும் தொழிலாளி வர்க்கத்தை வேட்டையாடவும், வேலைநிறுத்தங்களை உடைக்கவும் முதலாளிகளின் ஏவல் நாய்களான மாஃபியா கிரிமினல் கும்பல்கள் தயாராக இருப்பார்கள். அதில் தப்புபவர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி சிறைவைக்க சட்டபூர்வ கிரிமினல்களான போலீசு காத்திருக்கும்.

சரத்பவாரின் தந்திரத்தை மற்ற மாநிலங்கள் பிரயோகிப்பதற்கு முன்னால் விழிப்படைந்து போராடுவது தொழிலாளி வர்க்கத்தின் கடமை.

● அஜித்.



படிப்பகம்

www.padippakam.com

# பெனாசிர் ஆட்சிக் கவிழ்ப்பு

# மீண்டும் ஜியா சகாப்தம்

பாகிஸ்தானில் மீண்டும் ஜியா சகாப்தம் தொடங்கி விட்டது. முஸ்லிம் நாட்டின் முதல் பெண் பிரதமரான பெனாசிர் ஆட்சி கவிழ்க்கப்பட்டு குடியரசுத் தலைவரின் அவசரநிலை ஆட்சிப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் 11 ஆண்டுகால ராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு சாவு மணி அடித்த ஜனநாயகத்தின் வீரப் புதல்வியாக வருணிக்கப்பட்ட பெனாசிர் ஆட்சி, ''அரசு எந்திரத்தைத் கேடாகப் பயன்படுத்தியும், நீதித்துறையை காலில் போட்டு மிதித்தும் வரைமுறையற்ற ஊழல் மோசடிகளில் இறங்கி விட்டது'' என்று அடுக்கடுக்காக குற்றம் சாட்டி கடந்த ஆகஸ்ட் 6 ம் நாளன்று குடியரசுத் தலைவர் இஷாக்கான் பெனாசிர் ஆட்சியைக் கலைத்தார்.

சட்டபூர்வமாகவே நடந்து இந்த ஆட்சிக் கவிப்பைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரான குலாம் முஸ்தபா ஜதோய் இடைக்கால அரசின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். அக்டோபர் மாதம் 24-ம் தேதியன்று பொதுத் தேர்தல் நடைபெறும் என்றும், அதுவரை நாடுமுழுவதும் அவசரநிலை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பெனாசிரும் அவரது கட்சியின் முக்கிய பிரமுகர்களும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டது. இதோடு பெனாசிர் ஆட்சியில் நடந்த ஊழல்களைப் பற்றி விசாரணை நடைபெறும் என்றும் ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தேர்தலில் நிற்க தடை விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் பெனாசிரும் அவரது கட்சியும் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முடியாதவாறு முடக்கி வைக்கப்பட்டு குடியரசுத் தலைவரின் பின்புலமாக உள்ள ராணுவக்கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தும் ராணுவக் கும்பல் வழக்கமாக கூறும் குற்றச்சாட்டுகள் தான் என்று இவற்றை ஒதுக்கிவிட முடியாது. ராணுவக் கும்பலின் நோக்கம் ஆட்சிக் கவிழ்ப்பாக இருந்தாலும் பெனாசிர் மீதான குற்றச்சாட்டுகள் மறுக்க முடியாத உண்மையாகும். 'கிழக்கின் ஜனநாயகத் திருமகளான' பெனாசிர் ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே அவரது குடும்பமும் கட்சியும் ஊழல் - மோசடிகளில் ஊறித் திளைக்கத் தொடங்கி விட்டது. பெனாசிரின் கணவர் சர்தாரியும் அவரது தொழில் கூட்டாளிகளும் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பங்கு மார்க்கெட், ஏற்றுமதி வியாரத்தில் கோடி கோடியாய் சுருட்டினர். பெனாசிரின் தாயும் பூட்டோவின் மனைவியுமான நசரத், காபினெட் மந்திரியாகி ஊழல், அதிகார முறைகேடுகளில் இறங்கி ஆட்டம் போட்டார். பெனாசிர் குடும்பத்தினரும் அவரது கட்சியினரும் அரசாங்கப் பதவிகள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருந்தார்கள்.

கடந்த 20 மாத கால ஆட்சியில் பெனாசிரின் ஜனநாயக வேடம் கலைந்து மக்களிடமிருந்து முற்றிலும் தனிமைப்பட்டு வெறுக்கத்தக்க ஆட்சியாகச் சீரழிந்தது. எனவே தான் அவரது ஆட்சி கலைக்கப்பட்டதும், அவ்ருக்கு பெருவாரியான தேர்தல் வெற்றியைத் தேடி தந்த — அவர் பிறந்த சிந்து மாநிலத்திலேயே ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டாடினர்.

பெனாசிரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு ராணுவக் கும்பலின் பொம்மையாட்சி நிறுவப்பட்டதற்கு அதன் அதிகாரப் பசியே முக்கிய காரணம். ராணுவ கும்பலின் சர்வாதிகாரத்தை வேரடி மண்ணோடு வீழ்த்திவிட்டு அதிகாரத்துக்கு வந்தவரல்ல பெனாசிர். ராணுவக் கும்பலுடன் சமரசம் செய்து கொண்டுதான் அவர் ஆட்சியைக் கைப்பற்றினார். இன்னும் சொல்லப் போனால் ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டங்கள் புரட்சியை நோக்கி திரும்பிவிடாமல் அதற்கு வடிகாலாக, பெயரளவிலான ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது அடிவருடியான பாகிஸ்தானை நிர்ப்பந்தித்தது. அதன்படி நடந்து முடிந்த தேர்தலில் மக்களின் சர்வாதிகார எதிர்ப்புணர்வைச் சாதகமாக்கிக் கொண்டு ஆட்சியைப் பிடித்தார் பெனாசிர். ஆட்சிக்கு வந்த பிறகும் கூட அவர் ராணுவ கும்பலுக்கு எதிராக ஒரு துரும்பையும் அசைக்கவில்லை.

இருப்பினும் ராணுவக் கும்பல் இந்த பெயரளவிலான ஜனநாயகக்கத்தைக் கூட சகித்துக் கொள்ளமுடியாமல் அதிகாரப் பசியோடு தவித்தது. பெனாசிரை வீழ்த்துவதற்காக அதிகாரச் சுவை கண்ட ராணுவ கும்பல் பலமுறை முயற்சித்தது. ஆனால் அது அவருக்கு ஆதரவையும் அனுதாபத்தையும் தேடித்தந்து விடும் என்பதால் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது. இன்று அவர் செல்வாக்கிழந்து தனிமைப்பட்டுள்ள நிலையில் அவரது ஆட்சியைக்கவிழ்த்து தனது செயலுக்குத் தார்மீக ஆதரவையும் தேடிக் கொண்டுவிட்டது. தெனாலிராமன் பூனைக்கு பால் வைத்த கதையாக, ஜனநாயகம் என்றாலே பாக். மக்கள் முகத்தை சுழிக்குமளவுக்கு, பெனாசிரின் கேடுகெட்ட ஆட்சி அமைந்து விட்டது. நாடாளுமன்ற ஜனநாயகத்தை விட ராணுவ சர்வாதிகாரமே மேலானது என்று மக்களே விரும்பி ஏற்குமளவுக்கு பெனாரின் ஆட்சி ஊழல் முறைகேடுகளால் சீரழிந்து விட்டது.

நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையின் மூலம் ராணுவ சர்வாதிகாரத்தை ஒருக்காலும் வீழ்த்த முடியாது. அதிகாரச் சுவைகண்ட ராணுவ கும்பல் சைவப் புலியாக மாறி ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி விடாது. மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றவே செய்யும் என்பதை பாக். விவகாரம் திரும்பவும் நிரூபித்துக் காட்டிவிட்டது. பெனாசிருக்கு முன்னோடியாக பிலிப்பைன்சில் மார்க்கோசின் ராணுவ சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயகத்தை நிலைநாட்டக் கிளம்பிய அகினோ அம்மையார், கடைசியில் ராணுவ கும்பலுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டதற்கு மேல் வேறொன்றும் செய்ய முடியவில்லை. அகினோவின் ஆட்சி எப்போதும் தூக்கியெறியப் படலாம் என்ற நிலைமைதான் பிலிப்பைன்சில் உள்ளது. இதே போல பர்மாவில் தேர்தல் நடந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கோரும் எதிர்க்கட்சியினர் பெரும்பான்மையாக வெற்றி பெற்று மாதங்கள் பலவாகியும் இன்னமும் ராணுவ கும்பல் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க மறுக்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் அகினோவையும் பெனாசிரையும் மாபெரும் ஜனநாயகவாதிகளாகச் சித்தரித்து அவர்களை ஆதரித்து ஏற்றிப் போற்றிய ஏகாதிபத்தியங்களும் தன்னார்வ குழுக்களும் இன்று பெனாசிரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைக் கண்டு வாய்திறக்க மறுக்கின்றனர். ஆனால் அமெரிக்காவின் ஒப்புதலுடன் தான் இந்த ஆட்சிக் கவிப்பு நடந்துள்ளது என்பது யாவரும் அறிந்த ரகசியம்.

கடைசியில், சர்வாதிகாரத்துக்கு எதிராக பாக். மக்கள் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டங்கள் விழலுக்கு இறைத்த நீராகி, அவர்கள் போராடிப் பெற்ற அற்ப உரிமைகளும் ஜனநாயகமும் மீண்டும் ராணுவக் கும்பலின் காலடியில் வைக்கப்பட்டுவிட்டது. இனி, பாக்.மக்களின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் நல்வாழ்வுக்குமான ஆட்சி அமைவதாக இருந்தால் அது புரட்சியில் மலரும் புதிய ஜனநாயக அரசாக மட்டுமே இருக்க முடியும். ராணுவ சர்வாதிகார கொடுமையையும், அதற்கு அடிப்படையாக உள்ள நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தின் கையாலாகாத்தனத்தையும் அனுபவித்துவிட்ட பாக். மக்களுக்கு, முதலாளித்துவ ஜனநாயகவாதிகளால் மாற்று ஆட்சிமுறையைக் காட்ட முடியாத நிலையில், இனி அம்மக்கள் புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது?

● பாலன்

இடைக்கால அரசின் பிரதமர் ஜதோய்





படிப்பகம்

www.padippakam.com

● *குடும்பநலத் திட்டம் பற்றி உங்களது கருத்துத்தான் என்ன? மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் அந்தத் திட்டத்தை ஏன் நீங்கள் எதிர்க்கின்றீர்கள்? நாளைக்கு நீங்கள் புரட்சி செய்து, ஆட்சி அதிகாரம் உங்கள் கையில் இருந்தால், நான் 100 (நூறு) குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள (என் இஷ்டம் போல்) அனுமதிப்பீர்களா? ஏனென்றால் எனக்குப் பிறக்கின்ற குழந்தைகளும் வெறும் வாயும் வயிறுடன் மட்டும் பிறப்பதில்லை. மண்டையில் மூளையும், இரண்டு கை -கால்களோடு தானே பிறக்கும்! அப்பொழுது என்னுடைய எல்லா குழந்தைகளுக்கும் உங்களால் வேலைவாய்ப்பு மற்றும் அடிப்படைத் தேவைகள் கொடுக்க முடியுமா? முடியாது! எனவே குடும்ப நலத்திட்டத்தில் இருக்கும் குறைகளை விமர்சியுங்கள் - ஆனால் அத்திட்டத்தை எதிர்க்காதீர்கள்! உங்களது கருத்தை விளக்கவும்.*

— கே.எல்.குமார், விழுப்புரம்.

○ இப்போதிருப்பதைக் குடும்ப நலத்திட்டம் என்றா சொல்கிறீர்கள்? 'குடி குடியைக் கெடுக்கும்', என்று சாராயக்கடை பெயர்ப் பலகையில் எழுதுவதைப் போலத்தான் இதுவும்; 'காயடிக்கும்' திட்டத்திற்குக் குடும்ப நலத்திட்டம் என்பதும். வயதுக்கே வராதவர்களையும், திருமணமாகாதவர்களை, முதியோர்களையும் பிடித்துப் போய் அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள்; அதையும் குரூரமான முறையில் செய்து பலர் தகுந்த உணவும், சிகிச்சையும் இல்லாமல் சாகிறார்கள். இந்த அதிகாரவர்க்க அமைப்பில் விமர்சித்தெல்லாம் திருத்தவே முடியாது.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்வோரின், அவர்கள் அளவோடு பெற்றுக்கொண்டுள்ள ஓரிரு குழந்தைகளின் உயிருக்கும், உடல் நலனுக்கும், வாழ்க்கைத் தேவைகளுக்கும் எந்த அரசு உத்திரவாதமளிக்கிறதோ அதற்குத்தான் குடும்பக் கட்டுப்பாடு செய்யவும் உரிமையுண்டு. விவசாயமும் தொழிலும், சொத்துக்களும் தரகு அதிகார முதலாளிகளுக்கும், நிலப்பிரபுக்களுக்கும், அவர்களின் அரசுக்கும் சொந்தமாக இருக்கும் வரை அவர்கள் மேற்கண்டவற்றுக்கு உத்திரவாதமளிக்க முடியாது. அவர்கள் எந்திரங்களையும் சரக்கு உற்பத்திகளையும் கட்டுப்படுத்தி - இயக்கி வர்த்தகத்தை முறைப்படுத்தி லாபவிகிதத்தை அதிகப்படுத்திக் கொள்வதைப் போல மக்களையும், அவர்களது குழந்தைகளையும் கட்டுப்படுத்தி - இயக்கி சமூகப் பொருளாதார அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்க முயலுகிறார்கள். அதற்கேன் நாம் ஆதரவு தெரிவிக்க வேண்டும்! குடும்பங்களைக் கட்டுப்படுத்த வருகிறீர்களே உங்கள் சுரண்டலையும் சொத்துக்களையும் கட்டுப்படுத்தத் தயாரா என்று மக்கள் கேட்டால் என்ன செய்வார்கள்? துப்பாக்கிகளால் குறி வைப்பார்கள். தோட்டாக்களால் துளைப்பார்கள். ஆகவே அவர்கள் அதிகாரம் நீடிக்கும் வரை குடும்பநலத் திட்டமாக இருக்காது!

புரட்சி வெற்றி பெற்ற பிறகு, நீங்கள் 100 என்ன, 1000 குழந்தைகள் கூட பெற்றுக் கொள்ள உரிமையுண்டு. சுஜாதா எழுதிய ஒரு கதையில் வருவதைப் போல புரட்சி அரசு உத்திரவு போட்டு நீங்கள் குழந்தை பெற்றுக் கொள்வதைத் தடுக்காது. நீங்கள் புரட்சியின் எதிரியாக இருக்கவில்லையானால் விவசாயமோ, தொழிலோ உங்களுக்கும் சொந்தமாக இருக்கும். அவற்றைத் திட்டமிடும், நிர்வகிக்கும் உரிமை உங்களுக்கும் இருக்கும். அதிகாரத்தில் உங்களோடு பங்கேற்பவர்களும் நீங்களும் சேர்ந்து வாய்ப்புகளையும் தேவைகளை பார்த்து குடும்பத்தையும் திட்டமிடுவீர்கள். அப்போது ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்று குழந்தைகளைக் கொண்ட உண்மையான குடும்பநலத் திட்டமாக இருக்கும். 100 குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் இயந்திரமாக உங்கள் மனைவியும் சம்மதிக்க மாட்டார். ஏனென்றால் சொத்துக்களிலும், திட்டமிடுதலிலும், அதிகாரத்திலும் அவருக்கும் பங்கிருக்கும். ஒருவேளை புரட்சியில் நீங்கள் பங்கேற்க மறுத்தால்... பங்கேற்றவர்கள் தங்களுக்கு எதைத் திட்டமிடுகிறார்களோ அதுதான் உங்களுக்கும்!

● *நன்றாகக் கவனிக்க வேண்டும்! ஒரு 'லக்ஸ் சோப்' உற்பத்தி செய்வதற்கு ரூ.1.07 ஆகிறது. ஆனால் அது ரூ.5.50க்கு விற்கப்படுகிறது. ஒரு 'சிபாகா டூத்பிரஷ்' ரூ.1.03 ஆகிறது. ரூ.3.50க்கு விற்கப்படுகிறது. ஒரு 'கால்போல்' மாத்திரை 5 காசுக்கு உற்பத்தி செய்து 40 காசுக்கு விற்கப்படுகிறது. இப்படித் தொழில் துறை அதிபர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருளுக்கு 5 அல்லது 6 மடங்கு விலைவைத்து விற்றுக் கொள்ளும் போது, நாட்டின் முதுகெலும்பான விவசாயத்தைத் தனது இரும்புப் பிடியில் வைத்திருக்கும் நிலப்பிரபுக்கள் ஏன் தாங்கள் உற்பத்தி செய்யும் நெல், கரும்பு, கோதுமை, நிலக்கடலை போன்ற பொருள்களுக்கும் அதைப் போல 5, 6 மடங்கு விலை நிர்ணயித்து மக்களை சுரண்டவில்லை? மேலும் நிலப்பிரபுக்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தொழில் அதிபர்களை ஏன் பகைத்துக் கொள்வதில்லை? இதிலிருந்து நிலப்பிரபுக்களுக்கு இந்திய அரசியலில் எவ்வித செல்வாக்கும் அதிகாரமும் இல்லை என்று நான் கருதுகிறேன் - விளக்கவும்.*




— ஜி.வடிவேலன் எம்.ஏ., கள்ளக்குறிச்சி.

○ உற்பத்தி செலவை விட 5, 6 மடங்கு விலை வைத்து தொழில் அதிபர்கள் கொள்ளையடிக்கிறார்கள் என்பது முற்றிலும் சரியே. பொருட்களின் விலை இப்படி ஏறிப்போவதற்கு இன்னும் இருகாரணங்கள், தரகு அதிகார முதலாளி - நிலப்பிரபுக்கான ஆளும் அரசெனும் பூதம் ஏற்றும் வரிச்சுமையும், இடைத்தரகர்களின் லாபவேட்டையும். இவை இரண்டாம் பட்சமானவைதான். நிலப்பிரபுக்கள் இந்த அளவு விலைவைத்துக் கொள்ளையிட முடியவில்லை என்பது உண்மைதான். அதற்குக் காரணம் அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தில் பங்கு இல்லை என்பதல்ல.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகளை, குறிப்பாக உற்பத்தி உறவுகளைத் தகர்த்துவிட்டு நவீன முதலாளித்தவ உற்பத்தி முறைகளுக்கு மாறும்போதுதான் ஆலைப்பொருட்களுக்கு ஈடான சந்தை மதிப்பை விவசாயப் பொருட்கள் பெறமுடியும். அதாவது பண்ணை அடிமை, கொத்தடிமை, சாதிய அடிப்படையிலான அடக்குமுறை மற்றும் சுரண்டல் உறவுகளும் அதற்கேற்ப பழைய பாணி உற்பத்தி முறையும் நீடிக்கிறது. விவசாயம் நவீன முதலாளித்துவ உற்பத்தியாக மாறும்போது அதுவும் அதோடு சேர்ந்து ஆடு, மாடு, கோழி, பன்றிப் பண்ணைத் தொழில்கள், பழ-தோட்ட வகைகள் - ஆலைத் தொழில்களைப் போலவே பன்மடங்கு உற்பத்தி பெருகும். காலை 2, 3 லிட்டர் பாலும், மாலையில் 1, 1 1/2 லிட்டர் பாலும் கறக்கும் நாட்டுப் பசுவோடு ஒரு நாளைக்கு மூன்று வேளை 20, 25 லிட்டருக்குக் குறையாமல் பால் கறக்கும் இயந்திரமாக பயன்படும் சீமைப் பசுவையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அதே போல நிலமும், கிராமப்புற - விவசாய சார்புத் தொழில்களும் மாறும்போது உற்பத்திச் செலவு, அடக்க விலை பன்மடங்கு குறையும், லாப விகிதமும் ஏறும்.

அப்படிச் செய்வதற்கு பண்ணை அடிமை, கொத்தடிமை, சாதிய உறவுகள் தகர்க்கப்பட்டு முதலாளி தொழிலாளி என்று பொருளாதார ரீதியிலான உறவாக மட்டும் ஏற்பட வேண்டும். இதனால் கிராமப்புற அதிகாரம், தகுதி, பரம்பரை செல்வாக்கு ஆகியவற்றை நிலப்பிரபுக்கள் இழக்க வேண்டிவரும். எனவே தொழில் அதிபர்களைப் போல கொள்ளை லாபம் கிடைக்குமென்றாலும் இவற்றை இழப்பதற்கு நிலப்பிரபுக்கள் சம்மதிப்பதில்லை; கடுமையாக எதிர்க்கின்றனர். இருந்தபோதும், சுரண்டலை அதிகரித்துக் கொள்வதற்காக இந்த நிலப்பிரபுத்துவ முறையிலான உறவுகளையும் அதிகாரம், தகுதி, பரம்பரை செல்வாக்கை இழக்காமலேயே உற்பத்திச் சாதனங்கள், இயந்திரங்களைப் புகுத்தவும் சில நிலப்பிரபுக்கள் முயலுகின்றனர்



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் புதிய வகை நிலப்பிரபுக்கள் கூடுதலான சலுகைகளுக்காக அரசிடம் பேரம்பேசவும், நிர்பந்திக்கவும் செய்கின்றனர். நாட்டின் பல பகுதிகளிலும் 'விவசாயிகள் சங்கம்' என்கிற பெயரில் நடுத்தர, பணக்கார விவசாயிகளை முன்னிறுத்தி போராடவும் தூண்டுகின்றனர்; அவசியமானால் தலைமையேற்கின்றனர். உரம், பூச்சி மருந்து, மின்சாரம், இயந்திரங்களுக்கு மானியங்களாகவும், விவசாயப் பொருட்களுக்கு வரிவிதிப்பைத் தடுப்பதிலும் கூட வெற்றி பெற்றுள்ளனர். ஆகவே நிலப்பிரபுக்களுக்கு இந்திய அரசியலில் எவ்வித செல்வாக்கும் அதிகாரமும் இல்லை என்பது சரியல்ல. அதுவுமல்லாமல் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைமையைக் கைப்பற்றி நேரடியாகவே அதிகாரத்திலும் பங்கேற்கின்றனர்.

● ***சுய நிர்ணய உரிமை என்பதும் பிரிந்து செல்லும் உரிமை என்பதும் ஒன்றா? வேறு வேறானதா? இதற்கும் சுயாட்சி என்று சொல்லப்படுவதற்கும் என்ன வேறுபாடு? வேறுபாடு இல்லை என்றால், கலைஞர் ஒரு பக்கம் மாநில சுயாட்சி வேண்டும் என்று பேசுவதும், மறுபக்கம் நெடுமாறன் தலைமையில் நடக்கவிருந்த தமிழர் தேசியத் தன்னுரிமை மாநாட்டிற்கு தடை விதித்த போலி வேடத்தைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?***

**— விசுவநாதன், மதுரை.**

○ ஒரு தேசிய இனம் மற்ற பிற தேசிய இனங்களோடு இணைந்திருப்பதா அல்லது பிரிந்து செல்வதா என இரண்டில் எதை வேண்டுமானாலும் முடிவு செய்து கொள்வதற்கான உரிமைதான் சுயநிர்ணய உரிமை. இதைத்தான் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமை என்கிறோம். பிரிந்து செல்லும் உரிமை இல்லாது சுய நிர்ணய உரிமை என்பது உண்மையானதாக இருக்க முடியாது.

ஆனால் புறநிலையானது சில விவகாரங்களில் பிரிவினையைச் சாத்தியமற்றதாக்கி விடலாம். சுதந்திரமான அரசுகளை உருவாக்கிக் கொள்ள இயலாத வகையில் சில தேசிய இனங்கள் மிகவும் சிறியவையாகவோ அல்லது சிதறுண்டு கிடப்பவையாகவோ இருக்கலாம். உதாரணமாக காஷ்மீர் மாநிலத்தில் வாழும் லடாக்கியர்கள்; அமெரிக்காவில் வாழும் நீக்ரோ கறுப்பின மக்கள். அம்மாதிரியான விவகாரங்களில் பிரதேச அல்லது வட்டார சுயாட்சியே சரியான தீர்வாகும். அங்கு உண்மையான தேசிய சமத்துவத்துவம் என்பதற்குத் தேவையானது, ''பரந்த பிரதேச சுயாட்சியும் முழுமையான சுய நிர்வாகமும் ஆகும். தன்னைத் தானே ஆள்கிற சுயாட்சிப் பிரதேசங்களின் எல்லைகள், பொருளாதார, சமூக நிலைமைகள், மக்கள் தொகையின் தேசிய இயல்பு முதலியவற்றைக் கொண்டு அவ்வட்டார மக்களால் தீர்மானிக்கப்படும்'' என்கிறார் லெனின்.

ஆனால் தமிழ்த் தேசிய இனம் அத்தகையது அல்ல. இது தனிமையான, சுதந்திரமான அரசு ஏற்படுத்திக் கொள்வதற்கான சிறப்பான தடையேதும் இல்லை. எனவே தமிழகத்திற்குத் தேவையானது பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமையாகும். அதற்குமாறாக இங்கே சுயாட்சி என்பது பிரிந்து செல்லும் உரிமையை மறுப்பதாகும். கூடுதலான அதிகாரங்களுக்காக அதிகபட்ச ஜனநாயக உரிமையை இழந்து பலாத்காரமான முறையில் இந்தத் தேசிய இனத்தை அடக்கி வைப்பதை ஏற்பதாகும்.

''அடைந்தால் திராவிட நாடு, இல்லையேல் சுடுகாடு'' என்று மகாதேவி சினிமா வீரப்பன் பாணியில் வசனம் பேசிவந்த தி.மு.க. 1962 ஆம் ஆண்டு பிரிவினைத் தடைச் சட்டம் வருவதாகச் சொன்னதும் அதைக் கைவிட்டு, சுய நிர்ணய உரிமையை அடகு வைத்து சுயாட்சிக் கோரிக்கையோடு சரணடைந்து விட்டனர்.

ஆகவே, 'இந்திய தேசிய'த்திடம் சரணடைந்து விட்ட துரோகி கருணாநிதி, தமிழர் தன்னுரிமை இயக்கத்தை ஒடுக்குவதில் வியப்பில்லை. ஆனால் சாலை இளந்திரையன், பெருஞ்சித்திரனார், வீரமணி போன்றவர்கள் ஏதோ பார்பன - பனியா தூண்டுதலுக்குப் பலியாகி, கட்டளைக்குப் பணிந்து தான் இப்படிச் செய்கிறார்; அதிகாரத்தில் நீடிக்க வேண்டும் என்கிற ஆசை, பலவீனம் தான் இதற்குக் காரணம் என்கின்றனர். இல்லை. 'பார்ப்பன - பனியா' கும்பலின் கூட்டாளி என்கிற முறையில்தான் தன்னுரிமைப் போராட்டத்தை கருணாநிதி ஒடுக்குகிறார்.

★ நிலப்பிரபுக்களுக்கு அதிகாரத்தில் பங்கில்லையா?

★ குடும்பநலத் திட்டம் எதிர்ப்பு ஏன்?

நெடுமாறன் போன்ற, சுய நிர்ணய உரிமை முழக்கமிடுபவர்கள் கூட நெருக்கிக் கேட்கும் போது, சுயாட்சிக்குரிய விளக்கமே அளிக்கின்றனர். பஞ்சாப், காஷ்மீர் விவகாரங்களில் அவர்களுக்குக் கூடுதலான அதிகாரமிருந்தும் தேவையின்றிப் போராடுவதாக கூறுகின்றனர். (ஆதாரம்: நெடுமாறன் 'ஜூனியர் போஸ்ட்' மற்றும் 'அசைடு' என்ற ஆங்கில ஏட்டிற்களித்த பேட்டிகள்). ஆகவேதான் கூறுகிறோம், இந்தப் பிழைப்புவாதிகள் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு எப்போது வேண்டுமானாலும் துரோகம் செய்து விடுவார்கள். மார்க்சிய - லெனினிய இயக்கம் மட்டுமே இறுதி வரை போராடும்.

● ***ராமஜென்ம பூமி: இந்துவெறியர்களின் வரலாற்றுப் புரட்டு என்ற கட்டுரையில் கடைசியாக பிரச்சினைக்குரிய அம்மசூதியை இந்து முஸ்லீம் ஒற்றுமையின் தேசிய நினைவுச் சின்னமாக்கு என்ற கருத்தை நிராகரித்து அம்மசூதியை முஸ்லீம் மக்களுக்கே திருப்பித் தரவேண்டும் என்று கூறியுள்ளீர்கள்.***

***இக்கட்டுரையில் ஒரு கருத்து மூடி மறைக்கப்பட்டுள்ளது. (அம்மசூதியைப் பாபர் கட்டியிருந்தும்) அங்கு திருட்டுத்தனமாக சிலைகளை இந்துவெறியர்கள் வைக்கும்முன்பே அதாவது பல ஆண்டுகளுக்கு முன்பே மசூதியின் 150 அடி தொலைவிலுள்ள சபுத்ரா என்றழைக்கப்படும் பீடத்தை இராமன் பிறந்த இடமாக கருதி இந்துக்களும் மதச் சகிப்புத் தன்மையோடு வழிபட்டு வந்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.***

***எனவே, இருமத மக்களுமே அவ்விடத்தில் வழிபட்டு வந்துள்ளமையால் அவ்விடத்தை முஸ்லீம் மக்களுக்கு மட்டும் கொடுத்தால் பெரும்பான்மையான இந்துக்கள் அவற்றிற்கு எதிராகப் போராட மாட்டார்கள் என்று கூற முடியாது; நிச்சயமாகப் போராடுவார்கள். இது பெரிய மதக் கலவரமாக உருவெடுக்காது என்பதற்கு நீங்கள் என்ன முடிவு வைத்துள்ளீர்கள்? இதைத் தான் இவ்வளவு காலம் பரிசீலித்து தாமதமாகக் கட்டுரை எழுதினீர்களா?***

***தோழர்களே, இப்போது சொல்லுங்கள் யார் கோமாளித்தனமாகப் பேசுவது?***

**— ஏ.வி.அண்ணாதுரை, ஆலத்தூர்**

○ விவரங்கள், ஆதாரங்கள் உடனடியாக சேகரிக்க இயலாததால தாமதமாக முடிவெடுத்து எழுத நேர்ந்தது; அதற்காக வருந்துகிறோம். சபுத்ரா பீடத்தை இந்துக்கள் வழிபட்டு வந்ததை மறைக்க வேண்டும் என்ற எண்ணம் எதுவும் கிடையாது. இதுவும் கூட ஆதாரங்களையும் முடிவையும் மாற்றிவிடவில்லை. சபுத்ரா பீடத்தை இந்துக்கள் வழிபட அனுமதிக்கப்பட்டார்கள் என்பது முஸ்லீம்களின் சகிப்புத் தன்மையைத்தான் குறிக்கிறது.

அம்மசூதி முழுமையையும் கைப்பற்றிக் கொண்டு இடித்துத் தள்ளிவிட்டு அவ்விடத்திற்கு இந்துவெறியர்கள் உடைமை - உரிமை கொண்டாட மாட்டார்கள் என்பது உறுதியானால் சபுத்ரா பீடத்தைத் தொடர்ந்து இந்துக்கள் வழிபடுவதை யாரும் தடுக்கப் போவதில்லை. முஸ்லீம் மத வெறியர்கள் அதைத் தடுத்தாலும் முஸ்லீம் மக்களே எதிர்ப்பார்கள்.

பாபர் படையெடுத்துப் போய் அயோத்தி - ராமன் கோவிலை இடித்து மசூதி கட்டினார் என்பதற்கும், ராமன் அவதரித்த இடம் அம்மசூதி கட்டப்பட்டுள்ள இடம்தான், அந்த ஊர்தான் என்பதற்கும் எவ்வித ஆதாரமும் கிடையாது என்று வரலாற்று, அகழ்வாராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. அம்மசூதியை இந்து முஸ்லீம் ஒற்றுமையின் தேசிய நினைவுச் சின்னமாக்கக் கோருவோரும் இதை மறுக்கவில்லை. அப்படி இருக்கும்போது இந்து மதவெறியர்கள் பிரச்சினையைக் கிளப்பி உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதற்காக நினைவுச் சின்னமாக்குவதே முஸ்லீம்களின் உடமை - உரிமையைப் பறிப்பதாகிறது. இப்படித்தான் நாடு முழுவதும் பல மசூதிகள் மீது இந்துமத வெறியர்கள் உரிமை கொண்டாடி மதக் கலவரத்தைத் தூண்டுகிறார்கள்; இதோ! மதுரா கிருஷ்ணன் அவதார பூமிக் கலவரமும் துவங்கி விட்டார்கள். ஆகவே அயோத்தியை நினைவுச் சின்னமாக்குவது கூட அவர்களை வெற்றியாகக் கருதி ஊக்கத்தோடு மதக் கலவரங்களைத் தூண்டுவார்கள். அயோத்தி மசூதியை முஸ்லீம்களிடம் ஒப்படைத்தாலும் அதற்கு எதிராக மதக் கலவரங்களைத் தூண்டுவார்கள் என்பது உண்மைதான். எனவே மதவெறி பாசிசத்துக்கு எதிராக புரட்சிகர இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதுதான் தீர்வாக முடியுமே தவிர அதற்கு விட்டுக் கொடுத்து சமரசம் செய்வதுதான் மிகவும் அபாயகரமானது.



படிப்பகம்

www.padippakam.com

# 'மார்க்சிஸ்டு'கள் – மதவெறியர்கள் கூட்டணி

"பாரதீய ஜனதா கட்சிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உள்ள கொள்கை வேற்றுமை என்ன? விளக்கம் தருக!" - என்று முருகன், மணி, ஜோதிபாசு ஆகிய புதிய ஜனநாயகம் வாசகர்கள் அன்மையில் நமது ஏட்டுக்கு ஒரு கேள்வி அனுப்பி விளக்கம் கேட்டிருந்தனர். சுருக்கமாகச் சொன்னால், பாரதீய ஜனதாவுக்கும் 'மார்க்சிஸ்டு'களுக்கும் பல பிரச்சினைகளில் கொள்கை வேற்றுமை எதுவும் இல்லை. 'மார்க்சிஸ்டுகள்' காவியுடைக் கம்யூனிஸ்டுகளாக மாறிவிட்டார்கள்

இப்படி நாம் சொல்வது, 'மார்க்சிஸ்டு'களைக் கொச்சைப்படுத்தி அவதூறு செய்யும் நோக்கத்திற்காக அல்ல; அவர்கள் ஆத்திகத்தையும் இந்துமதப் பண்டாரங்களையும் அரவணைத்துச் செல்வதால் அல்ல; இந்து மதச் சடங்கு - சம்பிரதாயங்களை தமது சொந்த வாழ்க்கையில் பின்பற்றி சீரழிந்து கிடக்கிறார்கள் என்பதால் மட்டுமல்ல. நாட்டைக் கல்வியுள்ள பிரச்சினைகளுக்கான அடிப்படை, அதற்கான தீர்வு, கொள்கை மற்றும் அணுகுமுறை அனைத்திலும் இவ்விரு கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டைத்தான் கொண்டுள்ளன. அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளை சற்று ஆழமாகப் பரிசீலிக்கும் எவருக்கும் இந்த உண்மை தெரியவரும்.

● பஞ்சாப் பிரச்சினைக்கு அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்க வேண்டும் என்பது தான் பாரதீய ஜனதா மற்றும் 'மார்க்சிஸ்டு'களின் கொள்கை. சீக்கிய தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்து நாட்டைத் துண்டாட சதி செய்கிறது என்று இருவருமே எல்லாக் கட்சிகளையும் முந்திக் கொண்டு குற்றம் சாட்டுகின்றனர். பஞ்சாபில் அரச பயங்கரவாதிகள் நடத்தும் அட்டூழியங்களைப் பற்றி இருவருமே வாய் திறப்பதில்லை. பஞ்சாபில் பயங்கரவாதம் தலைவிரித்தாடுவதால் அங்கு தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்று கூறி, பஞ்சாப் மக்களின் ஜனநாயக உரிமையை மறுத்து குடியரசுத் தலைவர் ஆட்சியைத் தொடர்ந்து நீட்டிக்க இவ்விரு கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஒற்றுமையாக வாக்களித்து அரச பயங்கரவாத அடக்குமுறையை சட்டபூர்வமாக்கினர்.

● இதேபோல, காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைப் போரை தேசவிரோதமானது, ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் பிரிவினைவாத நடவடிக்கை என்று இவ்விரு கட்சிகளும் ஆளும் வர்க்கக் கட்சிகளோடு சேர்ந்து எதிர்க்கின்றன. பஞ்சாபைப் போலவே காஷ்மீரின் பிரிவினைவாத போராளிகளுக்குப் பாகிஸ்தான் பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்து நாட்டைத் துண்டாட சதி செய்கிறது என்று இருவருமே ஒரே குரலில் குற்றம் சாட்டுகின்றனர். காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்த பகுதிதான்; அதில் பிரிவினைக்கே இடமில்லை; அரச பயங்கரவாதத்தை ஏவி அடக்க வேண்டும் என்பதுதான் இரு கட்சிகளின் ஒரே தீர்வு. இதிலே காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் அரசியல் சட்டத்தின் 370-வது பிரிவை நீக்க வேண்டும் என்று பாரதீய ஜனதா கோருகிறது. 'மார்க்சிஸ்டு'கள் இதுபற்றி கருத்து எதுவும் கூறுவதில்லை. இந்து வெறியனும் அவசர நிலைக் கொடுங்கோலனுமான ஜக்மோகனை கவர்னராக நியமிக்குமாறு தேசிய முன்னணி அரசுக்கு நிர்பந்தம் கொடுத்து பாரதீய ஜனதா கட்சி அதிலே வெற்றி பெற்றது. இதே காரணங்களால் ஜக்மோகனை கவர்னர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டுமென 'மார்க்சிஸ்டு' கட்சி நிர்பந்தித்து அதிலே வெற்றி பெற்றது. அதே சமயம் ஜக்மோகனின் கொலை பாதகச் செயலுக்குப் பரிசாக அவருக்கு ராஜ்யசபா எம்.பி. பதவி அளித்ததை 'மார்க்சிஸ்டு'கள் எதிர்க்கவில்லை. இப்படி காஷ்மீர் பிரச்சினையில், அணுகுமுறையில் இவ்விரு கட்சிகளிடையே சிறு வேறுபாடு இருந்ததே தவிர அடிப்படையான கொள்கையில் அல்ல.

போராளிகளைத் தேடிப்பிடிப்பது என்ற பெயரில் அப்பாவி முஸ்லிம் மக்களைக் கொன்றும், பெண்களைக் கதறக்கதற கற்பழித்தும், வீடு புகுந்து சூறையாடியும் அட்டூழியம் புரியும் இந்திய ராணுவத்தின் பயங்கரவாதத்தை எதிர்த்து இவ்விரு கட்சிகளும் வாயே திறப்பதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, சர்வதேச மனித உரிமைக் கழகத்தினர் பஞ்சாப், காஷ்மீருக்கு வருவதற்கு தே.மு. அரசு அனுமதியளிக்க முன் வந்த போது, இவ்விரு கட்சிகளும் பாசிச ராஜீவ் கும்பலுடன் போட்டி போட்டுக் கொண்டு கடும் எதிர்ப்பு தெரிவித்தன. "இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அத்து மீறிய செயல். நமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட சர்வதேச மனித உரிமைக் கழகத்தை அனுமதிக்கக் கூடாது" என்று பாரதீய ஜனதாவைவிட இரு போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தான் எகிறிக் குதித்தன.



● காஷ்மீர் போராட்டத்தை மட்டுமல்ல; எந்தவொரு இனத்தின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தையும் 'மார்க்சிஸ்டு'கள் எதிர்க்கிறார்கள்; பாரதீய ஜனதாவும் எதிர்க்கிறது. நீண்ட காலமாகவே, வட கிழக்கிந்தியாவில் தொடரும் தேசிய சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் சதிவேலையாக சித்தரித்து 'மார்க்சிஸ்டு'கள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். ஈராண்டுகளுக்கு முன்பு சுயாட்சி உரிமை கோரி போராடிய கூர்க்காலாந்து இயக்கத்தின் மீது வங்கத்தை ஆளும் 'மார்க்சிஸ்டு'கள் அடக்குமுறையை ஏவினர். இதே போலத்தான் பாரதீய ஜனதாவும் எந்தவொரு தேசிய இன போராட்டத்தையும் பிரிவினைவாதம் என்றும், சிறுபான்மை மதத்தினரின் சீர்குலைவு வேலை என்றும் முத்திரை குத்தி தேசியவெறி இந்து வெறியூட்டி எதிர்க்கிறது.

● இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையிலும் இவ்விரு கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டைத்தான் கொண்டுள்ளன, பாகிஸ்தான் எதிர்ப்புக் கொள்கையையும் பிராந்திய மேலாதிக்க நோக்குடன் விஸ்தரிப்புக் கொள்கையையும் இந்திய அரசு நீண்ட காலமாகவே பின்பற்றி வருகிறது. பாகிஸ்தான் அமெரிக்க ஆதரவு நாடு என்பதால், ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை முறியடிப்பது என்ற பெயரால் 'மார்க்சிஸ்டு'கள் பாகிஸ்தான் எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றுகின்றனர். இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் பாகிஸ்தானின் கைக் கூலிகள்; நாட்டைத் துண்டாட பாகிஸ்தான் சதி செய்கிறது என்று இந்துவெறி - தேசிய வெறியூட்டி பாரதீய ஜனதாவும் பாகிஸ்தானை எதிர்க்கிறது. இன்று நேற்றல்ல; பாகிஸ்தான் மீது இரண்டு முறை இந்தியா போர் தொடுத்த போதும், பாகிஸ்தானை துண்டாடி வங்கதேசத்தை உருவாக்க இந்தியா படைகளை ஏவிய போதும் இந்திய அரசின் விஸ்தரிப்பு வாதத்தை போலிக் கம்யூனிஸ்டுகள் ஆதரித்தே வந்துள்ளனர்.

● ஈழப் பிரச்சினையிலும் இவ்விரு கட்சிகளின் நிலைப்பாடும் ஒன்றுதான்! இரு கட்சிகளுமே அமைதிப்படை என்ற பெயரில் நடந்த ஈழ ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தின. அமைதிப் படையின் அட்டூழியங்களும் கொலை வெறியாட்டமும் அம்பலப் பட்ட போதிலும் கூட இக்கட்சிகள் அதைப் பற்றி வாயே திறக்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப். முதலான ஈழத் துரோக அமைப்புகளைக் கொண்டு பாசிச ராஜீவ் கும்பல் நிறுவிய ஈழ பொம்மை அரசை இவ்விரு கட்சிகளும் ஆதரித்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, கடத்தல் கற்பழிப்பு - கொலை வெறியாட்டத்தை நடத்திய இந்திய அமைதிப்படை நாடு திரும்பிய போது, அதை கருணாநிதி வரவேற்காததை இரு கட்சிகளுமே கடுமையாக எதிர்த்தன. இந்திய அரசின் இறையாண்மையையும், ராணுவத்தையும் அவமதிக்கும் தேச விரோதச் செயல் என்று குற்றம் சாட்டின.



படிப்பகம்

www.padippakam.com

**நாட்டை கவ்வியுள்ள முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி பாரதீய ஜனதா கட்சி அலுவலகத்திலேயே 'மார்க்சிஸ்டு'கள் கூடி விவாதித்து ஒத்த நிலைப்பாட்டை அறிவிக்கிறார்கள். பாரதீய ஜனதா தலைவர்களுடன் சேர்ந்து விருந்துண்டு களிக்கும் அளவுக்கு இப்போது 'மார்க்சிஸ்டு'கள் முன்னேறி விட்டார்கள்.**

● இதே போல, பாசிச ராஜீவ் கும்பலின் போபர்ஸ் பீரங்கிக் கொள்ளையை இவ்விரு கட்சிகளும் பெரிதுபடுத்தி அம்பலப்படுத்துவது கிடையாது. தேசிய முன்னணி அரசின் கூட்டாளிகளாக இருந்த போதிலும், போபர்ஸ் கொள்ளையை நிரூபிக்க தே.மு. அரசு எடுக்கும் நடவடிக்கைகளை இரு கட்சிகளுமே கண்டு கொள்வதில்லை. இன்னும் சொல்லப் போனால் முந்தைய ஆட்சியாளர்களைப் பழிவாங்கக் கூடாது என்பதுதான் 'மார்க்சிஸ்டு'களின் கொள்கை. இதை வெளிப்படையாக பாரதீய ஜனதா அறிவிக்கவில்லையே தவிர, கருத்து கூறாமல் மௌனம் சாதிப்பதன் மூலம் இதே கொள்கையைத் தான் அங்கீகரிக்கிறார்கள்.

● தேசிய முன்னணி அரசின் புதிய தொழிற் கொள்கையை எதிர்ப்பதாக இரு கட்சிகளும் ஒரே பாணியில் நாடகமாடுகின்றன. அதேசமயம் தே.மு. அரசைப் போலவே தரகுப் பெருமுதலாளிகளுடன் இருகட்சிகளுமே கூடிக் குலாவுகின்றன. மோசடித் தரகு முதலாளி அம்பாணியுடன் பாரதீய ஜனதா ஒட்டி உறவாடுகிறது என்றால், இந்துஜா, பிர்லா குடும்பத்தின் புதிய தோழர்களாக மாறி போலிக் கம்யூனிஸ்டுகள் விசுவாசமாக சேவை செய்கிறார்கள்.

— இப்படி ஒவ்வொரு பிரச்சினையிலும் பாரதீய ஜனதாவும 'மார்க்சிஸ்டு'களும் ஒரே கொள்கை, அணுகுமுறை, தீர்வுகளை தான் கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ தற்செயலாக நிகழ்ந்துவிட்ட ஒற்றுமை அல்ல. இரு வேறு துருவங்களாக இக்கட்சிகள் சித்தரிக்கப் பட்டாலும், யதார்த்தத்தில் பாரதீய ஜனதாவின் ஆளும் வர்க்கக் கொள்கைகளை அறிந்தேதான் போலிக் கம்யூனிஸ்டுகள் பின்பற்றுகிறார்கள். பாரதீய ஜனதாவும் மார்க்சிஸ்டு'களும் எதிரெதிரான சக்திகள் என்ற நிலைமை எப்போதோ மாறிவிட்டது. பிரதான எதிரியான காங்கிரசை வீழ்த்துவதற்காக, பாரதீய ஜனதாவுக்கு எதிராக வேட்பாளர்களை நிறுத்துவதில்லை என்று வங்கத்து சிங்கம் ஜோதிபாசு தேர்தல் வியூகம் அமைத்தவுடனேயே 'மார்க்சிஸ்டு'களின் எதிர்ப்புக் கொள்கையும் மாறத் தொடங்கியது. ஆரம்பத்தில் நம்பூதிரிபாடு கும்பல் ஜோதிபாசுவின் தேர்தல் தந்திரத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தது. ஆனால் பாசுவின் சாணக்கியத்தனம் தேர்தல் வெற்றியைத் தேடித்தந்ததும் அதுவே கட்சிக் கொள்கையாகிவிட்டது. இப்போதெல்லாம் 'மார்க்சிஸ்டு'களும், போலிக் கம்யூனிஸ்டுகளும் ஒரே மேடையில் கூடிக் குலாவுகின்றனர். நாட்டைக் கவ்வியுள்ள முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி பாரதீய ஜனதா கட்சி அலுவலகத்திலேயே 'மார்க்சிஸ்டு'கள் கூடி விவாதித்து ஒத்த நிலைப்பாட்டை அறிவிக்கிறார்கள். பாரதீய ஜனதா தலைவர்களுடன் சேர்ந்து விருந்துண்டு களிக்கும் அளவுக்கு இப்போது 'மார்க்சிஸ்டு'கள் முன்னேறி விட்டார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் இருவரும் ஒரே கொள்கையைப் பேசினாலும் அவர்களது லட்சியம் மட்டும் வேறாக அறிவித்துள்ளார்கள். பாரதீய ஜனதாவினர் இந்து ராஷ்டிரத்தைச் சாதிக்கத் துடிக்கிறார்கள். அதே கொள்கையைப் பேசும் 'மார்க்சிஸ்டு'கள் வகுப்புவாதத்தை முறியடித்து சோசலிச லட்சியத்தை அடையத் துடிக்கிறார்கள்!

ஆளும் வர்க்கக் கொள்கைகளையே தமது கொள்கையாக ஏற்று விசுவாச முதலாளித்துவக் கட்சியாக சீரழிந்ததோடு மட்டும் 'மார்க்சிஸ்டு'கள் நின்று விடவில்லை. ஆளும் வர்க்கங்களுக்கும் ஆளும் கட்சிக்கும் நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் அதற்கு முட்டுக்கொடுத்து ஆதரிப்பது என்பதும் அவர்களின் திரிபுவாதப் பாரம்பரியக் கொள்கை. ஆளும் கட்சிக்குள் முரண்பாடும் நெருக்கடியும் முற்றும் போது, அதை மக்களிடம் அம்பலப்படுத்தி புரட்சிக்கு அணிதிரட்டுவதற்குப் பதில் அவற்றைப் பூசிமெழுகி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்றப் புனிதத்தையும் மாண்பையும் கட்டிக் காப்பதில் ஆளும் வர்க்கக் கட்சிகளைவிட எப்போதும் முன்னணியில் நிற்கிறார்கள்.

அண்மையில் ஜனதாதளத தலைவர்களிடையே பதவி வெறிக்கான நாய்ச் சண்டை முற்றி ஆட்சியே கவிழும் நிலை ஏற்பட்டதும், ஏதோ அன்னிய ஆக்கிரமிப்பு நடந்து விட்டதைப் போல பதறியடித்துக் கொண்டு 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் டெல்லிக்கு ஓடினர். ஜோதிபாசு டெல்லிக்குப் பறந்துபோய் ஒருவாரம் தங்கி வி.பி.சிங் அரசைக் காப்பதில் குறியாய் இருந்தார்.

நெருக்கடிகள் தற்காலிகமாக ஓய்ந்து நாய்ச் சண்டையில் வி.பி.சிங் கும்பல் வெற்றி பெற்றதும் "இன்றைய சூழ்நிலையில் வி.பி.சிங் அரசு தான் சிறப்பானது" என்று 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பொதுச்செயலாளரான நம்பூதிரிபாடு பத்திரிகைகளுக்கு பெருமையுடன் பேட்டியளித்தார். "இது அவர்களின் உட்கட்சி விவகாரம்; அதில் ஒரு தரப்பினரை ஆதரிப்பதோ எதிர்ப்பதோ எமது நோக்கமல்ல. எனவே இதில் நாங்கள் தலையிடவில்லை. பாரதீய ஜனதாகூட எதுவும் செய்யவில்லை. அப்படி நாங்கள் ஏதாவது செய்திருந்தால் அது ராஜீவ்காந்திக்கு சாதகமாகிவிடும்" என்று தாங்களும் பாரதீய ஜனதாவும் ஒரே அலை வரிசையில் சிந்தித்து செயல்பட்டதைக் குறிப்பிட்டார்.

அதாவது இந்த ஆட்சி கவிழ்ந்துவிடக் கூடாது; அப்படி ஏதாவது நடந்துவிட்டால் அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இந்த நாடாளுமன்ற அமைப்பு முறையின் மீதே மக்களுக்கு அவநம்பிக்கையும் வெறுப்பும் ஏற்பட்டுவிடும் என்பதால் அதை மூடி மறைத்து நாடாளுமன்ற புனிதத்தைக் கட்டிக் காக்க போலிக் கம்யூனிஸ்டுகள அலாதி அக்கறையுடன் செயல்பட்டுள்ளார்கள் என்பது தான் உண்மை.

இன்றைய நிலையில் வி.பி.சிங் அரசை ஆதரிக்கா விட்டால் மீண்டும் பாசிச காங்கிரஸ் ஆட்சிக்கு வந்துவிடும் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் வாதிடுவது உழைக்கும் மக்களின் நலன்களுக்கே எதிரானதாகும். இது அவர்களின் கையாலாகாத் தனத்தைத்தான் காட்டுகிறது. சிறிய சக்தியேயானாலும் சரியான மாற்றுக் கொள்கைகளை முன்வைத்துப் போராடுவதுதான் சரியானது என்பதை ரஷியாவில் 1905 புரட்சியின் போது லெனின் தலைமையிலான கம்யூனிஸ்டுகள் நடைமுறையில் நிரூபித்துக் காட்டினர். நிலப்பிரபுத்துவ எதேச்சதிகார ஜாரிசத்துக்கு மாற்றாக அதிகாரத்துக்கு வந்த முதலாளித்துவ ஆட்சியை ரஷிய கம்யூனிஸ்டுகள் ஆதரித்துக் கொண்டிருக்கவில்லை. அனைத்து அதிகாரமும் சோவியத்துகளுக்கே!" என்ற முழக்கத்துடன் முதலாளித்துவ ஆட்சியை தொடர்ந்து அம்பலப்படுத்திப் போராடியதால் சிறிய சக்தியாய் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் பலமிக்க சக்தியாக வளர்ந்து 1917 நவம்பரில் மகத்தான சோசலிசப் புரட்சியைச் சாதிக்க முடிந்தது.

ஆனால் இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகள் மாற்றுக் கொள்கை எதுவுமின்றி கருணாநிதிக்கு பதில் எம்.ஜி.ஆரையும், எம்.ஜி.ஆருக்கு மாற்றாக கருணாநிதியையும் மாறி மாறி ஆதரித்து நாற்காலி சுகம் காணுவதையே 'புரட்சி'யாக்கியுள்ளனர்.

ஒரு கட்சி போய் மறுகட்சி ஆட்சிக்கு வருவதாலேயே அரசு எந்திரம் மாறிவிடுவதோ புனிதமடைந்து விடுவதோ இல்லை. இன்றைய தேசிய முன்னணி அரசு ஜனநாயக நாடகமாடுவதாலேயே பாசிச முறையில் கட்டி வளர்க்கப்பட்ட அரசு எந்திரம் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி விடுவதில்லை. அது மேலும் பாசிசத்தை நோக்கிப் பாயவே காத்திருக்கிறது என்பதையே காஷ்மீர், பஞ்சாபில் நிலவும் அரசு பயங்கரவாத ஆட்சி நிரூபிக்கிறது.

எனவே எவ்வளவு காலத்துக்கு நாடாளுமன்ற புனிதத்தைக் காக்க இன்றைய ஆட்சியை போலிக்கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்களோ அந்த அளவுக்கு அரசு எந்திரம் பாசிசத் தன்மை கொண்டதாக மாறி மக்களுக்குப் பெருஞ்சுமையாகி விடுகிறது. அதனால்தான் போலிக் கம்யூனிஸ்டுகளின் உறுதியான ஆதரவின்றி பாசிசம் அதிகாரத்துக்கு வரமுடியாது என்று மிகத் தெளிவாகவே பாட்டாளிவர்க்க ஆசான்கள் சுட்டிக் காட்டினர். இங்குள்ள போலிக் கம்யூனிஸ்டுகளின் நடைமுறை அதைத்தான் நிரூபிக்கிறது.

போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலுள்ள புரட்சிகர ஊழியர்கள் இனியும் தங்களது துரோகத் தலைமையைச் சகித்துக் கொண்டிருப்பதில் பலனில்லை. புரட்சியைச் சாதிக்கவும், துரோகத் தலைமையைத் தூக்கி யெறியவும் கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் அணிதிரள்வதைத் தவிர வேறு வழியுமில்லை.

● குமார்.



படிப்பகம்

www.padippakam.com

# காலிகள்

# சிறப்பு ~~காவல்~~ படை!?

வேதாரண்யம் குருகுலம் அருகில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை (TSP) முகாம் உள்ளது. அங்கிருக்கும் கன்னியா குருகுலம் பள்ளி மாணவிகள் இம்முகாம் வழியாகத்தான் செல்ல வேண்டும். மேலும் முகாமிற்கு கிழக்கேயுள்ள பகுதி மக்கள் முகாமிலிருக்கும் கைபம்புகளுக்குத்தான் தண்ணீர் எடுக்க வரவேண்டும். அதுபோல குளிப்பதற்கும் TSP முகாமை அடுத்துள்ள ஏரிக்குத்தான் இப்பகுதி பெண்கள் வர வேண்டும். இப்பெண்களை கிண்டல் செய்வது - வம்புக்கு இழுப்பது என முகாமிலுள்ள போலீசு கும்பல் தொல்லை கொடுத்து வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்பு ஏரிக்கு குளிக்கச் சென்ற சோமு என்பவரது மகளை சில போலீஸ் ரவுடிகள் வம்புக்கு இழுத்ததை கண்டித்து திட்டினார் சோமு. இதனால் அக்கும்பல் அவர் பெண்ணை இழுத்துச் சென்று தனியறையில் பூட்டி அடித்திருக்கிறது. ஆத்திரமடைந்த சோமு கத்தியுடன் வந்து போலீசு கும்பலை கண்டிக்க, வாய்த்தகராறு முற்றி கத்தியால் தாக்கினார். சில போலீசாரின் மண்டை உடைந்து ரத்தம் வரவே போலீசு கும்பல் அவரை பலமாக திருப்பி தாக்கியது. செய்தியறிந்த சோமுவின் மனைவி பகுதி எம்.எல்.ஏ வீட்டிற்குச் சென்று முறையிட்டாள். பிறகு சிலர் தலையிட்டு பகுதிமக்களை திரட்டிக்கொண்டு TSP முகாமை நோக்கி வந்தனர். இதற்கிடையில் போலீசு கும்பல் சோமுவை விட்டு விட்டு ஓடிவிட்டது. பகுதி எஸ்.ஐ. தலையிட்டு அப்போலீசு கும்பலில் சிலரை தற்காலிக நீக்கம் செய்தார். ஊர் பெரியவர்களும் மக்களை கட்டுப்படுத்தினர். பகுதிமக்கள் போலீசு ரௌடிகளை கண்டபடி திட்டிவிட்டு திரும்பினர்.



இச்சம்பவத்திற்குப் பிறகும் போலீசுக் கும்பல் அடங்கவில்லை. முன்பைவிட அதிகமாக பெண்களுக்கு தொல்லை கொடுத்து வருகிறார்கள். இதனால் TSP முகாமை இப்பகுதியிலிருந்து அகற்ற வேண்டும் என மக்கள் கோரி வருகிறார்கள். ரௌடிகள், பொறுக்கிகள், கிரிமினல்கள் நிறைந்த கூடாரமே போலீஸ் துறை. இதற்கென்றே பிரத்யேகமாக பயிற்சிக் கொடுத்து வளர்க்கும் முகாம்கள் குடியிருப்பு பகுதிகளிலிருந்து ஆள் அரவம் இல்லாத காட்டுப்பகுதிகளுக்கு துரத்துவதுதான் சரியானது. அதற்கான போராட்டத்தை பகுதிமக்கள் எடுத்துச் செல்ல வேண்டும்.

தகவல்: பு.ஜ.வாசகர் வட்டம்.
வேதாரண்யம்.

---

## கோவை என்.டி.சி. மில்ஸ்:

# தொழிற்சங்க புரோக்கர்களின் துரோகம்

கோவையிலுள்ள மத்திய அரசினுடைய என்.டி.சி. (National Textile Corporation) நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் துணி ஆலைகளில் ஒன்றான சி.எஸ்.எஸ்.டபிள்யூ மில்லில் கடந்த 9.7.90 முதல் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதில் போலி கம்யூனிஸ்டுகளின் தலைமையின் கீழுள்ள சி.ஐ.டி.யு தொழிற்சங்கத்தைத் தவிர மற்ற தொழிற் சங்கங்கள் அனைத்தும் பங்கேற்றன.

நிர்வாகம் வேலை அதிகமாக உள்ளது என அடிமட்ட கூலி கொடுத்து சுமார் 300 ஆட்கள் வரை வேலைக்கமர்த்தி தினக்கூலி முறையில் வேலையை செயது முடிக்கிறது

வார விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமையிலும் நிர்வாகம் இதுபோல் வேலைக்கு அமர்த்துவதில் மேஸ்திரியாக இருப்பவர்களே தொடர்ந்து பல ஆண்டுகளாக வேலை செய்து வருகிறார்கள். மேஸ்திரிகளுக்குப் பதிலாக அடுத்த சாதாரண தொழிலாளர்களையும் வேலைக்கு எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்து 9.7.90 முதல் தொழிலாளர்கள் போராடினார்கள். பெரும்பான்மையான மேஸ்திரிகள் CITU சங்கத்தில் இருந்ததால் 'கடந்த 10 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் பழக்கத்தை மெதுவாக பேசித் தீர்த்துக் கொள்ளலாம். இதற்கு வேலை நிறுத்தம் தேவையில்லை என்று இதன் தலைமை அறிவித்தது. எனினும் மற்ற சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தனர்.

கடந்த 19.7.90 அன்று, துணிகள் தயாரிப்பில் 'பினிசிங்' வேலையை மட்டும்தான் செய்ய வேண்டும் என ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபின் போராட்டத்தைக் கைவிட்டனர்.

மேலும், என்.டி.சி. மில்களில் சமீபகாலங்களாக கட்டாய ஓய்வுத் திட்டம், பதிலி, அப்பரண்டீஸ்களையும் நிரந்தரமாக்காமல் வைத்திருப்பது, காண்டிராக்ட் முறையில் வேலை வாங்குவது என நடைமுறைகள் மேற்கொள்ளப் படுகின்றன.




ஆனால் இங்குள்ள சங்கங்கள் அனைத்தும் தினக்கூலி மற்றும் காண்டிராக்ட் முறையை ஒழிக்கப் போராடாமல் அதில் வேலை செய்யும் பழைய தொழிலாளர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமிக்கக் கோரி போராடுகின்றன. இதன்மூலம் தொழிலாளர்களின் உழைப்பை நிர்வாகம் மற்றும் காண்டிராக்டர்கள் சுரண்டுவதற்கு சேவை செய்கின்றன.

நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களின் இத்தகைய தொழிலாளர் விரோத போக்கை அம்பலப்படுத்தியும் தொழிலாளர்கள் செய்ய வேண்டியது பற்றியும் விளக்கி, வாயில் கூட்டம் ஒன்றை கோவை தொழிலாளர் பிரச்சாரக் குழுவும், மக்கள் கலை இலக்கிய கழகமும் இணைந்து நடத்தின. 15.7.90 அன்று காளீஸ்வரா ஆலை வாயில் நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் ம.க.இ.க சென்னை கிளைச் செயலர் தோழர் சீனிவாசன் மற்றும் பலரும் உரை நிகழ்த்த தொழிலாளர்கள் கூடி நின்று கேட்டு ஆதரவு தந்தனர்.

தகவல்:- தொ.பி.குழு. கோவை.



படிப்பகம்

www.padippakam.com



உழுபவர்களுக்கே நிலம்!
உழைப்பவர்களுக்கே அதிகாரம்!

வரும் 8.9.90 சனிக்கிழமையன்று திருக்காட்டுப்பள்ளியில்

## விவசாயிகள் விடுதலை முன்னணியின் திருவையாறு வட்டார முதல் மாநாடு!

அனைவரும் வருக! ஆதரவு தருக!

இவண்
மாநாட்டு வரவேற்புக் குழு.

### வி.வி.மு. கிளைத் தொடக்கம்

## புரட்சிப் பாதையில் பயணம்



விவசாயிகள் நிலப்பிரபுத்துவ சுரண்டலுக்கும், ஏகாதிபத்திய கொள்ளைக்கும், அரசின் அடக்குமுறைக்கு எப்போதும் பணிந்து அடங்கிக் கிடக்க மாட்டார்கள். அவற்றை எதிர்த்துப் போராடி முறியடித்து புதிய சகாப்தம் படைப்பவர்கள் என்பதை பறை அறிவித்திருக்கிறார்கள். ஆம். விவசாயிகள் விடுதலை முன்னணியின் கிளையைத் தொடங்கி புரட்சிகரப் பாதையில் பயணம் தொடங்கியிருக்கிறார்கள், திருவோணம் வட்டார நாயக்கர்பட்டி கிராமத்து விவசாயிகள். 3.8.90 அன்று மாலை 7 மணியளவில் வி.வி.மு. கொடியேற்றி கிளைத் தொடக்க விழாவும் பின்னர் பொதுக்கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது.

புதிய கிளையின் அமைப்பு, செயலாளராக தோழர் கலைச் செல்வன், பொருளாளராக தோழர் மணி, துணைச் செயலாளர்களாக தோழர்கள் ராஜன், சிவானந்தம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு பொறுப்பெடுத்துக் கொண்டனர். பொதுக்கூட்டத்திற்கு தோழர் புரட்சி கவிச்சுடர் தலைமை தாங்க, ம.க.இ.க. தோழர் காளியப்பன் மற்றும் வி.வி.மு. தோழர்கள் இராம. துரை மாணிக்கம், நா.குருமூர்த்தி, என்.மணி, ஏ.அருண் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்திற்கு ஏராளமான விவசாயப் பெருங்குடி மக்களும், உழைக்கும் மக்களும் கலந்து கொண்டனர். விழா இறுதியில் தோழர் ராஜன் நன்றியுரை வழங்க சர்வதேச கீதத்துடன் விழா முடிவடைந்தது.

— *தகவல்: வி.வி.மு. நாயக்கர்பட்டி,*
*திருவோணம் வட்டாரம்.*



### பட்டுக்கோட்டை வட்டார மாநாடு

## விடியலை நோக்கி வீறுநடை

வரலாற்றில் புதுத்தடம் அமைக்க, போர்க்குணம் கொண்ட விவசாயிகளது போராட்ட இயக்கத்தை கட்டி வளர்க்க, விவசாயிகளின் விடுதலையை சாதிக்க முற்பட்டுள்ள விவசாயிகள் விடுதலை முன்னணி தமிழகமெங்கும் தனது வட்டார மாநாடுகளை நடத்தி வருகிறது. கடந்த 28.7.90 சனிக்கிழமை காலை 9 மணியளவில் பட்டுக்கோட்டையில் தியாகி இரணியன் நினைவரங்கத்தில் வட்டார முதல் மாநாடும், காவிரி நதி நீரில் தமிழக உரிமையை வலியுறுத்தும் சிறப்புக் கருத்தரங்கமும் எழுச்சியோடு தொடங்கியது. வட்டார. மாநாட்டிற்கு தோழர் இராஜ மாணிக்கம் தலைமை தாங்க, வி.வி.மு செங்கொடியை தோழர் எம்.நடராஜன் ஏற்றிவைக்க, தியாகிகள் திருவுருவப் படத்தை தோழர் குருமூர்த்தி திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து காவிரி நதிநீரில் தமிழக உரிமையை வலியுறுத்தும் சிறப்பு கருத்தரங்கமும் பிற்பகல் 2 மணிக்கு வட்டார மாநாட்டு கருத்தரங்கமும் நடைபெற்றது. இதில் வி.வி.மு. தோழர்கள் கே.பி.இராமசாமி, நாராயணன், மாது. இராம. துரைமாணிக்கம் மற்றும் ம.க.இ.க. தோழர்கள் தமிழ்மணி, காளியப்பன் முதலானோர் உரையாற்றினார்கள். மாலை 5 மணியளவில் விண்ணை திரும் முழக்கங்களுடன் மாநாட்டு பேரணி பட்டுக்கோட்டை முக்கிய வீதிகளின் வழியாக பொதுக்கூட்டத் திடலை வந்தடைந்தது.

தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெற்ற மாநாட்டு விளக்கப் பொதுக் கூட்டத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டார செயலர் தோழர் சந்திரசேகரன் தலைமை தாங்க கே.பி.இராமசாமி, சீனிவாசன் (ம.க.இ.க) ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் மாது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செயற்குழு உறுப்பினர்களான சந்திரசேகரன், இராஜமாணிக்கம், செல்வகுமார் ஆகியோரை அறிமுகப்படுத்தி எழுச்சி மிகு உரையாற்றினார். தோழர் சந்திரசேகரன் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கியும் பொறுப்பெடுத்துக் கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் சார்பாக ஏற்புரையும் நிகழ்த்தினார். கலைக்குழுவினர் எழுச்சியுடன் புரட்சிகர பாடல்களைப் பாடினர். திருச்சி பகத்சிங் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் நடத்திய 'கோமாளி கூத்து' நிகழ்ச்சி மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

பட்டுக்கோட்டை வட்டாரக்கிளை தனது தொடக்கத்திலிருந்தே ஆதிக்க சக்திகளின் - நிலப்பிரபுத்துவ சக்திகளின் தாக்குதல்களையும், அரசு எந்திரத்தின் அடக்குமுறை மிரட்டல்களையும் சந்தித்து முறியடித்து போராடி முன்னேறி வருகிறது. ஆளும் வர்க்கம் மற்றும் அரசின் தாக்குதல்களாலும், மிரட்டல்களாலும் புரட்சிகர அமைப்புகள் முடங்கி-அழிந்து விடுபவையல்ல; மாறாக தீரமுடன் வேகமாக வளரவே செய்யும் என்பதை நிரூபிக்கும் வண்ணம் அமைந்தது இம்மாநாடு.

தகவல்:- வி.வி.மு. பட்டுக்கோட்டை.



படிப்பகம்

www.padippakam.com

## வீரமணி கும்பலின் பிழைப்புவாதம்

# சுயமரியாதை சொல்லுக்கு அவமரியாதை

**தி.க.** வீரமணியின் பகுத்தறிவுப் பாசறையிலிருந்து வெளிவரும் 'உண்மை' ஏடு ஜூலை (1-15) இதழில் இப்படி எழுதியிருந்தது:

''இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டின் ஆசிரியராக இருக்கும் அருண் ஷோரி எனும் பஞ்சாப் பார்ப்பனர், பிரதமர் வி.பி.சிங்கிற்கு கொம்பு சீவி விட்டு, துணைப் பிரதமர் தேவிலாலுக்கு எதிரான திட்டமிட்ட பிரச்சார இயக்கத்தையே - தனது பத்திரிக்கை மூலம் நடத்தி வருகிறார். இந்தப் பிரித்தாளும் திட்டத்தின் மூலம் பார்ப்பன ஆதிக்க சக்திகள், தங்களை நிலைப்படுத்திக் கொண்டு வருகின்றன.''

பதினைந்து நாட்களுக்குப் பிறகு அதே வீரமணி நேரடியாக இப்படி ஒரு அறிக்கை விடுகிறார், பல பத்திரிக்கைகளிலேயும் வருகின்றன.

''தேவிலால் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதில் பி.ஜே.பி; ஆர்.எஸ்.எஸ். போன்ற கட்சிகள் மிகவும் குறியாக இருந்தன.

தேவிலாலின் சில கட்டுப்பாடற்ற போக்கு அவர் மீது மற்றவர்களுக்குள்ள மரியாதையைக் குறைத்துள்ளது என்பது உண்மைதான்.

தேவிலால் அவர்களுக்கும் ராஜதந்திரத்திற்கும் வெகு தூரம்.

பிரதமர் வி.பி.சிங் துணைப் பிரதமர் தேவிலாலைப் பதவி நீக்கியது குறித்து மிகப் பெரிய ஆய்வு தேவை இல்லை. காரணம், யாரைப் போடுவது, யாரை நீக்குவது என்பது எந்த நாட்டிலும் கேபினட் முறையில் ஒரு பிரமதருக்குள்ள குறைக்க முடியாத உரிமையாகும்.

இச்செய்கைக்குப் பிறகும் அவர்தான் தலைவர் என்று தேசிய முன்னணியினர் ஒருமுகமாக நாட்டிற்கு அறிவித்து விட்டதன் மூலம் அவரது கரம் பலப்பட்டு விட்டது. அவரது செய்கை நியாயப்படுத்தப்பட்டு, பாதிக்கப் பட்டவர்களால் கூட ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

எல்லாவகையிலும் சீர்மையாகவும் கூர்மையாகவும் உள்ளவர் வி.பி.சிங். நிதானப் போக்கு கொண்ட அவர் மேலும் தனித்த மெஜாரிட்டி பெருகிற தலைவராக தன்னை உயர்த்திக் கொள்ளும் கட்டத்தில் முக்கிய வெற்றியைப் பெற்று விட்டார் என்பதே இதன் உள்ளார்ந்த தத்துவம்.

இத்தருணத்தில் ஏற்பட்ட இந்த 'நெருக்கடி' வருத்தப்படவேண்டிய 'நெருக்கடி' அல்ல. வரவேற்றுப் பாராட்ட வேண்டிய 'நெருக்கடி'யாகும்.''

'உண்மை' ஏட்டின் முந்தைய கருத்துப்படி பார்த்தால் பார்ப்பன சூழ்ச்சிக்கு பகுத்தறிவு வீரமணியே பலியாகி விட்டார் பதினைந்து நாட்களில் திடீர் 'பல்டி' அடித்து விட்டார். இப்போது பார்ப்பனர்களின் கொம்பு சீவிவிடும் பிரித்தாளும் திட்டமே பாராட்ட வேண்டிய 'நெருக்கடி'யாகிவிட்டது. அது இப்போது பார்ப்பன ஆதிக்க சக்திகள் தங்களை நிலைப்படுத்திக் கொள்வதாகத் தெரியவில்லை. 'சூத்திர'த் தலைவர் வி.பி.சிங்கின் கரம் பலப்படுவதாகத் தெரிகிறது.

ஏன்? தேவிலால் பதவி பறிபோய் விட்டது. கருணாநிதியும் கோஷ்டி மாறிவிட்டார். பதவியில் இருப்பவர் பாதம் தாங்குவது தானே இவர்களின் சுயமரியாதை, இனமானம், பகுத்தறிவு - பாமரர் மொழியில் சொல்வதானால் ''பொழப்பு''!

இப்போதும் கூட தேவிலால் ஒரு கொடிய நிலப்பிரபு, பதவி வெறிபிடித்த கொலைகாரன், ஃபோர்ஜரிப் பேர்வழி, சந்திராசாமி போன்ற இரகசிய உலக மோசடிப் பேர்வழிகளின் கூட்டாளி என்று வீரமணி பார்க்கவில்லை. ஏனென்றால் அவரும் ஒரு 'சூத்திரன்'! தேவிலாலிடம் உள்ள குறை, சில கட்டுப்பாடற்ற போக்கு உடையவர்; ராஜதந்திரம் இல்லாதவர் என்றுதான் பார்க்கிறார், வீரமணி.

பகுத்தறிவுவாதி என்று கூறிக்கொள்ளும் வீரமணி கும்பல் ஒரு மூடத்தனமான பார்வை வைத்திருக்கிறது. எத்தகைய குற்றம் செய்பவரானாலும் சரி; எவ்வளவு மோசமான மக்கள் விரோதியானாலும் சரி; அவர் பார்ப்பனரா, பார்ப்பனர் அல்லாதவரா என்று பார்க்கிறது. பார்ப்பனர் அல்லாதவராக இருந்ததால் அவரது குற்றங்கள், சமூக விரோதச் செயல்கள் எதுவானாலும் கண்ணை மூடிக் கொண்டு நியாயப்படுத்துகிறது. எல்லாம் பார்ப்பன சதி, சூழ்ச்சி என்று சாதிச் சாயம் பூசிவிட்டால் போதும், 'திராவிடமக்கள்' ஏற்றுக் கொள்வார்கள் என்றும் நம்புகிறது.

இதற்கு இன்னொரு சமீபத்திய சான்று 'உச்ச நீதிமன்ற நீதிபதி' ராமசாமியின் ஊழல் விவகாரம். அதற்கும் பின்வருமாறு சாதிச்சாயம் பூசுகிறார் வீரமணி.

''பஞ்சாபிலே ஒருவரும் தலைமை நீதிபதியாக செல்லத் துணியாத காலத்திலே தமிழ்நாட்டிலே இருந்து நீதிபதியாகச் சென்றவர் ஜஸ்டிஸ் ராமசாமி அவர்கள்; நான் போகிறேன் என்ற துணிச்சல் அன்றைக்கு தமிழனுக்குத் தானய்யா வந்தது. அவர் பஞ்சாபிற்குப் போன நிலையிலே சில சலுகைகள் எல்லாம் கொடுத்து வைத்திருந்தார்கள். அதன்படி நடந்தவுடனே அங்கிருக்கின்றவர்கள் எல்லாம் சேர்ந்து வேண்டுமென்றே பார்ப்பனர்களும், நம்மவர்கள் சிலரும் — நம் ஆட்களிலேயே எத்தனையோ பேர் காட்டிக் கொடுக்கின்றவன் எல்லாம் இருக்கிறார்களே - எல்லோரும் சேர்ந்து அவர்மீது குற்றம் என்று சொல்லி வந்த நிலையிலே கடைசியாக ஒரு செய்தி வந்திருக்கின்றது.

''சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி அவரை விடுமுறையில் போகுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார். எந்தச் சட்டத்தின் கீழ் அவர் இதைச் செய்கிறார்? நண்பர்களே, ஒரு கடிதம் தயாரித்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் கடிதம் செய்தியாளர்களுக்குக் கொடுக்கப்படும்.

''ஏனென்றால், இந்த மாதிரி காரியங்கள் எல்லாம் செய்வதற்கு திராவிடர் கழகத்துக்காரன் தானய்யா இருக்கிறான். நாங்கள் பலிகடா ஆவதைப்பற்றிக் கவலை இல்லை. நாங்கள் தூக்குமேடைக்குப் போனாலும் உண்மையைச் சொல்லி விட்டு தூக்குக் கயிறை முத்தமிடக் கூடியவர்கள். தமிழனுக்காக - தமிழ்நாட்டு நலனுக்காகவும் எந்த விலை கொடுக்கவும் இந்த இயக்கம் தற்கொலைப் பட்டாளமாக இருக்கின்றது.''

இவ்வாறு இளைஞர் அணி மாநாட்டில் 'வீர' முழக்கமிட்டார் வீரமணி. பஞ்சாபுக்குப் போகும் துணிச்சல் 'தமிழன்' ராமசாமிக்குத்தான் இருந்ததாம்! ராமசாமிக்கு முன்னும் பின்னும் யாரும் போகவில்லையா?





படிப்பகம்

www.padippakam.com

அரசு பயங்கரவாதத்துக்கு நியாயம் கற்பிக்கும் கருங்காலித்தனத்துக்கு துணிச்சல் வேறு வேண்டுமா?

சலவை பில், டெலிபோன் பில், வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான் வாங்கியது என்று விதிமுறைகளை மீறி ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் ஊழல் செய்து பிடிபட்டுள்ளார் ராமசாமி. இந்த ஊழலுக்குத்தான் வக்காலத்து வாங்குகிறது வீரமணி கும்பல். இதற்காகத்தான் பார்ப்பான், அல்லாதவன் என்று பெருங்கூச்சல் போடுகிறது. தமிழன் பெயரைச் சொல்லி பதவிகளை வாங்குகிறார்கள்; ஊழல் செய்துவிட்டு தமிழன் பெயரைச் சொல்லித் தப்பிக்கிறார்கள்.

தூக்கு மேடை போகவும், தூக்குக் கயிறை முத்தமிடவும், எந்த விலை கொடுக்கவும், தற்கொலைப் பட்டாளமாக இருக்கவும் உள்ளது, திராவிட இயக்கம்! யாருடைய நலனுக்காக? யாருக்காக? ராமசாமி போன்ற ஊழல் பேர்வழிகளுக்காக!

இப்படித்தான் தேவிலால் போன்ற ஃபோர்ஜரி, கொலைகாரர்களுக்கு வக்காலத்து வாங்குவது; வி.பி.சிங், கருணாநிதி ஆகிய அதிகாரத்தில் இருப்பவர்களின் பாதந்தாங்கிப் பல்லிளிப்பது. ராமசாமி போன்ற ஊழல் பேர்வழிக்குப் பதவி பெறவும், அவர்களின் குற்றங்களில் இருந்து காப்பாற்றவும் பாடுபடுவது. — இதுதான் வீரமணி கும்பலின் பார்ப்பன எதிர்ப்பு. இதுதான் சூத்திர நலன், தமிழர் நலன் காப்பு!

இதற்காகவெல்லாம் வாய்கிழியும் வீரமணி, பார்ப்பன டி.வி.எஸ். முதலாளியும், 'சூத்திர' கருணாநிதி அரசும் கூட்டுச்சேர்ந்து தமிழ்த் தொழிலாளர்களை அடித்து நொறுக்கி சிறையில் தள்ளியுள்ளதைப் பற்றி மூச்சுவிடவில்லை. வீரமணியின் கண்ணுக்குத் தெரியவில்லை.

இங்கே தமிழன் தன்னுரிமைக்குப் போராடும் போது ஓடிஒளிந்துக் கொள்ளும் வீரமணி, விடுதலைப் புலிகளை ஆதரிப்பது கூட எதற்கு? அது தூரத்தில், வேறு மண்ணில் நடக்கிறது; அதனால் தன் தோலுக்கும் ஆபத்தில்லை. அதே சமயம் தமிழர் தளபதி என்ற பேரும் கிடைக்கும். அதுவும் தேவிலால், வி.பி.சிங், கருணாநிதி, ராமசாமி போன்றவர்களுக்கு ஊழியஞ் செய்வதற்குப் பயன்படும்.

இதற்குக் காரணம், அவர்களெல்லாம் பார்ப்பனர் அல்லாத சாதிக்காரர்கள் என்பது மட்டுமல்ல; வீரமணியின் சாதிக்காரர்கள் என்பதுதான். இவர்கள் அனைவருமே மக்கள் சொத்தை சூறையாடுபவர்கள்.

திராவிட கழகத்தின் கோடி கோடியான சொத்துக்களை இரகசிய அறக்கட்டளை போன்ற பலபெயர்களில் சுருட்டிக் கொண்டதோடு, நன்கொடைகள் என்ற பெயரால் மேலும் பொது மக்களிடம் கொள்ளையடிக்கிறது வீரமணி கும்பல். இதை எதிர்த்ததற்காக கழகத்தின் மூத்த தலைவர்களான விடுதலை சம்பந்தம், விசாலாட்சி அம்மையார் முதலியவர்களைத் தனிமைப்படுத்தி பழி வாங்குகிறது. தானே தமிழர்களைப் பலிகடாக்களாக்கும் இந்த வீரமணி கும்பல் தானா தமிழர்களின் தமிழ் நாட்டின் நலன் காக்கும்?

■ மணி

# ஊழலுக்கு உடந்தை 'மார்க்சிஸ்டு'களின் வாக்குமூலம்

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடந்து முடிந்த வருவாய்த்துறையினரின் போராட்டம் - வேலை நிறுத்தம் தமிழக அரசை பாதிக்காமல் இல்லை. வங்கிகளில் அரசு கடன் வழங்குவது தொடர்பான வேலைகள், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் கருவூலம் தொடர்பான வேலைகள், தாலுகா அலுவலகங்களில் சான்றிதழ்கள் தருவது தொடர்பான வேலைகள் முதலான பல வேலைகள் முடங்கிப் போயின. சுமார் 15,000 வருவாய்த்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கிவரும் அமைப்பான வருவாய்த்துறை அலுவலர் சங்கமே [ROA] இப்போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியது. இச்சங்கம் சி.பி.எம் கட்சியின் வழி காட்டுதலில் இயங்கி வருகிறது. ROA நடத்திய இந்த வேலை நிறுத்தப் போராட்டம் பாராளுமன்ற தேர்தல் நடந்த சமயத்திலேயே நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அப்பொழுது சி.பி.எம். கட்சி தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டதால் போராட்டத்தை தள்ளிப் போட்டது. ராஜ்ய சபா தேர்தலில் தனக்கு இடம் கிடைக்காமல் போனதால் அந்த நேரத்தைப் பயன்படுத்தி போராட்டத்தை அறிவித்து நடத்தியது. வருவாய்த்துறை போராட்டத்தில் கருணாநிதி அரசின் அணுகுமுறையை கண்டித்து சி.பி.எம். கட்சி எம்.எல்.ஏ.க்கள் சட்டசபையிலிருந்து வெளிநடப்புக் கூட செய்தனர். இவர்களது தலைவர் ஆர்.உமாநாத் கருணாநிதியை சர்வாதிகாரி எனவும் வர்ணித்தார்.

கருணாநிதி இதற்கெல்லாம் அசைந்து கொடுக்கவில்லை. ''வருவாய்த் துறையின் போராட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு வேலைக்கு திரும்பாவிட்டால் அவர்கள் பணியிடத்தில் புதிய ஊழியர்களை அரசு நியமிக்க வேண்டி வரும்'' என மிரட்டினார். இறுதியில் சி.பி.எம். கட்சியைச் சேர்ந்தவரும் அரசு ஊழியர் சங்க செயலாளருமான எம்.ஆர்.அப்பன் என்பவர் கருணாநிதியிடம் கெஞ்சி சில சலுகைகளைப் (அறிவிப்புகளைப்) பெற்றுத் தந்த பின்பே வேலைநிறுத்தம் வாபஸ் வழங்கப்பட்டது என அறிவித்தார்கள்.

அரசு மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் - கம்பெனிகளில் தொ.மு.ச.வைக் கட்டியுள்ள தி.மு.க.விற்கு வருவாய்த் துறையில் தொழிற்சங்க அமைப்பு இல்லை. இருந்திருக்குமாயின் தமது தொழிற்சங்கத்தின் மூலம் தொழிலாளர்களைப் பிரித்து - அடிவெட்டு வேலை செய்து வருவாய்த் துறையின் போராட்டத்தை முளையிலேயே கிள்ளி எறிந்திருப்பார் கருணாநிதி. அதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடவே தற்பொழுது வருவாய்த்துறையினரிடம் தமது தொழிற்சங்கத்தை உருவாக்கி வருகிறார். வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் தூண்டுதலில் சம்புவராயர் மாவட்டத்தில் அம்மாவட்ட கலெக்டர் அலுவலக மேலாளர் இராஜேந்திரன் என்பவரால் ROA அமைப்பை உடைத்து ROU எனும் புதிய சங்கத்தை உருவாக்க முயற்சி நடந்து வருகிறது. ROA-வில் இருந்து வெளியேறி இவ்வாறு செயல்படும் இராஜேந்திரனுக்கு 28.6.90 தேதியிட்ட மிரட்டல் கடிதம் ஒன்று ROA-வின் மாநிலத் தலைவர் எம்.சிவராஜிடமிருந்து வந்துள்ளது.

''பொதுவாக ROA சங்கத்தினை உடைத்திடவும், குறிப்பாக எனது முதுகில் குத்துவதையும் ஊக்குவிக்கும் செயலிலும் தாங்கள் உதவி செய்ததாக அறிந்தேன். தனித்தனியாக அங்கத்தினர்களை அழைத்து - மிரட்டி வருவதாகவும் அறிகிறேன். இதற்கு தங்களுக்கு 'வசதியாக' இருப்பது HS பணியிடமே. சம்புவராயர் மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டவுடன் உருவான பணியிடங்களில் புதிய நியமனங்களை செய்வதிலும், மாறுதல் நியமனங்களிலும் பெருக்கெடுத்து ஓடுகிற லஞ்சலாவண்யத்திற்கு மூலம் யார் என்பதும் - தாங்கள்தான்



என்பதும் - எனக்குத் தெளிவாக செய்திகள் உண்டு. ROA சங்கத்திற்கு துரோகமான செயலிலிருந்து (புதிய ROU சங்கம் தொடங்கும் செயலிலிருந்து) விலகிக் கொள்வதாகவும், எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை எனவும் மற்றவர்கள் அறிய கூறுவது தங்களுக்கு நல்லது. 5.7.90ல் திருவண்ணாமலை பொதுக்கூட்டம் ஒன்றிற்கு வருகிறேன். அதுவரை எனக்குக் கிடைக்கும் தகவல்களையும் பொறுத்தே எனது செயல்பாடு இருக்கும்''

— என்பதே அக்கடிதத்தின் சாரம். ROA-விலேயே இருந்தால் இராஜேந்திரனது ஊழல்களை - மோசடிகளை வெளிவராமல் பாதுகாப்போம்; ஏன், மேலும் அவருக்கு உடந்தையாக ஒத்துழைப்பும் கொடுப்போம் என்பதுதானே இதன் அர்த்தம். இதன் மூலம் 'மார்க்சிஸ்டு' கட்சியைச் சேர்ந்த சிவராஜ், தானும் தன்னைச் சார்ந்தவர்களும் யார் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.

தகவல்: வாசகர்கள்,
சிவகங்கை.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

இன்றைய மத்திய மந்திரிகள் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணம் போய் வந்து நமது வரிப்பணத்தைப் பாழாக்குகின்றனர். மத்திய மந்திரிகளுக்கு மட்டும்தான் இந்த சலுகையா? எங்களுக்கில்லையா என்று மாநில மந்திரிகளும் எம்.எல்.ஏ.க்களும் இப்போது போர்க்கொடி தூக்கிவிட்டார்கள். எனவே உ.பி. அரசு, சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று அந்நாடுகளின் சட்டமன்ற நடவடிக்கைகளை அறிந்து வர ஏற்பாடு செய்துள்ளது. இதைப் பார்த்த பீகார் எம்.எல்.ஏக்கள் ஆளுக்கொரு மாருதி கார் வாங்க அரசாங்கம் கடனுதவி செய்து தரக் கோரியுள்ளனர். அதன்படி ஒவ்வொருவருக்கும் ஒன்றரை லட்சம் ரூபாய் கடன் வழங்க முடிவாகியுள்ளது.

பீகார், உ.பி. மாநிலங்களில் காலரா நோய் தாக்கி நூற்றுக்கணக்கான மக்கள் கடந்த மூன்று மாதங்களில் மாண்டு போயுள்ளனர். அவர்களுக்கு எந்தவொரு நிவாரணமும் செய்ய வக்கற்ற ஆட்சியாளர்கள் உல்லாச - ஊதாரித்தனங்களில் நீச்ச வடிக்கின்றனர். இந்த லட்சணத்தில் அரசு செலவுகளை 10% குறைக்க போவதாக இந்தக் கழிசடைகள் பசப்புகின்றனர். வெட்கக்கேடு

சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் முதல் குற்றவாளிகள் ஏகாதிபத்திய அரக்கர்கள் தான்! குறிப்பாக, இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் தொழில் நிறுவனங்கள் சுற்றுச்சூழலை கடுமையாகப் பாதித்துள்ளதாக பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களே குற்றம் சாட்டுகின்றனர். இந்தோ - பிரிட்டிஷ் ரசாயன ஆலை தயாரிக்கும் உரம் பயிர்களுக்குப் பாதுகாப்பற்றதாக உள்ளது. ஆங்கிலேய ஏகாதிபத்திய கூட்டுடன் அம்லோஹ்ரியில் நிறுவப்பட்டுள்ள திறந்தவெளி நிலக்கரிச் சுரங்கம் தூசியைக் கக்குவதோடு, திடீரென தீப்பிடித்து எரிகிறது. பிரிட்டன் உதவியுடன் கட்டப்பட்ட கௌசுந்தா அணையினால் வளமான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. நிஹந்தில் உள்ள அனல்மின் நிலையத்திலிருந்து வெளியேறும் நச்சு வாயுவும், தூசியும் காற்றில் கலந்து அமில மழையைப் பொழிகின்றன.

இப்படி சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் மக்கள் எதிரிகள்தான் தங்கள் குற்றங்களை மறைக்க காடுவளர்ப்பு திட்டத்துக்கு உதவி செய்கின்றனர். ஏகாதிபத்திய 'உதவி'யின் ரகசியம் இப்போது புரிகின்றதல்லவா?

ரஷியாவில் கோர்பியின் எதிர்ப்பாளரும், தீவிர முதலாளித்துவ வாதியுமான போரிஸ் எல்ஸ்டின் 'தானிய மணிகளுக்கு எதிராக' [Against the Grain] என்ற பெயரில் தனது சுயசரிதை நூலை அண்மையில் வெளியிட்டுள்ளார். அந்நூலில் தனக்கும், ரஷிய போலிக் கம்யூனிச அதிகாரத்துவ தலைவர்களுக்கும் மார்க்சியத்தைப் பற்றி ஒரு மண்ணும் தெரியாது என்று அம்பலப்படுத்திக் காட்டியுள்ளார். எல்ஸ்டின் ரஷிய 'கம்யூனிஸ்ட்' கட்சியில் சேர விண்ணப்பித்த போது நேர்முகத் தேர்வு வைத்துள்ளார்களாம். பரிவர்த்தனை பண உறவு பற்றி மார்க்ஸ் தனது "மூலதனம்" நூலில் எந்த அத்தியாயத்தில் எந்தப் பக்கத்தில் குறிப்பிடுகிறார் என்று கட்சித் தலைவர்கள் கேட்டார்களாம். மூலதனம் பற்றி எதுவும் தெரியாத எல்ஸ்டின் இக்கேள்வியால் திக்குமுக்காடிப் போய், குருட்டாம் போக்கில், "2வது அத்தியாயம் 387வது பக்கம்" என்று பதிலளித்தாராம். இதைக் கேட்டு பூரிப்படைந்த தலைவர்கள், 'ஆகா, ரொம்ப நல்லது! மார்க்சைப் பற்றி நீங்கள் நன்கறிந்துள்ளீர்கள்!' என்று பாராட்டினார்களாம்! கம்யூனிசத் துரோகிகள் கட்சி கட்டும் லட்சணம் இதுதான்!

கிழக்கு ஜெர்மனியில் போலிக் கம்யூனிச ஆட்சி வீழ்ந்து கிழக்கு - மேற்கு ஜெர்மனி இணைப்புக்கான பணிகள் நடந்து வருவதை உலகெங்குமுள்ள முதலாளித்துவ வாதிகள் மாபெரும் சாதனையாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஜெர்மனியின் ஐக்கியமோ, முதலாளித்துவ ஆட்சியோ கிழக்கு ஜெர்மனி மக்களுக்கு சுதந்திரத்தையோ சுபீட்சத்தையோ கொண்டு வரவில்லை. ஆலைகள் மூடப்படுகின்றன. ஆயிக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து வறுமையில் தவிக்கின்றனர். கடந்த 6 மாதங்களில் ஏறத்தாழ 45,000 பேர் வேலையிழந்துள்ளனர். மக்களிடம் வாங்கும் சக்தியில்லாததால் தினமும் 36,000 லிட்டர் பால் சாக்கடையில் கொட்டப்படுகிறது. பழங்கள், காய்கறிகள் விற்பனையாகாமல் அழுகிப் போவதால் 30,000 ஹெக்டேர் பயிர்நிலத்தை தரிசாக்க ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.



குஜராத்தின் நிலக்கடலை களஞ்சியமான சௌராஷ்டிராவில் வறட்சியும், பஞ்சமும் தலைவிரித்தாடுகிறது. வறட்சி நிவாரண நடவடிக்கை எடுக்க வக்கற்ற பாரதீய ஜனதாவின் உணவு மந்திரியும், விவசாய மந்திரியும் 30 பார்ப்பனர்களை வைத்து ஏறத்தாழ ரூ.50,000 செலவு செய்து வருண பகவானை வேண்டி யாகம் நடத்தினர். இதற்கு முன்பு உண்ணா நோன்பு இருந்து மழைக்காக வேண்டினர். ஓட்டுப் பொறுக்கிகளின் இந்தக் கூத்துகளை எதிர்த்து, அரசின் கையாலாகாத்தனத்தை மறைக்க மக்களைத் திசை திருப்பி தமக்கு விளம்பரம் தேடும் கீழ்த்தரமான வேலை என்று பகுத்தறிவாளர்களும் முற்போக்கு ஜனநாயக சக்திகளும் இதை அம்பலப்படுத்தி இயக்கங்களை நடத்தியுள்ளனர்.

அன்னிய செலவாணி தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக ரஷிய எடுபிடி நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ரஷியாவின் 'டி-72' ரக டாங்கிகளை பாகிஸ்தானுக்கு விற்க முடிவு செய்துள்ளன. ரஷிய சார்பு நாடுகளும் இந்தியாவும் மட்டுமே இதுவரை 'டி-72' டாங்கிகளைப் பெற்று வந்தன. இனிமேல் பாகிஸ்தான் டி-72 டாங்கிகளோடு, மிக்-29 ரக போர் விமானங்களையும் வாங்கிவிடும். "ரஷியாவிடமிருந்து பெற்ற தனிச் சிறப்பான ஆயுதங்கள் என்று இந்தியா பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது; அப்புறம் எதற்கு இந்தோ - சோவியத் நட்புறவு ஒப்பந்தம்?" என்று அமெரிக்க அடிவருடிகள் கேட்கிறார்கள். நியாயம்தானே!

தேசிய சுய நிர்ணய உரிமைப் போரில் முன்னேறி வரும் நாகாலாந்து, மிஜோரம், மணிப்பூர், அஸ்ஸாம் மாநில போராளிகள் தமக்குள் ஐக்கிய முன்னணியை நிறுவி தமது பொது எதிரியான இந்திய ராணுவத்தை எதிர்த்துப் போராட முடிவு செய்துள்ளனர். மணிப்பூரின் மக்கள் விடுதலைப்படை [PLA], அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி [ULFA], மிஜோரத்தின் புரட்சிகர மக்கள் முன்னணி [RPF], நாகா சோசலிஸ்ட் தேசிய கவுன்சில் [NSCN], முதலான அமைப்புகள் கடந்த மே மாத இறுதியில் இந்த ஐக்கியத்தைச் சாதித்துள்ளன. "ஒவ்வொரு தேசிய இனமும் தனித்தனியே போராடுவதை விட ஐக்கியப்பட்டு போராடுவதன் மூலமே நமது சுதந்திரத்தைச் சாதிக்க முடியும்" என்று அவர்கள் பிரகடனப்படுத்தி கூட்டாக பாசறை அமைத்து பயற்சி எடுத்து வருகிறார்கள். வடமேற்கே காஷ்மீர் - பஞ்சாபில் ராணுவத்தைக் குவித்து அடக்கும் ஆளும் கும்பலும் ஒருமைப்பாட்டுவாதிகளும் வடகிழக்கே இப்போது ஐக்கியப்பட்ட தேசிய இன உரிமைப் போர் முற்றி வருவதைக் கண்டு அலறுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நக்சல்பாரி புரட்சிக் கலைஞர் தோழர் கத்தார் கலைநிகழ்ச்சி நடத்துமிடங்களில் எல்லாம் புரட்சித் தீ பற்றிக் கொள்கிறது. ஆட்சியாளர்கள் அவரைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். கர்நாடகாவில் கடந்த ஜூலை 20 முதல் 27 வரை ஒருவார காலத்துக்கு பல்வேறு இடங்களில் தோழர் கத்தார் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளை நடத்தினார். நிகழ்ச்சி முடிந்த அடுத்த நாளே, இனிமேல் அவர் இந்த மாநிலத்திற்குள் நுழையக் கூடாதென கர்நாடக அரசு தடை விதித்துள்ளது. மறுபுறம், விவசாயிகள் நக்சல்பாரி புரட்சி இயக்கத்தை நோக்கி அணி திரளுவதை திசைதிருப்பும் நோக்குடன் குல்பர்கா, தும்கூர் மாவட்டங்களில் ரூ.2.6 கோடிக்கு அவசரமாக வளர்ச்சித் திட்டங்களை அறிவித்தும், 200 ஏக்கர் புறம்போக்கு காட்டு நிலத்தைப் பயிரிட்டதற்காக சின்சோலி வட்டார 'தாழ்த்தப்பட்ட' மக்கள் மீது தொடுத்த கிரிமினல் வழக்குகளை ரத்து செய்தும் முற்போக்கு - ஜனநாயக நாடகமாடுகிறது. ஐயோ பாவம்! ஆந்திராவில் முன்பு பாசிச என்.டி.ஆர். அரசு இப்படி சில அவசரத் திட்டங்களை அறிவித்து தோற்றுப் போன அதே பாதையில்தான் இப்போது கர்நாடக அரசும் செல்கிறது. எனவே ஆந்திராவைப் போல் கர்நாடகமும் விரைவில் சிவக்கப் போவது நிச்சயம்!



'சிவப்பென்றால் அரசுக்கு பயம் பயம்'
கர்நாடகாவில் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடத்தும் தோழர் கத்தார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் 1989ம் ஆண்டின் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் மட்டும் மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள் 881 வாக்குறுதிகளை அளித்துள்ளனர். இவற்றில் இன்றுவரை 60 வாக்குறுதிகள் தான் நிறைவேற்றப்பட்டுள்ளன அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவு செய்யாமல் மந்திரிகள் தன்னிச்சையாக கவர்ச்சித் திட்டங்களை அறிவிப்பதால் அவற்றை நிறைவேற்ற முடியவில்லை என்று வாக்குறுதிகளை கண்காணிக்கும் கமிட்டியின் அறிக்கை கூறுகிறது. 1981 முதல் '88 வரை 2000க்கும் மேற்பட்ட வாக்குறுதிகள் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை என்று அந்த அறிக்கை மந்திரிகளின் யோக்கியதையை மேலும் அம்பலப்படுத்திக் காட்டுகிறது. அதுசரி; குடிகாரன் பேச்சுக்கும் மந்திரிகளின் வாக்குறுதிகளுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது?

போபால் விஷவாயுப் படுகொலையைச் சித்தரிக்கும் "போபால்: படுகொலைக்கு அப்பால்" என்ற செய்தி திரைப்படம் 1987-ல் தங்கத் தாமரை பரிசு பெற்றது. இதுவரை எந்தவொரு செய்தித் திரைப்படத்துக்கும் வழங்கப்படாத இப்பரிசினால் அப்படத்தின் இயக்குனர் தபன்போஸ் வெகுவாகப் பாராட்டப்பட்டார். இத்திரைப்படத்தை தொலைக்காட்சியில் தேசிய நிகழ்ச்சியாக ஒளிபரப்பப் போவதாக அன்றைய மத்திய மந்திரி வாக்களித்தார். ஆனால் பாசிச ராஜீவ் கும்பல் அதை ஒளிபரப்பாமல் முடக்கி வைத்தது. ராஜீவின் வழியில் அடியொன்றிச் செல்லும் புதிய ஆட்சியாளர்களும் இன்றுவரை அதனைத் திரையிடவில்லை. இந்தப் படம் காலங்கடந்த செய்தியைக் கூறுவதால் திரையிட தகுதியற்றது என்று தொலைக்காட்சி அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். இதை எதிர்த்து தபன்போஸ் வழக்கு கொடுத்து ஏறத்தாழ எட்டு மாதங்களுக்குப் பிறகு இப்போது தொலைக்காட்சியில் ஒளிபரப்புமாறு கோர்ட் உத்திரவிட்டுள்ளது. தொலைக்காட்சிக்கு தன்னாட்சி உரிமை வழங்குவதாக தேசிய முன்னணியினர் கூறியது எவ்வளவு பெரிய மோசடி என்பதை இச்சம்பவம் நிரூபித்துக் காட்டிவிட்டது.

நாட்டிலேயே கிராமப்புற வேலையின்மையில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அறிவிக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்கள் கூட இங்கு அமுல்படுத்தப் படவில்லை. குறிப்பாக தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள கூலி விவசாயிகள் வறுமை - வேலையின்மையால் அவதிப்படுகிறார்கள் என்று கிராமப்புற கூலித் தொழிலாளருக்கான தேசிய கமிஷனின் தலைவர் டாக்டர் அனுமந்தராவ், அண்மையில் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்து அறிக்கை வெளியிட்டுள்ளார். இதுதான் திராவிடக் கட்சிகளின் 'பொற்கால' ஆட்சியின் சாதனை! இவர்களுடன் கூட்டு சேர்ந்து ஓட்டுப் பொறுக்கும் 'மார்க்சிஸ்டுகள்' ஆளும் கேரள மாநிலம் தான் நாட்டிலேயே கிராமப்புற வேலையின்மையில் முதலிடம் வகிக்கிறது.



இந்தியாவின் மிகப்பெரிய தரகு ஏகபோக ஓட்டல் தொழில் நிறுவனங்களில் ஒன்று தாஜ் ஓட்டல் நிறுவனம். ஏகபோக முதலாளிகளுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கும் போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசுவின் ஆசியுடன் சில ஆண்டுகளுக்கு முன்பு கல்கத்தாவில் தாஜ் நிறுவனம் ஐந்து நட்சத்திர ஓட்டலை நிறுவியது. இப்போது கேரள போலிக் கம்யூனிஸ்டுகள் இன்னும் ஒருபடி முன்னேறி, திருவனந்தபுரத்தில் கேரள சுற்றுலாத்துறையினால் தொடங்கப்பட்டு இன்னும் முடிக்கப்படாத ஓட்டலை தாஜ் நிறுவனத்துக்கு வாடகைக்குக் கொடுத்து தொழில் நடத்த வரவேற்றுள்ளனர். இதுதவிர காசர்கோடு மாவட்டத்தில் அரசு நிலத்தை தாரை வார்த்து கடற்கரை அருகே ஐந்து நட்சத்திர சுற்றுலாதலம் அமைக்க பேருதவி செய்துள்ளனர். மேலும், கொச்சியில் நட்சத்திர ஓட்டல் கட்ட கேரள தொழில் வளர்ச்சி நிறுவனம் நிதியுதவி செய்து தாஜ் குடும்பத்தை அழைத்துள்ளது. நாற்காலிக்காக புரட்சி பேசும் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் இப்படி தொடர்கிறது முதலாளித்துவ சேவை!

ரஷியாவல் கோர்பியின் ஆட்சியில் முதலாளித்துவம் பகிரங்கமாக அரியணை ஏறிய பிறகு அதன் பொருளாதாரம் நிலை குலைந்து சர்வதேச சந்தையில் ரஷ்ய நாணயமான ரூபிளின் மதிப்பு கிடுகிடுவென சரிந்து செல்லாக் காசாகிவிட்டது. அதாவது ரூபிளின் இன்றைய மதிப்பு ரூ.1.50 தான்! ஆனால் ரூபிளின் செலாவணி மதிப்பு ரூ.21 தான் என்று நிர்ப்பந்தமாக தீர்மானித்து முன்னைப் போலவே நமது நாட்டுடனான வர்த்தகத்தின் மூலம் ரஷ்ய ஏகாதிபத்தியவாதிகள் தொடர்ந்து கொள்ளையடிக்கின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகளும் ரஷ்ய அடிவருடிகளும் இதைத்தான் "சோசலிச சேவை" "உதவி", "நட்பு" என்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

## வளைகுடா விவகாரம்:

# ஈராக்கின் அடாவடித்தனம்! அமெரிக்காவின் ஆதிக்கவெறி!

குவைத் மீது ஈராக் ஆக்கிரமித்துள்ளதைத் தொடர்ந்து மேற்காசியாவில் மீண்டும் போர் மேகங்கள் சூழத் தொடங்கி விட்டன. 1980லிருந்து எட்டாண்டுகளாக நடந்த ஈரான் - ஈராக் போருக்குப் பிறகு சற்றே ஓய்ந்திருந்த பாரசீக வளைகுடா மீண்டும் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டது.

மேற்காசியாவில் பாரசீக வளைகுடாவை ஒட்டியுள்ள சின்னஞ்சிறு அரபு நாடு, குவைத். வடக்கிலும் மேற்கிலும் ஈராக்கினாலும் தெற்கே சௌதி அரேபியாவாலும் சூழப்பட்ட எண்ணெய் வளங்கொழிக்கும் பணக்கார நாடு. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் தொழில் கூட்டோடு எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி கோடிக்கணக்கான செல்வங்களை மேலைநாட்டு வங்கிகளில் குவித்து வைத்துள்ள அரச பரம்பரையினர் ஆட்சி செய்யும் குபேர நாடு. அரபு ஷேக்குகளின் உல்லாச களிவெறியாட்ட வக்கிரங்களுக்கும் சர்வாதிகார அடக்குமுறைக்கும் பேர்போன நாடு.

### அடாவடித்தனமான ஆக்கிரமிப்பு

குபேரபுரியான குவைத்தை அதைவிட பரப்பளவிலும் ராணுவத்திலும் வலிமைமிக்க அதன் அண்டை நாடான ஈராக் இம்மாத துவக்கத்தில் ஆக்கிரமித்துள்ளது. 'எல்லையில் இரு நாடுகளுக்கும் பொதுவாயுள்ள பெட்ரோலிய எண்ணெய் வயல்களிலிருந்து 240 கோடி டாலர் (ஏறத்தாழ 4000 கோடி ரூபாய்) மதிப்புடைய எண்ணெயை திருட்டுத்தனமாக குவைத் உறிஞ்சி விட்டது; எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டது; மேலை நாடுகளுக்காக அபரிமிதமாக எண்ணெய் உற்பத்தி செய்து, அவர்களின் ஆலோசனைப்படி எண்ணெய் விலையை உயர்த்த மறுக்கிறது' என்கிற காரணங்களைக் கூறி குவைத் மீது ஈராக் படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றியது.

ஈராக்கின் அடாவடித்தனமான ஆக்கிரமிப்பை எதிர்கொள்ள முடியாத குவைத்தின் மன்னரும் மந்திரிப் பிரதானிகளும் தப்பியோடி சௌதி அரேபியாவில் தஞ்சம் புகுந்தனர். மன்னரது அரண்மனையையும் மாளிகைகளையும் கைப்பற்றிய ஈராக்கிய ராணுவம், எதிர்த்துப் போரிட்ட குவைத் நாட்டின் சின்னஞ்சிறு படையை அழித்தொழித்தும் அப்பாவி மக்களில் 600 பேரைக் கொன்றொழித்தும் தனது அதிகாரத்தை அடுத்தநாளே நிலைநாட்டியது.

உலகெங்கும் இந்த அநீதியான ஆக்கிரமிப்புக்கு எதிராக கண்டனக் குரல்கள் எழுந்தன. தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தை நியாயப்படுத்த முடியாமல் தனிமைப்பட்டுப் போனது ஈராக். மன்னராட்சிக் கொடுங்கோன்மையை எதிர்த்து ஜனநாயகத்துக்கான போரில் இறங்கிய குவைத் நாட்டின் புரட்சிப் படைகளுக்கு உதவவே இந்த படையெடுப்பை நடத்தியதாகவும், குவைத்தில் தற்காலிக புரட்சி அரசு நிறுவப்பட்டுள்ளதாகவும், விரைவில் தமது படைகளை விலக்கிக் கொள்வதாகவும் நாடகமாடியது.

ஆக்கிரமிப்புப் போரில் இறங்கிய படைகள் உடனடியாக நாடு திரும்பியதாக எங்குமே வரலாறில்லை. அதன்படியே ஈராக்கிய ஆக்கிரமிப்புப் படைகளும் விலக்கிக் கொள்ளப்படவில்லை. குவைத்தின் அண்டைநாடான சௌதி அரேபியா மூலமாக ஏகாதிபத்தியங்கள் தாக்க முயற்சிக்கும் என்பதால், 'குவைத்தின் புரட்சி அரசைக் காப்பதற்காக' மேலும் படைகளைக் குவித்து சௌதி அரேபியாவின் எல்லையில் கொண்டு வந்து நிறுத்தியது, ஈராக்.

### ஏகாதிபத்தியங்களின் முற்றுகை

இதர ஏகாதிபத்தியங்களுடன் சேர்ந்து கண்டனம் தெரிவித்தும், பொருளாதாரத் தடைவிதித்தும், அமெரிக்க வங்கிகளில் குவிந்துள்ள குவைத்தின் சொத்துக்களை ஈராக் கைப்பற்றி விடாமல் முடக்கி வைத்தும், ஈராக் மீது பொருளாதாரத் தடை விதித்தும் அடுத்தடுத்து நடவடிக்கை எடுத்த போதிலும் அசைந்து கொடுக்காத ஈராக்கைக் கண்டு உலகின் போலீசுக்காரனாகிய அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆத்திரமடைந்தது. ''நண்பனோ, எதிரியோ யாராக இருந்தாலும் ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு ஆக்கிரமிப்பதை ஒருக்காலும் ஏற்க முடியாது. அதைவிட ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டில் ஒரு பொம்மையாட்சியை நிறுவுவது அதைவிட மோசமானது'' என்று உலக மகா ஜனநாயகவாதியாக அமெரிக்க அதிபர் புஷ் கொக்கரித்தார்.

ஈராக்கின் ராணுவ சர்வாதிகாரி சதாம் உசேன்.



எனவே ஈராக்கின் அச்சுறுத்தலை முறியடித்து, பாரசீக வளைகுடாவில் பதற்றத்தைத் தணித்து, அரபு நாடுகளின் சுதந்திரத்தைக் கட்டிக் காக்கும் 'புனிதக் கடமையை' நிறைவேற்ற சௌதி அரேபியாவைத் தளமாக்கிக் கொண்டு ஈராக்குக்கு எதிராக 25000 துருப்புகளுடன் அமெரிக்க ராணுவம் முற்றுகையிட்டுள்ளது. இதுதவிர நவீன ஏவுகணைகள், போர் விமானங்களைக் குவித்தும், போர்க் கப்பல்களைக் கொண்டு பாரசீக வளைகுடாவை முற்றுகையிட்டும், வியட்நாம் போருக்கு அடுத்து மிகப்பெருமளவு துருப்புக்களுடனும் ஆயுதங்களுடனும் போருக்கான முழுத்தயாரிப்பில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

அமெரிக்காவின் அதிரடி நடவடிக்கைக்குத் துணையாக பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களும் தமது கடற்படையை பாரசீக வளைகுடாவில் குவித்துள்ளன. முன்பெல்லாம் இப்படி எங்காவது ஆக்கிரமிப்பு - ஆட்சிக்கவிழ்ப்பு நடந்தால் ரஷியா ஒரு பக்கமும் அமெரிக்கா மறுபக்கமுமாக நின்று கொண்டு தமது ஆதரவு சக்திகளை உசுப்பிவிட்டு நிழல் யுத்தத்தை நடத்துவது வழக்கம். ஆனால் இப்போது ரஷிய ஏகாதிபத்தியமும் அமெரிக்காவோடு கூடிக் குலாவிக் கொண்டு அதன் முற்றுகை நடவடிக்கைகளை ஆதரிக்கிறது. உலகெங்கும் ஆக்கிரமிப்பு, ஆட்சிக் கவிழ்ப்பு பொம்மையாட்சியை நிறுவுவது எனும் ஆதிக்க நடவடிக்கைகளில் அன்றாடம் ஈடுபட்டு வரும் ஏகாதிபத்தியங்கள் ஈராக்கின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஜனநாயக வேஷங்கட்டிக் கொண்டு நடவடிக்கையில் இறங்குவது ஏன்? வளைகுடா நாடுகளின் சுதந்திரத்திற்காக ஏகாதிபத்தியங்கள் அலாதி அக்கறை காட்டுவது ஏன்?

அமெரிக்க ஐரோப்பிய கண்டங்களுக்கும் ஆசிய, ஆப்பிரிக்க கண்டங்களுக்கும் நேர்வழி கடல் தடமான சூயஸ்கால்வாய் மேற்காசியாவில்தான் உள்ளது. மேலும் இந்த வளைகுடா பிராந்தியம் எண்ணெய் மற்றும் எரிவாயு செல்வத்தின் மிகவும் வளமான பகுதியாகும். மேற்கு ஐரோப்பிய கண்டத்தின் மூன்றில் ஒரு பங்கு எண்ணெய் தேவையையும், ஜப்பானின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் தேவையையும் வளைகுடா நாடுகள்தான் பூர்த்தி செய்கின்றன.

எனவே ஆதிக்க வல்லரசுகளுக்கு மேற்காசியா யுத்ததந்திர ரீதியில் கேந்திரமான பகுதியாகும். அமெரிக்காவும் ரஷியாவும் மேற்காசியாவைத் தமது காலடியில் கொண்டு வர மேற்கொண்ட சதிகளும், நாய்ச் சண்டைகளும் கணக்கற்றவை. இவ்விரு வல்லரசுகளுள் ஆதிக்கத்திற்கு எதிராக உறுதியாக நின்ற ஈரானைத் தாக்கி அழிக்க ரஷிய, அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் நடத்திய நேரடி மறைமுகத் தாக்குதல் ஏராளம். தமது ஆதிக்கத்துக்குத் தடையாய் நிற்கும் எவரையும் அழித்தொழித்து அடிமைப்படுத்தும் ஏகாதிபத்தியங்கள், அதேவழியில்



படிப்பகம்

www.padippakam.com

இன்று ஓரணியாய் நின்று ஈராக்கை மிரட்டிப் பணிய வைக்க முயற்சிக்கின்றன.

**ஈராக்கின் பிராந்திய மேலாதிக்க வெறி**

இத்தனைக்கும் ஈராக் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடல்ல. அமெரிக்க - ரஷிய ஏகாதிபத்தியங்களின் நம்பகமான கூட்டாளி தான். 1980 முதல் எட்டாண்டுகளாக நடந்த ஈரான் - ஈராக் போரின் போது ஈராக்கை ஆதரித்து ஆயுத உதவி செய்து ராணுவ ரீதியில் வலுவான சக்தியாக மாற்றியது இதே ஏகாதிபத்தியங்கள் தான். இந்தப் போரினால் ஏற்பட்ட இழப்பை ஈராக்கின் ராணுவ சர்வாதிகாரி சதாம் உசைனால் ஈடு செய்ய முடியவில்லை. 8000 கோடி டாலர் (ஏறத்தாழ 1,30,000 கோடி ரூபாய்) கடன் சுமையால் ஈராக் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. தேசியவெறி - போர் வெறியூட்டி நாட்டு மக்களில் ஐந்தில் ஒரு பங்கினரை படைவீரர்களாக்கியதாலும், பொருளாதாரத்தையே ராணுவமயமாக்கியதாலும் நெருக்கடியும் கடன் சுமையும் பெருகி சதாம் உசைனின் சர்வாதிகார ஆட்சியே ஆட்டங் கண்டு வருகிறது.




தமது உள்நாட்டு நெருக்கடியின் சுமையை வேறுநாட்டின் மீது தள்ளிவிடவும், மீண்டும் போர்வெறி தேசிய வெறியூட்டி தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளவும் ஆக்கிரமிப்புப் போரில் இறங்குவதைத் தவிர சர்வாதிகாரி சதாம் உசைனுக்கு வேறுவழி தெரியவில்லை. எனவே ஜூலை இரண்டாவது வாரத்தில் குவைத் மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு எதிராக குற்றம்சாட்டி போர்வெறிப் பிரச்சாரத்தை உசைன் துவக்கினார் அதைத் தொடர்ந்து ஜூலை 24-ந் தேதியன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் ஐக்கிய அரபுக் குடியரசு அருகே தனது கப்பற் படையை நிறுத்தி ஈராக்கை எச்சரித்தது. அடுத்த நாளே ஈராக் அதிபர் ''இந்த மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம்'' என்று கொக்கரித்தார்.

ஆகஸ்ட் முதல் நாளன்று குவைத்தை ஆக்கிரமித்து, ஒரு வாரத்திலேயே குவைத்தை ஈராக்குடன் இணைத்து விட்டதாக அறிவித்து, ஏகாதிபத்தியங்களின் மிரட்டலை முறியடிக்க, சௌதி அரேபியா எல்லையில் சதாம் உசைன் தனது படைகளைக் கொண்டு போய் குவித்துள்ளார். ''காலனியாதிக்கவாதிகள் பிரித்து வைத்த எல்லைகளைப் பிடுங்கி எறிந்து அரபு மக்களின் ஒற்றுமையைச் சாதிக்கவே இந்த நடவடிக்கை'' என்று ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியாக இன்று நாடகமாடுகிறார். சர்வாதிகாரி உசைனின் நடவடிக்கைகளை அடிமுட்டாள்தனமானதாக, கோமாளித்தனமானதாகக் கருதி ஒதுக்கிவிட முடியாது. உண்மையில், ராணுவ ரீதியில் பலம் வாய்ந்த ஈராக், பிராந்திய மேலாதிக்க வெறிபிடித்து மேற்கொள்ளும் நடவடிக்கையே இது.

லிபியாவின் சர்வாதிகாரி கடாபி, சிறிய அண்டை நாடுகளான சாட், சூடான் முதலானவற்றின் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்ததைப் போல, சின்னஞ்சிறு அரபு நாடுகளை ஆக்கிரமித்து பிராந்திய மேலாதிக்கம் செய்வதற்கான முன்னோட்டமாகத் தான் ஈராக் குவைத்தை ஆக்கிரமித்துள்ளது.

அடுத்ததாக பஹ்ரைன், ஓமன், மஸ்கட் முதலான சிறிய நாடுகளை ஈராக் அடிமைப்படுத்தி மேலாதிக்கம் செய்யுமோ என்ற பீதியில்தான் இப்போது ஏகாதிபத்தியங்கள் சௌதி அரேபியாவில் முற்றுகையிட்டு மிரட்டுகின்றன.

குவைத்தை ஈராக் விழுங்கிய விவகாரம் இன்று அவர்களுக்கு இரண்டாம்பட்ச விஷயமாகிவிட்டது. ஐ.நா. சபையில் கண்டனத் தீர்மானமும் பொருளாதாரத் தடையும் தற்போதைக்குப் போதுமெனக் கருதுகிறார்கள். குவைத்தை விட்டுக் கொடுத்து இதர சிறிய அரபு நாடுகளைக் காத்துக் கொள்வதில்தான் இப்போது குறியாய் இருக்கிறார்கள். மேற்காசியாவில் அவர்கள் உருவாக்கிய பேட்டை ரௌடியான இஸ்ரேலுக்குப் போட்டியாக இப்போது ஈராக் துணைவல்லரசாக உருப்பெற்று ஆட்டம் போடுவதைக் கண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கிறார்கள். நேரடியாக எதிர்த் தாக்குதல் தொடுத்தால் போர்வெறி பிடித்த ஈராக், கொணாரம் போட்டு எருமை கூட்டத்தில் பாய்ந்ததைப் போல இதர அரபு நாடுகளைத் தாக்கினால் அதனால் பேரழிவு ஏற்பட்டு, ஏகாதிபத்தியங்களின் பொருளாதாரமே பாதிக்கப்படும் எனவே மிரட்டிப் பணிய வைப்பது, தற்காலிகமாக விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்துவது, சதாம் உசைனின் ஆட்சியைக் கவிழ்க்க ரகசிய சதிகளில் இறங்குவது முதலானவற்றில் ஏகாதிபத்தியங்கள் இறங்கியுள்ளன.

**மீண்டும் போர் மேகங்கள்**

ஈராக்கின் அடாவடித்தனமான ஆக்கிரமிப்பினாலும் ஏகாதிபத்தியங்களின் முற்றுகையாலும் அது அமெரிக்கா நேரடியாகத் தலையிடும் யுத்தமாக வெடிக்கும் பேரபாயத்தில் உள்ளது. ஏற்கனவே ஈரான் மீது போர் தொடுத்தபோது ரசாயன நச்சு வாயுவைச் செலுத்தி ஆயிரக்கணக்கான ஈரானியாகளை ஈராக் கொன்றொழித்தது. மறுபுறம் அணுகுண்டுகளை வைத்துள்ள அமெரிக்க அடிவருடியான இஸ்ரேல் எந்நேரமும் ஈராக்கை தாக்கலாம். இத்தகையதொரு பேரழிவு ஏற்படுமோ என்ற பீதியில் பாலைவனப் புயலில் சிக்கிய ஈச்ச மரத்தைப் போல அரபு உலகம் தத்தளிக்கிறது.

மேற்காசிய அடியாட்படையான இஸ்ரேலைப் பயன்படுத்திக் கொண்டு அரபு நாடுகளைக் கூறுபோட்டு மேலாதிக்கம் செலுத்தி வந்த மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் இப்போது, ஈராக்கின் ஆக்கிரமிப்பைச் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் அரபு நாடுகளைப் பிளவுபடுத்தி ஆதிக்கம் செய்யத் துடிக்கின்றன. ஆனால் ஏகாதிபத்தியங்களின் முற்றுகைப் போருக்கு எதிர்ப்பார்த்த அளவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. ஈராக்கிற்கு ஆதரவாகவும், அமெரிக்காவின் தலையீட்டுக்கு எதிராகவும் அரபு நாடுகளின் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் பெருகத் தொடங்கிவிட்டன. மறுபுறம், இதர ஏகாதிபத்தியங்களும் அமெரிக்காவின் நேரடித் தலையீட்டுக்கு தயக்கம் காட்டுகின்றன

எனவே ஈராக்கை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இறங்கி, அதன் மூலம் நேரடியாகத் தலையிடுவதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இதற்கிடையே, குவைத்திலிருந்து ஈராக் வெளியேற வேண்டுமானால், பாலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேலும், லெபனானிலிருந்து அமெரிக்க ஆரதவு சிரியா படைகளும் வெளியேற வேண்டுமென நிபந்தனை விதித்து சதாம் உசைன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகமாடுகிறார். அவரது இப்புதிய நிபந்தனைக்கு அரபு நாடுகளிடையே கணிசமான ஆதரவும் உள்ளது. தோற்றத்தில் முற்போக்கானதாகத் தெரிந்தாலும் இத்தீர்வு ஆதிக்க வெறியர்களுக்குச் சாதகமானதுதான்! ஏனெனில் ஈராக்கோ அல்லது அமெரிக்க அடிவருடி இஸ்ரேலோ தாங்கள் ஆக்கிரமித்த பகுதியிலிருந்து ஒருக்காலும் விலகப் போவதில்லை. நீயும் ஆதிக்கவாதி; நானும் ஆதிக்கவாதி! என்னை எதிர்த்தால் உன் யோக்கியதையை அம்பலப்படுத்துவேன் என்று ஒருவரையொருவர் மிரட்டிப் பணியவைக்கும் வழக்கமான தந்திரம்தான் இது!

இந்நிலையில் எது நீதியான் யுத்தம், எது அநீதியானது என்று தீர்மானிக்கும் உரிமை அரபு மக்களுக்கு இல்லை. தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமையோ சுதந்திரமோ இல்லாமல் மன்னராட்சிக் கொடுங்கோன்மையோ அல்லது ராணுவ சர்வாதிகார ஆட்சியோதான் அரபு நாடுகளில் நிலவுகிறது. இஸ்லாத்தின் பெயராலேயே இக்கொடுங்கோலர்கள் தமது நோக்கங்களைச் சாதித்துக் கொண்டு மக்களை அடிமைப்படுத்தி வருகிறார்கள். எனவே இருவேறு ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக, தமது வாழ்வைத் தீர்மானிக்கும் உரிமையை வளைகுடா மக்கள் பறித்தெடுக்க வேண்டும். தத்தமது நாடுகளின் மன்னர் பரம்பரையினரையும் ராணுவ சர்வாதிகாரிகளையும் அவர்களின் எஜமானர்களான ஏகாதிபத்தியங்களையும் தூக்கியெறிந்து, தேசிய சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் நிலை நாட்ட, சர்வதேச பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

■ மனோகரன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சா[illegible], எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

R.N. 42648/85
Regd.No.TN/MS(S) 344
www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா



இதோ வெறியோடு ஓங்கும் லத்தி அடியிலிருந்து தலையாவது தப்பாதா என பரிதாபமாக காட்சியளிக்கிறாரே யார் இவர்? இவர் சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்தவர். ஹரிஜனங்கள் மீதான அடக்குமுறை மற்றும் பெண்கள் மீதான அநீதிகள் உ.பி. மாநிலத்தில் அதிகரித்து வருவதை எதிர்த்து சட்டமன்றத்திற்கு முன்பு போராடினர் என்பதற்காகத்தான் இவ்வளவு கொடூரமாக தாக்குகிறது போலீசுக் கும்பல்.

அண்மையில் நடந்த ஆக்ரா சாதிக் கலவரத்தில் 'தாழ்த்தப்பட்ட' ஜாதவ் சாதியினர் மீது மேல்சாதிக்காரர்களான 'ஜாட்' பிரிவினரும் அரசும் கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறைகள் மற்றும் மொராதாபாத் அருகிலுள்ள கஜ்ராலாவில் உள்ள ஆசிரமத்தில் கன்னியாஸ்திரீகள் இருவர் ரௌடிக் கும்பலொன்றால் கற்பழிக்கப்பட்ட சம்பவம், இவையே உ.பி.யில் அதிகரித்து வரும் இத்தகைய கொடுமைகளுக்கு சான்றாக அமைகின்றன. குவய்சர்பெக் என்ற இடத்திலிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்தவர்கள் ஊர்வலமாகச் சென்று சட்டமன்றத்திற்குமுன் கூடி முதல்வரை சந்தித்து மனு ஒன்றைக் கொடுக்க காத்திருந்தனர். அப்பொழுது சிலர் தடை செய்யப்பட்ட சட்டமன்ற பகுதிக்குள் நுழைந்ததால் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசி கூட்டத்தில் புகுந்து அனைவரையும் வெறித்தனமாக தாக்கியது போலீசுக் கும்பல்.

இதோ மேற்கு வங்கத்தில் ('மார்க்சிஸ்டு'களின் கூட்டணி மந்திரி சபையில் சி.பி.ஐ. அங்கம் வகிக்கிறது.) பேருந்து கட்டண உயர்வை கண்டித்து போராடும் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த பெண்களை சிறிதும் கூச்சமின்றி அடித்து போலீசு இழுத்துச் செல்வதைப் பாருங்கள். கல்கத்தாவின் பாமர மக்களுக்கு குறைந்த செலவில் பயணம் செய்வதற்கேற்ற வாகனமாக இருப்பது ட்ராம் வண்டிகளும் பேருந்துகளும்தான்! இவற்றின் கட்டணத்தை 100% சதவிகிதம் அதாவது ட்ராம் வண்டிகளின் 2ம் வகுப்பு கட்டணம் 35 பைசாவிலிருந்து 70 பைசாவாகவும், பேருந்துகளின் கட்டணம் 50 பைசாவிலிருந்து 1 ரூபாயாகவும் உயர்த்தியிருக்கிறது மேற்கு வங்க அரசு. இதை எதிர்த்து கல்கத்தா நகரின் முக்கிய இடமான ஹாவ்ரா பாலத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தியது காங்கிரஸ் கட்சி. அப்பொழுது போராடிய பெண்களை அடித்து இழுத்துச் சென்று சிறையிலடைத்தது கல்கத்தா நகர போலீசு.

பஸ் கட்டண உயர்வு, பெண்கள் மீது நடந்த அநீதிகளை எதிர்த்து போராடும் எதிர்க்கட்சியினரை ஒடுக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள் தாங்கள் எதிர்கட்சியாக உள்ள மாநிலங்களில் அதே வகை கோரிக்கைகளுக்காக போராடுகிறார்கள். ஆளுங்கட்சியாய் உள்ள மாநிலத்தில் மக்கள் விரோத அடக்குமுறை ஆட்சி. எதிர்க்கட்சியாய் உள்ள மாநிலத்தில் ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்துடன் மக்கள் கோரிக்கைகளுக்கான போராட்டம். வாய்ப்பந்தல் போட்டு மக்களை ஏமாற்றி பதவி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் இப்பித்தலாட்டக்காரர்களைத் தோலுரிப்பது எப்போது?

படிப்பகம்